நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்

**போம்!**

நாயோடு வால்போகும் நள்ளிரவிற்கண்ட
பேயோடு போகும் பிணநாற்றம்- ஓயா
நதியோடு நாலும்போம் நம்நாட்டின் தீர்வுப்
பொதியோடு சமாதானம் போம்!

-ஈழமோகம்

இதழ்-175 ஜூலை 08- ஜூலை 21, 1999 விலை 10.00

# சமாதான யுத்தத்தின் 'பயங்கரவாதிகள்'!



புகைப்படம் :ககன் யாப்பா கருணாரத்ன

கண்களில் நீர் கொட்ட குண்டு துளைக்கப்பட்ட கணவனின் வயிற்றைப் பார்த்துக் கதறியழும் இந்தப் பெண்ணின் துயரத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

ஆனால் இந்தத் துயரத்திற்குக் காரணமான சம்பவத்திற்கும், வயிற்றிலே குண்டு துளைத்த வேதனையுடன் அழுது கதறும் மனைவியை விட்டுப் பிரிந்த இந்த அப்பாவி விவசாயிக்கும், எந்தச் சம்பந்தமுமில்லை.

புலிகளின் தாக்குதலுக்குப் பழிவாங்குவதற்காக இராணுவத்தினர் நடாத்திய நரவேட்டையின் போது அநியாயமாகக் கொல்லப்படும் பலநூறு அப்பாவி மக்களுள் ஒருவர் தான் இந்த விவசாயி.

இவர் மட்டுமல்ல, அன்றைய தினம் இன்னுமொரு பெண் விவசாயியும் பலியாகிப் போனார்.

இது நடந்தது ஜூலை நான்காம் திகதி

வாழைச்சேனை கிரான் பாலத்தடியில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் காலை 8 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய சினைப்பர் தாக்குதலின் போது இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து ஆவேசங் கொண்ட அம்முகாம் இராணுவத்தினர் கிரான்துறைப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த விவசாயிகளின் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். விளைவு இவரும் இன்னொரு விவசாயியும் கொல்லப்

-20

நன்றி - நூலகத்திட்டம்



# கடலில் விழுந்ததா? கடத்தப்பட்டதா?

லயன் எயார் விமானம் கடலில் விழுந்ததென்றால் உடைமைகள் நனையாமல் கிடைத்தது எப்படி?

இது கடத்தல் முயற்சியா என சந்தேகம்!

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 29ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து ரத்மலானைக்கு புறப்பட்ட லயன்எயார் நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம் கடலில் விழுந்ததன் பின் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் 44 பொருட்கள் பம்பலப்பிட்டி பொலிஸாரால் கடந்த சில தினங்களுக்கு முன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதனை அடையாளம் காண வந்த வவுனியாவில் வசிக்கும் திருமதி.சிவகுமார் ஜெயலஷ்மி பம்பலப்பிட்டி பொலிஸில் வைத்து "லயன் எயார்" விமானம் கடலில் விழுந்ததென்றால், இந்தப் பொருட்களும் கடலில் இருந்தல்லவா பெறப்பட்டிருக்க வேண்டும். அப்படியென்றால் எப்படி இந்தக் கைக்கடிகாரம், கடிதம் போன்றன நனையாமல், அப்படியே கிடைத்திருக்கின்றன. அப்படியென்றால் அந்த-விமானம் கடலில் விழுந்திருக்க நியாயம் இல்லை அல்லவா "' எனத் தெரிவித்திருக்கிறார்.

யாழ்பாணத்தைச் சேர்ந்த ஜெயலஷ்மி, அவரது கணவன், இரு பிள்ளைகளுடன் 94இல் இந்தியாவிலிருந்து ' வந்து வவுனியாவில் வசிக்கத் தொடங்கினர். லயன் எயார் விமானத்தில் இவரது கணவனும் பிரயாணித்திருந்ததால் பொருட்களை அடையாளம் காண அவர் பம்பலப்பிட்டி பொலிசுக்கு வந்திருந்த-போதே இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தமது 6 வயது மகள் யாழ்ப்பாணத்தில் தனது தாயின் வீட்டில் இருந்ததால் தனது கணவன் மகளைப் பார்க்க 1998 செப்டம்பர் 12 அன்று யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்ததாகவும், அதன் பின்னர் 28ஆம் திகதியன்று தான் 29ஆம் திகதி விமானத்தின் மூலம் வருவதாக தகவல் அனுப்பியிருக்கிறார். தான் அவரை எதிர்பார்த்து 29ஆம் திகதி ரத்மலானை விமான நிலையத்துக்குப் போய் காத்திருந்ததாகவும், அன்றைய தினம் மத்தியானம் 1.40க்கு யாழ்ப்பாணத்திலிருந்து விமானம் புறப்பட்டிருக்கிறது. ஆனால் விமானம் கடலில் விழுந்துவிட்டதாக விமான நிலையத்தில் வைத்து தனக்கு அறிவிக்கப்-பட்டதாகவும், அப்படி கடலில் விழுந்ததென்றால் எப்படி இப்பொருட்கள் நனையாமல் கிடைத்திருக்க முடியுமென்றும் இவர் கேள்வி எழுப்புகிறார். கடந்த யூன் 25இலிருந்து 27 வரையான நாட்களில் மன்னார் பொலிஸ் அதிகாரிகளின் ஏற்பாட்டில் பம்பலப்பிட்டி பொலிஸில் இந்த பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த போது நூறுக்கும் மேற்பட்டோர் அதனைப் பார்வையிட வந்திருந்ததாகவும், அவர்களில் பலரதும் கருத்தும் ஜெயலஷ்மியின் கருத்தை-யொத்ததாகவே இருந்ததெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மலையக வேலை நிறுத்தங்கள் பற்றி..

மலையகத்தில் தோட்டங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டதன் பின்னர் அங்கு தொழிலாளர்களின் நிலைமைகள் கவலைக்கிடமான முறையில் இருப்பதும் அடிப்படையான உரிமைகளைக் கோரி நடத்தப்படும் வேலைநிறுத்தங்களும் மோசமான நசுக்குதலின் மூலமாகவோ அல்லது, தொழிற்சங்கங்களின் காட்டிக்கொடுப்பின் மூலமாகவோ முறியடிக்கப்பட்டு வருவதும் தெரியாத ஒன்றல்ல. கடந்த பத்தாண்டு காலமாக மலையகத்தில் நடத்தப்பட்டுவந்த வேலைநிறுத்தங்கள் பற்றியும் அதில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றியும் தொழிலாளர் திணைக்களத்தின் அறிக்கையொன்றின் தரவுகள் கீழே தரப்படுகிறது.

| வருடம் | வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1988 | 54 | 14843 |
| 1989 | 45 | 15072 |
| 1990 | 108 | 63751 |
| 1991 | 111 | 56856 |
| 1992 | 86 | 47712 |
| 1993 | 26 | 4559 |
| 1994 | 89 | 27575 |
| 1995 | 94 | 29518 |
| 1996 | 137 | 50982 |
| 1997 | 78 | 27383 |
| 1998 | 63 | 15468 |

# நடக்காது என்பார் நடந்து விடும்!

கடந்த 19.6.99 அன்று இராஜேந்திரம் இராசசேகரன் என்ற மீன்வியாபாரி மாகியப்பிட்டி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கை, கால் கட்டப்பட்டு கண்-களும் கட்டப்பட்ட நிலையில் இராணுவத்-தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். முழங்கால், முழங்கை, நெற்றி, கால் பெரு-விரல் என்பன சுத்தியலால் தாக்கப்-பட்டுள்ளன. அத்துடன் இவரது காலில் சப்-பாத்தால் மிதித்துள்ளனர். இதனை அடுத்து அவர் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தார். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி 51வது படையணி அதிகாரியுடன் தொடர்பு கொண்டதை அடுத்து பிரிகேடியர் மாரம்பே மீன்-வியாபாரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுடன் 1000 ரூபா நட்ட ஈடும் வழங்கியுள்ளார். இராணுவத்தினர் பொது மக்களைத் தாக்குவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது எனவும் பிரிகேடியர் மாரம்பே கூறியுள்ளார். இதன் பின்னர் 1.7.99 அன்று சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்ற மோதலை அடுத்து சிவசுப்பையா சிங்கராசா (23), செல்லப்பா வசந்த ரூபன் (27), சரவணமுத்து கோண-லிங்கம் (33), மகேந்திரன் மதனரூபன் (24), தம்பு அப்புத்துரை (27), வசந்தநாதன் (19) என்ற பத்துப் பேர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனும-திக்கப்பட்டனர். இதனையடுத்து 52வது படையணி இராணுவத் தளபதி கேர்ணல் சமரவீர இரு இராணுவ வீரர்களைக் கைது செய்ததுடன் இராணுவத்தின் சார்பிலும் வடபகுதி இராணுவத்தளபதி லொகான் குணவர்த்தன சார்பிலும் மன்னிப்புக் கோருவதாகவும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாது என்றும் கூறினார். ஆரம்பத்தில் சுசந்த மென்டிஸ், பின்னர், மாரம்பே, இப்போது சமரவீர. முன்பு நாட்டில் ஏதாவது வன்முறைகள் இடம்பெற்றால் அரசியல்வாதிகள் இவ்வாறு அறிக்கை விடுவது வழக்கம். இப்போது இராணுவத்தளபதிகள் அறிக்கை விடுகிறார்கள். இனி அரசியல்வாதிகள் தோற்றார்கள் போங்கள்.

# ஒரு இராணுவ அதிகாரியின் வாக்குமூலம்!

செம்மணி புதை குழி விவகாரம் இராணுவத்தின் நன்னடைத்தைக்கு களங்கத்தை ஏற்படுத்தவில்லையென யாழ் மாவட்ட இராணுவத்தளபதி லொஹான் குணவர்த்தன கூறியதாக டெய்லி நியூஸ் 24.06.99 செய்தி வெளியிட்டிருந்தது. அப்படியானால், இராணுவம் கொலை செய்வதும், கொன்று குவிப்பம் சகஜம் என்கிறாரா இவர். அல்லது கொல்லப்-பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் அது பேரினவாதிகள் மத்தியில் வரவேற்பை ஏற்படுத்தியிருக்கும் என்கிறாரா? அத்துடன் யாழ்ப்பாண மக்களுக்கு மேலும் மருத்துவப் போக்குவரத்து தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் புலிகளை ஆதரிக்க மாட்டார்கள் எனவும் மேலும் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் கணணிகளைக் கூடப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதென லொகான் கூறியுள்ளார். ஆனால், யாழ்ப்-பாணத்திற்கு மொடம் தடை விதிக்கப்-பட்டுள்ளது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. ஆயினும் யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் வழமைக்கு திரும்ப-வில்லையென்பதை மட்டும் அவர் ஒப்புக்-கொண்டுள் ளார்.

# ஆளுநரின் நகைச்சுவை!

வடகிழக்கு மாகாண ஆளுநர் புலிகள் அனுமதியளித்தால், வன்னியிலும் ஆளுநர் இடம்பெயர் சேவையை நடாத்தத் தயார் எனக் கூறியுள்ளார். ஆனால், அண்மையில் வட கிழக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணம் வந்திருந்த போது அரச அதிகாரிகளால் கூட அவரைச் சந்திக்க முடியவில்லை. கச்சேரியைச் சுற்றிப் பலத்த காவல் போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் இது ஆளுநர் இடம்பெயர் சேவை தானா? என்று ஆளுநரிடம் கேட்டதிற்கு 'இல்லை போக்கு-வரத்துப் பிரச்சினை காரணமாக கொழும்-பிலிருந்து தேவையானவர்களை அழைத்து வர முடியவில்லையெனப் பதிலளித்தார். யாழ்ப்பாணத்தை விட வன்னி பாதுகாப்பான பிரதேசம் என ஆளுநர் நினைக்கிறாரோ...? வன்னிக்கான உணவு விநியோகப் பாதையே இன்னும் சீராக வில்லை. சீராக்க முடியவில்லை.

ஆளுநர் இடம்பெயர் சேவையை நடாத்துவது பற்றி பேசுவது நகைச்சுவையாக இல்லையா?

# கோவிந்தன் அறக்கட்டளை!




1939 முல்லோயாத் தோட்டப் போராட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி இறந்த முதலாவது தோட்டத் தொழிலாளியான கோவிந்தன் அவர்களை நினைவு கூரும் முகமாக கோவிந்தன் அறக் கட்டளை நிறுவப்பட்-டுள்ளது. தொழிலாளர்களுக்கு முதல் முறையாக சம்பள உயர்வும், தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் இந்தப் போராட்டத்தில் கிடைக்கப் பெற்றதால் வரலாற்றில் இப்போராட்டம் கோவிந்தனின் மணரமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது எனலாம். இந்த அடிப்படையில் கோவி-ந்தன் அவர்களை நினைவு கூருமுகமாக அவர் இறந்த இடத்தில் நினைவுத் தூபி ஒன்றை அமைத்து அறக்கட்டளையை ஏற்படுத்த கோவிந்தன் நினைவுக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வறக்-கட்டளைக்கு பங்களிக்க விரும்புகிறவர்கள் கொள்ளுப்பிட்டி கொமர்சல் வங்கியில் 8118544601 என்ற கணக்கு இலக்கத்தில் பணத்தை வைப்புச் செய்யலாம்.

இந்நினைவு குழுவினரால் முல்லோயா தோட்டப் போராட்டம் என்ற நினைவு இதழும் வெளியிடப்பட்டுள்ளது. இது சிங்-கள, தமிழ் மொழியில் அச்சிடப்பட்டுள்ளது.

கோவிந்தன் நினைவுக்குழுவில் செயலாளர்களாக மேர்ஜ் நிறுவனத்தின் செயலாளரான சுனந்த தேசப்பிரியவும், மலையக மக்கள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஏ. லோரன்சும் கடமை-யாற்றுகின்றனர்.

# வரலாறு படும்பாடு!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்-தாபனத்தின் யாழ்ப்பாண ஒலிபரப்புச் சேவை யாழ்.பாடசாலை மாணவ மாணவிகளிடையே ஒரு வினாடி வினா புதிர்ப்போட்டியை நடாத்தியது. இப்போட்டிக்கு ஜோர்ஜ் என்பவர் நடுவராகக் கடமையாற்றினார். இதில் யாழ். இந்துக்கல்லூரிக்கும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் நடைபெற்ற போட்டியின் போது அறிவிப்பாளர் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலை எழுதியவர் யார் என்று கேட்டார். அதற்கு மாணவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் என்றவுடனேயே அறிவிப்பாளரும் ஆம் பேராசிரியர் சிற்றம்பலம் என்பது சரியான விடை என்றார். பேராசிரியர் சிற்றம்பலம் எழுதியது யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாறு, பண்டைய தமிழகம் என்பன. இந்த நூல்களும் புத்திஜீவிகள் பலரின் கடுமையான கண்டங்களுக்கு உள்ளாகியவை என்பது வேறு விடயம். அன்டன் பாலசிங்கம் ஈழநாதம் பத்திரிகையில் கடுமையான விமர்சனமொன்றை எழுதினார். அ.சி. உதயகுமார் இபின்பதுதாவின் பயணக்-குறிப்புக்கள் என்ற தலைப்பில் அன்டன் பாலசிங்கம் சுட்டிக்காட்டத் தவறிய விடயங்களையும், சுட்டிக் காட்டி ஒரு நூலை வெளியிட்டிருந்தார். யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற தலைப்பில் நூல்களை எழுதியவர்கள் இராசநாயகம் முதலியார், முதலியார் முத்துத்தம்பி, மயில்வாகனம் போன்றோர். இதற்கு முதல் வாரம் நடைபெற்ற வினாடி வினா போட்டியில் அறிவிப்பாளர் கேட்டார் I.C.R.C.இன் விரிவாக்கம் என்ன என்றார்? அப்போது ஒரு மாணவன் (International Committee of the Red Cross) என்றார். உடனே அறிவிப்பாளர் அது பிழையான விடையெனக் கூறி (International Committee for the Red Cross) என்பதே சரியான விடையென்றார். இந்த அறிவிப்பாளர் I.C.R.C.இன் கலண்டர் டயரிகளையாவது பார்த்து விட்டு வந்து போட்டி நடத்தியிருக்கலாம். அத்துடன் வரலாற்று நூல்களின் பெயர்களையும், அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயரையும், (புத்தகத்தில் முன் அட்டையையாவது) பார்த்து விட்டு மாணவர்களின் அறிவைப் பரீட்சிப்பது நல்லது. மாணவர்களின் பொது அறிவுத்திறனை வளர்ப்பதாகக் கூறி பிழையான தகவல்களை மாணவர்களுக்கு வழங்குவதனை இனியாவது அந்த அறிவிப்பாளர் நிறுத்துவாரா?

# தாக்குதல்கள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணத்தில் புலிகளின் தாக்குதல் அதிகாரித்துள்ளன. கடந்த 1.7.99 அன்று சாவகச்சேரி நுணாவிலில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது. 2.7.99 அன்று இருபாலையில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது. 3.7.99 அன்று உரும்பிராயில் இராணுவ அதிகாரியொருவர் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டார். 4.7.99அன்று பரமேஸ்வரச் சந்தியில் குண்டுவெடிப்பு ஒன்று இடம்பெற்றது. அத்துடன் பஸ்வண்டி ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது. 5.7.99 அன்று மானிப்பாயில் கிளைமோர் இடம் பெற்றுள்ளது.

# நடுநிலை நாயகர்கள்!

யாழ்ப்பாணத்துக்கு பத்திரிகை-யாளர் விஜயம் செய்வது புதிய விடயமல்ல. புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பா-ணம் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள பத்திரிகையாளர்களில் பெரும்பாலானோர் இராணுவ வாகனங்களிலேயே இராணுவப்-பாதுகாப்புடன் (அமைச்சர்கள் விஜயம் செய்வது போல்) விஜயம் செய்துள்ளனர். ஆரம்பத்தில் சுயாதீனப் பத்திரிகையாளர்களான மனோ ரஞ்சன், இந்திய டுடே பத்திரிகையின் தமிழ் பதிப்பின் ஆசிரியர் வாஸந்தி ஆகியோர் இவ்வாறு விஜயம் செய்திருந்தனர். இந்த வரிசையில் இப்போது சண்டே ரைம்ஸ் இராணுவ விமர்சகரான விருதுகள் பல பெற்ற இக்பால் அத்தாஸ்வந்து சென்றுள்-ளார். இராணுவத்தினரால் அடிக்கடி அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாகக் கூறப்படும் இவர் இராணுவ வாகனத்தில் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்வையிட்டார். நடுநிலைப் பத்திரிகையாளர், துணிச்சலான பத்திரிகையாளர் போன்ற பல பாராட்டுக்-களையும் விருதுகளையும் பெற்ற அத்தாஸ் பூரண இராணுவ பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்தைப் பார்வையிட்டிருந்தார். சரி, இவர்களின் எழுத்துக்கள் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் என்றும் நடுநிலையாக இருந்து அம்மக்கள் படும் இன்னல்களை வெளிப்படுததும் என்று இதற்குப்பின்னரும் நம்புபவர்களை என்ன செய்யலாம்?

நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா வைத்தியசாலை அகோரம் :

# வைத்தியசாலை ஊழியர் ஊசி போட்டார்! பெண்மணி காலை இழந்தார்!!

வவுனியா ஆதார வைத்தியசாலையில் கவனயீனமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு காரணமாக இருதய நோயுள்ள தமது மனைவியின் வலது கால் இடுப்பிற்குக் கீழ் துண்டிக்கப்பட்டு விட்டது என்றும் இந்தச் செயற்பாட்டுக்குக் காரணமானவர் மீதும், அதிகாரிகள் மீதும் விசாரணைகள் மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று, வவுனியா திருநாவற்குளத்தைச் சேர்ந்த மு.சிவலிங்கம் என்பவர் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

நீண்ட கடிதம் ஒன்றின் மூலம் செய்யப்பட்டுள்ள இந்த முறைப்பாட்டின் பிரதிகள் உரிய நடவடிக்கைகளுக்கென, சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர், திருகோணமலையில் உள்ள சுகாதார அமைச்சின் செயலாளர், வவுனியாவில் உள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இக்கடிதத்தின் பிரதி ஒன்றினை எமக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார். அதன் விபரம் வருமாறு:-

இருதய நோயாளியாகிய என்னுடைய மனைவி சி.ஜெயக்குமாரிக்கு கடந்த 1989 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் கொழும்பு அரச மருத்துவ மனையில் டாக்டர் ஸ்ரீபன் என்பவரால் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இருதயத்தில் உள்ள சுவாச நாளம் ஒன்று (மைக்ரோ வால்வ்) சுருங்கி இருந்தமையால் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது, அன்றிலிருந்து தொடர்ந்து 3 வாரங்களுக்கு ஒரு தடவை பென்சத்தீன் பென்சிலின் எனப்படும் ஊசி ஏற்றப்படுவது வழக்கம்.

இந்தத் தொடர்ச்சியான சிகிச்சை காரணமாக இந்த மாதம் (ஜூன் மாதம்) 9 ஆம் திகதி வரையில் எதுவிதமான ஒவ்வாமையோ அல்லது இடையூறோ ஏற்பட்டது கிடையாது.

ஆனால் இம்மாதம் (ஜூன் மாதம்) 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வவுனியா மருத்துவமனையில், பெண் வைத்தியர் ஒருவரால் பரிசோதனை செய்யப்பட்ட எனது மனைவிக்கு ஆண்தாதி ஒருவர் (பெயர் குரூஸ்) மனைவியின் காலில் ஊசி ஏற்றுவதற்கு ஆயத்தம் செய்துள்ளார். அப்போது என்னுடைய மனைவி ஜெயக்குமாரி, பத்து வருடங்களாகத் தனக்கு இந்த ஊசி போடப்படுவதாகவும் அதன்படி, இடுப்பின் பின்பக்கத்தில் போடுமாறு கேட்டுள்ளார்.

அதற்கு அந்த ஆண் தாதி "எனக்கு நீ படிப்பிக்க வர வேண்டாம். ஆஸ்பத்திரிக்கு வந்தால் ஊசி என்றால், நாங்கள் போடுகின்ற ஊசியைப் போட்டுக்கொண்டு போ" எனக் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், "உன்னுடைய பின்பக்கத்தையோ அல்லது தொடையையோ எனக்குப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு எனக்கு வேறிடம் இருக்கின்றது" என்றும் எனது மனைவியின் மனம் நோகப் பேசிவிட்டு ஊசியை வலது தொடைப் பகுதியில் போட்டுள்ளார்.

ஊசி போட்ட 5 நிமிடநேரத்தில், வைத்தியசாலையைவிட்டு வெளியேற முடியாமல், கால் உணர்விழந்து விறைத்துள்ளது. இதனால் அவர் வெளி நோயாளர் பிரிவிலேயே விழுந்து விட்டார்.

இவரை உடனடியாக சக்கர வண்டியில் அமர்த்தி அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து சுமார் ஒன்றரை மணித்தியாலம் வைத்தியம் பார்த்துள்ளார்கள். அதன் பின்னர் இரண்டாம் வார்ட்டில் அவரை அனுமதித்துப் பரிசோதித்திருக்கின்றார்கள். இவரைப் பரிசோதனை செய்த டொக்டர் திருக்குமரன் நோயாளியின் ஆர்ட்டிறிக் எனப்படும் பெருநாளத்தில் நேரடியாக ஊசி மருந்து ஏற்றப்பட்டதனால், இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் காட்டுவதாக எனது மனைவிக்குரிய நோயாளிச் சீட்டில் படம் வரைந்து குறித்து, இதுதான் நடந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.



இரண்டாம் வார்டில் சுமார் ஒரு மணித்தியாலம் இருந்த பின்னர் எனது மனைவி உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலமாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இதை அறிந்த நான், இரண்டாம் வார்டில் இருந்த வைத்தியர் ஒருவரை என்ன நடந்தது என்று கேட்டதற்கு பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. சென்சிற்றிவ்னஸ். இது பொதுவாக ஏற்படுவது வழக்கம் என்று தெரிவித்தார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் 17 ஆம் வார்டில் அனுமதிக்கப்பட்ட எனது மனைவிக்கு மறுநாள் 11 ஆம் திகதி காலை 10 மணியளவில் முழங்காலுக்குக் கீழ் காலின் சதைப் பகுதியில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, மீண்டும் 17 ஆம் வார்டில் அனுமதிக்கப்பட்டார்.

எனது மனைவிக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட டொக்டர் சுதி ஹேரத் என்பவரிடம் என்ன நடந்துள்ளது என்று கேட்டேன். அதற்கு அவர், வவுனியா வைத்தியசாலையில், ஆண்தாதியினால் ஊசி போடப்பட்ட எனது மனைவியின் வலது காலில் ஒரே ஒரு நாளம் மட்டும் தான் இயங்குவதாகவும், அப்போது தன்னால் ஒன்றும் கூற முடியாது என்றும், இரண்டு தினங்களுக்குப் பொறுமையாக இருக்குமாறும் தெரிவித்தார்.

இரண்டு தினங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த எனது மனைவி 14 ஆம் 15ஆம் திகதிகள் சத்திர சிகிச்சை நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு வைத்திய கவனிப்பிற்கு உள்ளாக்கப்பட்டார். 17 ஆம் இலக்க வார்ட்டில் கடமையில் இருந்த ஆண் வைத்தியர் ஒருவர் என்னை 15 ஆம் திகதி அழைத்து, எனது மனைவியின் கால் முற்றாகப் பழுதடைந்து விட்டது என்றும், அதனால், அவருடைய வலது காலை முழங்காலுக்கு மேலாகத் துண்டிக்க வேண்டும் என்றும் இல்லையேல் செப்ரிசேமியா என்னும் நோய்க்கு உட்பட்டு அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடும் என்றும் தெரிவித்தார். மாலை 4.30 மணிக்கு முன்னர் எங்கள் இருவருடைய சம்மதம் தெரிவித்தால் தான், அடுத்தநாள் சத்திரசிகிச்சை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

நான் எனது மனைவிக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லி, கால்போனாலும் பரவாயில்லை. எங்களுடைய 7 வயதான ஒரே ஒரு ஆண் குழந்தைக்காக எனது மனைவி உயிர் வாழவே வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன். அதன் பின்னர் அவருடைய சம்மதத்துடன், சத்திரசிகிச்சைக்கான எமது சம்மதத்தை எழுத்தில் கொடுத்தோம்.

எனது மனைவிக்கு சத்திரசிகிச்சை நடைபெற்ற தினமாகிய 16 ஆம் திகதி, வவுனியா ஆதாரவைத்தியசாலையில் இருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு வந்திருந்த பெண் வைத்தியரான திருமதி சகாப்தீன் வந்து எனது மனைவியிடம் கதைத்து, இந்த விடயத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்றும், எனது மனைவியின் உடலில் ஏற்கெனவே இரத்தம் பழுதாகி இருந்தது என்றும், அதனால் தான் அவருடைய காலும் பழுதாகியது என்றும் தெரிவித்தார். அத்துடன், "ஆண்தாதி ஒருவர் உனக்கு ஊசி செலுத்தியது பிழை என்று பொலிசில் முறையிட்டு, வழக்குத் தாக்கல் செய்வேன் என்று கூறியிருக்கிறாயாமே, இதன் விளைவு என்ன தெரியுமா? மருத்துவ உத்தியோகத்தர்களை இழிவுபடுத்திய குற்றத்திற்காக பல லட்ச ரூபா நட்டஈடு கட்ட வேண்டி ஏற்படும். பணம் கட்ட முடியாவிட்டால் சிறை செல்ல வேண்டி ஏற்படும்" என்று பயம் காட்டியிருக்கின்றார். இதனை என்னுடைய மனைவி பின்னர் என்னிடம் கூறினார்.

அதேதினம் வவுனியா வைத்தியசாலையில் இருந்து அனுராதபுரம் வைத்தியசாலையின் 17 ஆம் இலக்க வார்ட்டிற்கு வந்திருந்த பெண்தாதி ஒருவர், சத்திரசிகிச்சை பிரிவில் நான் இருந்தபோது, எனது மனைவியின் விடயம் பற்றி அங்கிருந்தவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது, இதுபற்றி, இங்கேயே வைத்து மறைத்துவிடும்படி, சூசகமாகக் கேட்டுக்கொண்டதையும் நான் அவதானித்துக் கொண்டிருந்தேன். அவ்விடத்தில் கதைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு நான் தான் அவர்கள் குறிப்பிட்ட நோயாளியின் கணவன் என்று தெரிந்திருக்கவில்லை.

எனது மனைவிக்கு 16 ஆம் திகதி அனுராதபுரத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதற்கு முன்னர், சந்தேகம் காரணமாக, அறுவைச் சிகிச்சை டொக்டர் சுதி ஹேரத்திடம் எனது மனைவியின் காலுக்கு என்ன நோய் ஏற்பட்டது என்று அறிந்து தெரிவித்து உதவுமாறு கேட்டுக் கொண்டேன். முதலில் அறுவைச் சிகிச்சையைச் செய்வோம். பின்னர், கொழும்புக்கு கொண்டுபோய் காட்டித் தெரிந்து கொள் என்று தெரிவித்தார். இதனால் மனம் மிகவும் நொந்த நிலையில், அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர், துண்டிக்கப்படும் காலை மருத்துவ ஆராய்ச்சிக்காகக் கொடுத்து உதவ வேண்டும் என்றும் அவரிடம் நான் கேட்டேன்.

அதற்கு அவர் உடனே அனுராதபுரம் வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரிக்குத் தெரிவித்து, "பிழையான இடத்தில் ஊசி போடப்பட்டுள்ளது" என்று சிங்களத்தில் தெரிவித்தார். எனக்கு சிங்களம் தெரியும் என்று அங்கிருந்த ஒருவர் தெரிவித்ததையடுத்து, அவர் உடனடியாக அங்கிருந்து அவருடைய அலுவலக அறைக்குச் சென்று விட்டார்.

சத்திரசிகிச்சை முடிந்ததும், (வீ.பி மேடம்) வைத்திய நிபுணரான பெண் வைத்தியர் ஒருவர் வந்து பார்வையிட்டு, காய்ந்த இரத்த கட்டிகள், முழங்காலுக்கு மேலே சென்று விட்டதாகவும், சிலவேளை இருதயத்திற்குச் சென்றால், உயிரிழக்க நேரிடும் என்றும், தாமதியாமல் உடனடியாக நோயாளியைக் கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் அங்கிருந்தவர்களுக்குக் கூறினார்.

அவரே நோயாளியை மேல் வைத்தியத்திற்காகக் கொழும்புக்கு அனுப்புவதற்குரிய இடம் மாற்றல் படிவத்தில் கையெழுத்திட்டுவிட்டுச் சென்றார். இது நடந்தபோது, 16 ஆம் திகதி காலை 11 மணி.

அன்று மாலை 6.30அணியளவில் கொழும்புக்குச் சென்றடைந்த எனது மனைவி கொழும்பு அரச வைத்தியசாலையில் 29 ஆம் இலக்க வார்ட்டில், 6 ஆம் நம்பர் கட்டிலில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் 17 ஆம் திகதி மாலை 5 மணியளவில், எனது மனைவியின் வலது காலில் மீண்டும் ஒரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, முழங்காலுக்கு மேற்பட்ட ஒரு பகுதி துண்டிக்கப்பட்டது. இதனை மருத்துவ ஆய்விற்காகத் தருமாறு கேட்டதற்கு பொலிசில் முறைப்பாடு செய்ய வேண்டும் என்று கூறினார்கள். அதன்படி, மறுநாள், 18 ஆம் திகதி, மருதானை பொலிஸ் நிலையத்தில் வைத்தியசாலை பொலிஸ் நிலையத்தின் அறிவித்தலுக்கமைய முறைப்பாடு ஏற்கப்பட்டது. எனது முறைப்பாட்டுக் கோரிக்கையை சேனநாயக்க என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பதிவு செய்தார். மறுநாள் நீதிமன்ற பொலிஸ் சாரஜன்ட் ஜெயசேகர என்பவரால், நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரியின் பொறுப்பில் கால் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.


ஆனாலும் இந்த விடயம் குறித்து இன்னும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்து, பாதிக்கப்பட்ட எனது மனைவிக்கும் எனக்கும் உதவுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
தங்களின் உண்மையுள்ள
மு.சிவலிங்கம்
23.06.99

நன்றி - நூலகத்திட்டம்

# அம்பாறை: முறைப்பாடு செய்பவர்களுக்கும் அச்சுறுத்தல்!



அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் அரச படைகளினால் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றது. இம்மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் இப்பிரதேசங்கள் முக்கிய நகரங்களிலிருந்து தொலைதூரத்தில் இருப்பதனாலும், இப்பிரதேசங்களில் இவை பின் தங்கிய பகுதிகளாகக் காணப்படுவதனாலும், இப்பகுதிகளில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் வெளியுலகிற்கு எட்டுவதில்லை.

கோணேஸ்வரி போன்ற பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இப்பகுதியைச் சேர்ந்தவை தான். சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 4ம் கொலனியில் பல வன்முறைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இதே போன்று தான் பொத்துவில் பிரதேசத்திலும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த பல வருடங்களாக இப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவதை மனித உரிமைகள் அமைப்புக்கள் கவனத்தில் கொள்ளவில்லை. இவர்களுடைய பிரச்சினைகளை செவி மடுப்பார் யாருமில்லை. இவர்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுப்போர் யாருமில்லை.

இப்பகுதி மக்கள் போக்குவரத்துப் பிரச்சினை, மின்சாரமில்லாத பிரச்சினை போதிய பாடசாலை வசதிகள் இல்லாத நிலை, விவசாயத்திற்கு வேண்டிய உள்ளீடுகளைப் பெற முடியாத நிலை. உழைத்து வாழமுடியாத சூழ்நிலை போன்றவற்றிற்கு மத்தியில் கடந்த காலத்தை ஓட்டி வந்திருக்கின்றார்கள். ஆயினும், இவற்றுக்கு மேலாக நாளாந்த வாழ்க்கை படையினருடைய சுற்றிவளைப்புகளினாலும், கைதுகளினாலும், தாக்குதலினாலும் பாதிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக ஏழை மக்கள் இத்தகைய நடவடிக்கைகளினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மனித உரிமை அமைப்புக்களும், அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும், இவ்விடயத்தில் அசிரத்தை காட்டுவதாகவே இப்பகுதி மக்கள் கருதுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மல்வத்தையில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமிலே ஞாயிற்றுக்கிழமை வந்து கையொப்பமிடுமாறு இளைஞர்கள் கோரப்படுகிறார்கள். இவ்வாறு பல முகாம்களில் முன்னர் கூறப்பட்டிருப்பினும், அவை இப்பொழுது தளர்த்தப்பட்டிருக்கின்றது. ஆயினும், மல்வத்தை முகாமில் தற்பொழுது கையெழுத்திடுமாறு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இளைஞர்கள் அழைக்கப்படுகின்றார்கள். அதுமட்டுமல்ல அவ்வாறு அவர்கள் அந்த முகாம்களிலே கையொப்பமிடச் செல்கின்றபோது அங்கே முகாம்களைத் துப்பரவு செய்தல், சுற்றாடல்களில் இருக்கின்ற வேலிகளைப் பழுதுபார்த்தல், மற்றும் பல வேலைகளை இளைஞர்கள் மூலமாக விசேட அதிரடிப் படையினர் செய்விக்கின்றார்கள். அடிக்கடி இப்பிரதேசத்தில் சுற்றிவளைப்புகள் இடம் பெறும். சில வேளைகளில் திடீரென விசேட அதிரடிப்படையினர் மாலை வேளைகளிலே மறுநாள் வேலைக்கு வருமாறு அழைப்பதன் காரணமாக இவர்களுடைய அந்த நாளின் வருமானத்தை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை அடிக்கடி ஏற்படுகின்றது.

இதேபோல் அப்பகுதியில் மின்மாற்றிகளைப் பாதுகாப்பதற்கு சுவர்களைக் கட்டவேண்டும் என்று மக்களிடம் பணம் சேர்த்து மின்மாற்றிக்கான பாதுகாப்புச் சுவர்களைக் கட்டியிருக்கின்றார்கள். அன்றாடம் உணவுக்கே வழியின்றித் தவிக்கின்ற இந்த ஏழைகளிடம் இதற்காகப் பலவந்தமாக பணம் வசூலிக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

கடந்த ஏப்ரல் 11ம் திகதி 10.00மணிக்கு பாக்கியராஜா என்ற இளைஞர் பொத்துவில் பகுதியைச் சேர்ந்த அறுகம்பை அதிரப்படையினரால் கைது செய்யப்பட்டு 12ம் திகதி விடுவிக்கப்பட்டார். இவர் விடுவிக்கப்பட்ட பொழுது மிகவும் மோசமாகத் தாக்கப்பட்ட நிலையிலே விடுவிக்கப்பட்டார். அவர் தன்னுடைய இரண்டு கைகளையும் தற்பொழுது அசைக்க முடியாதவாறு இருக்கின்றார்.

இதேபோல் ஏப்ரல் 9ம் திகதி காலை 8.00 மணிக்கு சம்மாந்துறை வீரமுனை என்ற இடத்திலே பொலிசார் ஒருவர் சுடப்பட்டார். இதன் விளைவாக மல்வத்தை, சொறிக்கல்முனை கிராமங்கள் 10ம் திகதி சுற்றிவளைக்கப்பட்டன. 44 பொதுமக்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அன்று இவர்கள் அனைவரும் விசாரணையின் பின் விடுவிக்கப் பட்டார்கள். மீண்டும் 11ம் திகதி 17 இளைஞர்களை சம்மாந்துறைப் பொலிசார் கைது செய்தார்கள். அதேவேளையில் கிராமத்துள் புகுந்த பொலிசார் அங்குள்ள பெண்களையும், இளைஞர்களையும் தாக்கினார்கள். சில வீடுகளில் புகுந்து வீட்டு உடமைகளையும் நாசமாக்கினர். அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு இளைஞர்களில் 30 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு அவர்களும் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஏப்ரல் 19ம் திகதி காலை 8.45 மணியளவில் சென்றல் காம்ப் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் 2 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதில் ஒருவர் மிக அண்மையில் திருமணமான இளைஞர் ஆவார்.

இதேபோல் பொத்துவில் ஊறணி அதிரடிப் படைமுகாமிற்குப் படையினர் அழைக்கும் பொழுது மக்கள் செல்ல வேண்டும். அங்கு சென்று அவர்கள் முகாமிலே பணிக்கப்படுகின்ற வேலைகளை நாள்முழுவதும் செய்ய வேண்டும். இதன் காரணமாக அப்பகுதியிலுள்ள ஏழைத் தொழிலாளர்கள் தமது அன்றைய வருமானத்தை இழக்க வேண்டியுள்ளது.

பொத்துவில் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர்காவற் படையினர் அப்பகுதியிலே செங்கல் சுட்டு விற்பனை செய்யும் ஏழைத் தொழிலாளர்களிடமிருந்து பலவந்தமாக செங்கற்களை பெற்றுக் கொள்ளுகின்றார்கள். இவ்வாறு மே மாதம் 15ம் திகதியும், 22ம் திகதியும் 3000க்கும் மேற்பட்ட செங்கற்கள் ஊர்காவல் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பகுதியிலுள்ள பெரும்பாலான இளைஞர்கள் தினசரி கூலித் தொழிலாளர்கள். இத்தகைய சுற்றிவளைப்புகளினாலே அவர்கள் தங்கள் நாளாந்த வருவாயை இழக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது. வந்து மறுநாள் காலையில் வேலைக்கு வருமாறு இளைஞர்களை அழைப்பார்கள். இதேபோல 20ம் திகதி நொட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினரால் சுமார் 1500 செங்கற்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இது போன்ற சம்பவங்களின் விளைவாக ஏழைத் தொழிலாளர்களும், தம்முடைய வருமானத்திற்காக சிறு தொழில் முயற்சிகளை மேற்கொள்வோரும் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இதேபோல் அரச கட்டடிங்களைப் பாதுகாக்க வேண்டிய பொலிசாரும், விசேட அதிரடிப்படையினரும் அவற்றை நாசம் செய்கின்றார்கள். கோமாரி, ஊறணி, அறுகம்பை, நொட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அரசாங்கக் கட்டிடங்கள் பாதுகாப்புப் படையினரால் உடைக்கப்பட்டு அதன் கூரைத் தகடுகள் தம்முடைய காப்பரண்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்தம் என்ற பகுதியிலே இருக்கின்ற நெல்சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் கூரைத் தகடுகளும், எல்லை போடப்படுகின்ற தூண்களும் இவர்களினால் எடுத்துச் செல்லப் பட்டிருக்கின்றது. அதேபோல் இதே இடத்திலே கூட்டுறவு மாதிரிக் கடைக்கு உரிய கட்டிடத்திலே இருந்து ஓடுகளும், மரங்களும் அகற்றப்பட்டிருக்கின்றன.

அதேபோல் ஊறணி விசேட அதிரடிப்படையினர் அங்குள்ள செயற்கை சினைப்படுத்தும் நிலையத்தைச் சேர்ந்த கட்டிடத்தில் இருந்து பல பொருட்களை அப்புறப்படுத்தியிருக்கின்றார்கள். கோமாரி நெல் சந்தைப்படுத்தும் நிலையத்திலிருந்து பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு அக் கட்டிடம் இப்பொழுது பாழடைந்துள்ளது. அரசாங்கத்தின் கட்டிடத்தைக் காக்க வேண்டியவர்களே இவற்றைப் பாழாக்குகின்றார்கள்.

நாவிதன்வெளிப் பிரதேசத்தில் இருக்கின்ற ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு அண்மையில் சென்றல்-காம்ப் பொலிஸ் காவலரண் ஒன்று அமைந்திருக்கின்றது. இதன் காரணமாக பொதுமக்கள் இவ்வாலயத்தில் பூசைகள் நடத்தவோ, மற்றும் தேவைகளுக்கோ அங்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த வேளையில் சுமார் 75 குடும்பங்கள் வசிக்கும் நாவிதன்வெளி முதலாம் பிரிவில் மே மாதம் 9ம் திகதி கிராமத்தவர் ஒருவருடைய மரணச்சடங்கு நடைபெற்றது. இறுதியில் மரண ஊர்வலம் அந்த வீதியால் சென்ற பொழுது அவ்விடத்தில் நின்ற பொலிசார் தங்களுடைய பாதையால் செல்ல வேண்டாம் என்று தடுத்து அந்த மரண ஊர்வலத்தை வயல் வெளிக்கூடாக பாதை மாற்றி அனுப்பி வைத்தார்கள். அது மட்டுமல்லாமல் அவர்கள் அவ்வழியால் செல்கின்ற பொழுது நீரோடை ஒன்றையும் கடக்க வேண்டியேற்பட்டது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 20ம் திகதி சென்றல் காம்பில் வைத்து இராணுவத்தினரால் மயில்வாகனம் ஜெயராஜா என்பவரும், செல்வராஜா சுரேஸ் என்பவரும் கைது செய்யப்பட்டார்கள். செல்வராஜா சுரேஸ் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், மயில்வாகனம் ஜெயராஜா என்பவர் தற்பொழுது கொழும்பு சிறைச்சாலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் சம்மாந்துறையைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபைப் பணிப்பாளர் ஒருவர் 1997ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ம் திகதி சென்றல் காம்ப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவருடைய மனைவி கடந்த காலங்களிலே எவ்வளவு முயற்சியெடுத்தும் அவரை மீட்க முடியவில்லை. அவர் 1997ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ம் திகதி அம்பாறை கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு அதன் பின்னர் பதுளையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தற்பொழுது அவரைச் சென்று பார்ப்பதற்கு கூட வழியில்லாத நிலையிலே அவருடைய மனைவி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

கடந்த மாதம் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இருக்கின்ற மட்டக்களப்பு தரவை என்ற கிராமத்தில் சில முஸ்லிம் பொலிசாரும், சிங்களப் பொலிசரும் சென்று அங்குள்ள கிராமத்தவர்களைத் தாக்கி அவர்களிடம் இருந்த அடையாள அட்டையைப் பறித்துச் சென்றார்கள். அதன் பின்னர் இரண்டு பேரைக் கைது செய்து சென்று பொலிஸ் நிலையத்தில் வைத்து அவர்களை மிகவும் மோசமாகத் தாக்கிய பின்னர் விடுதலை செய்தார்கள். சேகர் வடிவேலு, ஜக்ஸன் எஸல்லர் ஆகியோர் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மே மாதம் மல்வத்தை தபால் நிலையத்தைச் சேர்ந்த ஒருவரை அன்று காலை 8.00 மணிக்கு மல்வத்தைப் பொலிசார் கைது செய்தார்கள். அதன் பின்னர் அவர் 11.00 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார். பின்னர் அவரை மீண்டும் கைது செய்த அப்பொலிஸ் அதிகாரி அவரை மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்தார். அதன் பின்னர் அவருடைய தபால் நிலையத்திற்குச் சென்று 5.30 மணிவரை தபால் நிலையம் திறக்கப்பட வேண்டும் எனவும், தான் சொல்லும்படியே கடமையை ஆற்ற வேண்டும் எனவும் எச்சரித்திருக்கின்றார்கள். குறித்த இப்பொலிஸ் அதிகாரியின் நடத்தையின் காரணமாக இப்பகுதி மக்கள் மிகவும் அச்சமுற்றிருக்கின்றார்கள்.

இப்படியான ஏராளமான சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது. இவை பற்றிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடைமுறைச் சிக்கல்கள் பல எதிர்கொள்ளப்படுகின்றன.

இப்பகுதி மக்களை மனித உரிமை அமைப்புக்கள் சென்று அணுகி இவர்களிடம் சத்தியக் கடதாசியோ அன்றி வாக்குமூலமோ கேட்கின்ற பொழுது இவற்றைக் கொடுப்பதன் மூலமாக மேலும் தாம் துன்பத்துக் காளாக வேண்டும் என்றும் படைகளினால் தாக்கப்படலாம் என்றும், அச்சத்தின் காரணமாக இவற்றை அவர்கள் வழங்க முன்வருவதில்லை. அதேவேளை அப்பாவிகளான வறிய நிலையில் வாடுகின்ற இம்மக்கள் மீது இவ்வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இதன் காரணமாக பாதிக்கப்படுகின்ற இம்மக்களுக்கு எவ்வகையில் நிவாரணம் அளிக்கலாம் என்பதை தெரியாத நிலையில் ஒரு சில அமைப்புக்கள் இத்தகவல்களை மட்டும் சேகரித்துக் கொண்டிருக்கின்றன.

எனவே இவ்விடயத்தில் அதிகாரிகள் மனித உரிமை அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வாழ உரிமையற்று வறுமையில் வாடுகின்ற இந்த மக்களுக்கு மேலும் துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இவ்வருட சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின் பிரகாரம் பாதுகாப்புப் படைப்பிரிவினரின் மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடு செய்தவர்களே மிகவும் மோசமான முறையில் தொடர்ந்தும் படையினரால் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது என்பதை இவ்வேளையில் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். எனவே இப்பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பது எவ்வாறென்பது நாம் நிதானமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

*எம். சிவகுமாரன்,*
*அக்கரைப்பற்று.*

நன்றி - நூலகத்திட்டம்



# வைத்தியர் வேலைநிறுத்தம்:
# அப்பாவிப் பொதுமக்களின் கேள்விகள்!

பதினேழு நாட்களாக இழுபட்ட வைத்தியர்களின் வேலை நிறுத்தம் ஒருவாறாக முடிவுக்கு வந்தது.

நாடுபூராவும் உள்ள ஆஸ்பத்திரிகள் அனைத்தும் ஸ்தம்பித்து நோயாளர்களைப் பெருமளவு துன்பத்துள் ஆழ்த்திய இந்த வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது பற்றி யாரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

ஆனால், இந்தப் பதினேழு நாட்களாக நடந்த வேலை நிறுத்தத்தின் போது நடை பெற்ற இழுபறிகளும், வேலை-நிறுத்தத்தை அரசாங்கம் கையாண்ட விதமும் குறித்து யாரும் மகிழ்ச்சி அடைய முடியாது.

சம்பள உயர்வுக்காகவும் வேறு சலுகைகட்காகவும் தொழிற்சங்கங்கள் நடாத்தும் தொழிற்சங்க, தொழிலாளர் உரிமைப் போராட்டங்கள் போலன்றி இந்தப் போராட்டம் ஒரு அரசியல் தன்மை வாய்ந்த போராட்டமாக அமைந்தது ஒரு முக்கியமான விடயம். அரசியல் வேலை நிறுத்தங்கள் மூலமாக ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்து, புரட்சியை நடாத்திவிடலாம் என்று ஒரு காலத்தில் பிரச்சாரம் செய்தவர்கள் அங்கம் வகிக்கும் ஒரு ஆட்சிக்கெதிராக இந்த அரசியல் போராட்டம் நடை பெற்றது இன்னொரு சுவாரஸ்யமான விடயம்.

அரசாங்கத்தின் அரசியல் ரீதியான தீர்மானங்களை எதிர்த்து தொழிற்-சங்கங்கள் போராட்டத்தில் குதிப்பதன் மூலமே அரசாங்கத்தை தொடர்ந்து நடாத்த முடியாத நிலைக்கு தள்ளி விட முடியும் என்றும் தொழிலாளர்கள் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி விடலாம் என்றும் பிரஞ்சுப் புரட்சியைப்பற்றிய தமது பல்கலைக்கழகங்களில் படித்தவற்றை வைத்துக் கொண்டு பேசித்திரிந்தவர்கள் இவர்கள்.

ஆனால், அவர்கள் பின்கதவாலேயே-னும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தபின் அந்த ஆட்சியதிகாரம் எப்படி தொழிற்சங்கப் போராட்டங்களை ஒடுக்குகிறதை திறம்படச் செய்யலாம் என்பதற்கு இப்போது சாட்சியாக இருந்து வருகிறார்கள்.

வைத்தியர்களின் போராட்டம் இந்த பொ.ஐ.மு. அரசாங்கத்தின் போலி ஜனநாயக வாய்ச் சவாடலுக்கும் , அதிகார அடக்குமுறை வெறிக்கும் கண்முண்ணான இன்னொரு உதாரணமாக அமைந்து முடிந்தது. ஏற்கனவே நடைபெற்ற தொலைத் தொடர்பு ஊழியர்கள், தபாலஊழியர்கள், மின்சாரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தங்களின் போதெல்லாம் எப்படி அவற்றை நசுக்க தமது அதிகாரத்தை அரசாங்கமும் ஜனா-திபதியும் துஷ்பிரயோகம் செய்தார்களோ அதேவிதத்திலேயே இந்த வைத்தியர்களது போராட்டத்தையும் கூட அச்சுறுத்தி அடக்-கும் முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்-பட்டது.

இலங்கை அரசியலமைப்பு சட்டத்தின் 13வது திருத்தத்தின் 32வது பிரிவுக்கு அமைய மாகாணங்களுக்கான சுகாதார சேவைகள் பணிப்பாளர்களை நியமிக்கும் அதிகாரம் மாகாண ஆளுனரிடமே உள்-ளது. இதன்படி மாகாண முதலமைச்சர்கள் சிபாரிசின் பேரில் ஆளுநரால் இந்த நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். 13வது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து இந்த நடைமுறை அமுலில் இருந்த போதும், கடந்த மாச் மாதம் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின்படி மாகாணசபைகட்-கான சுகாதார சேவைகள் பணிப்பாள-ர்களை நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கைககு அதாவது சுகாதார அமைச்சுக்குப் போவதாக இருந்தது. இவ்வாறு மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் சுகாதார சேவையின் நியமனங்கள் பொதுமக்கள் சேவைகள் ஆணைக்குழுவி-னால் சுகாதார அமைச்சின் சிபாரிசின் பேரில் நியமிக்கப் படுவதே சரியானது என்பது மருத்துவர் சங்கத்தின் அபிப்-பிராயம். மாகாணசபைகள் அமைக்கப்-பட்டபின் பல மாகாணங்களில் நிதிப்பற்றாக் குறைகாரணமாகவும், நிர்வாக ஒழுங்கீனம் காரணமாகவும் வைத்தியசாலைகள் சரிவர இயங்கவில்லை என்றும் வைத்திய அதிகாரிகளை நியமிக்கும் விடயத்தில் அரசாங்கம் மார்ச் 3ம் திகதிய அமைச்-சரவை தீர்மானப்படியான தேசியக் கொள்கை ஒன்றை வகுத்து செயற்படுவதன் மூலம் இதை தவிர்கலாம் என்றும் மருத்துவர் சங்கம் கோரியிருந்தது.

உண்மையில் இந்தக் கோரிக்கையின் பின்னாலுள்ள காரணங்கள் உண்மையா-யினும், மாகாணசபைக்ளுக்கு 13வது திருத்தச் சட்டப் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பறிக்கின்ற ஒரு நடவடிக்கையில் ஈடுபடுமாறு அரசாங்-கத்தை நிர்ப்பந்திக்கிற தன்மை இந்தக் கோரிக்கையில் உள்ளடங்கியிருப்பதை மறுப்பதற்கில்லை.

வைத்தியர்களின் இந்தக் கோரிக்கை சட்டவிரோதமானது, அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணானது, மாகாண சபைகளது அதிகாரங்களை பறிக்கச் சொல்வது என்று அதனை எதிர்த்த அரசு தரப்பு காரசாரமாக அவர்களை விமர்சித்தது. ஆனால், மாகாணசபைகள் சட்டம் நடைமுறைக்கு வந்த போது இதே அரசாங்கத்தில் இன்று அங்கம் வகிக்கும் பலர் அதைத தீவிரமாக எதிர்த்தார்கள். ஏன், அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவற்றுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்ட போது அதை ஏற்றுக் கொண்டார்கள். ஜனாதிபதி பதவிக்கு வருவதற்கு முன்பு, மாகாணங்களுக்கு அதிகாரம் போதாது என்றும் சட்டரீதியாக உள்ள அதிகாரங்கள் பிடுங்கப்படுகின்றன என்றும் கூறி வந்தார். என்றாலும், அவர் பதவிக்கு வந்த பின்னான கடந்த நான்காண்டு காலத்துள் அவற்றை மீள வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்க-வில்லை. கடந்த மார்ச் மாதம் எடுக்கப்பட்ட தேசியக் கொள்கை தீர்மானமும் கூட மாகாண சபை அதிகாரங்களைப் பறிக்கும் தன்மை கொண்டது என்பதில் ஐயமில்லை. அந்த அமைச்சரவைக்கு தலைவி சாட்சாத் ஜனாதிபதியே தான்!

அரசாங்கம் மருத்துவர்களுக்கு எதிராக பெருமளவாக செய்த பிரச்சாரத்தின் சாரம், ஒன்று மக்கள் வைத்தியசாலைகள் இயங்-காததால் பெரும் அவஸ்தைக்குள்ளா-கிறார்கள் என்பதுவும், அவர்களது கோரிக்கை அரசியலமைப்புக்கு விரோதமானது என்பதுவுமாகும். ஆனால் மக்கள் வைத்திய வசதியற்று பெருந்-துன்பத்தை அனுபவிப்பதற்கு காரணமாக இருந்ததும் இருப்பதும் வைத்தியர்களை விட அரசாங்கத்தின் மெத்தனமான நடவடிக்கையே என்பது வெளிப்படை. தவிரவும், மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உண்மையான அக்கறையுள்ளதாக இருந்திருக்குமானால், 13வது திருத்தச் சட்டத்தின் கீழுள்ள மாகாணசபைகட்கான அதிகாரங்களை சந்தோசமாக வழங்கி-யிருக்கலாம். பதிலாக அது மாகாண சபைகளை கலைப்பதிலும், தேர்தல்களை பின்போடுதலிலும், குண்டர்களை வைத்து தேர்தல் மோசடி செய்வதிலும் தான் அக்கறை காட்டியது.

உண்மையில் நடந்தது இது தான். வடமேல் மாகாண சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சமர் நாவின்ன, தனது மாகாணத்தில் மாவட்ட பணிப்பாளர்கள் மாகாணப் பணிப்பாளர்கள் பதவிகட்கு தனக்குப் பிடித்தவர்களை நியமித்தது தான். வைத்தியர் சங்கம், இத்தகைய நியமனங்களின் போது அரசியல்வாதிகள் தலையிட்டு தமக்குப் பிடித்தவர்களை நியமிப்பதை எதிர்த்தது. அது பொதுமக்கள் சேவை ஆணைக்கு-ழுவூடாகச் செய்யப்பட்டால், மாகாணம் சார்ந்த நியமனமாக அது இல்லாமல், நாடு பூராவுமிருந்து தகுதி, சேவை மூப்பு அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று கருதியது. இதனாலேயே அது மத்திய அரசின் 'அமைச்சரவை தீர்மான' த்தை நடைமுறைப் படுத்தும்படி தீவிரமாக அமைச்சரை, வற்புறுத்தியது.

ஆனால், துரதிர்ஸ்டம் என்னவெ-ன்றால், சக்திவாய்ந்த ஆளுங்கட்சியின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான நாவின்னவை எதிர்த்து நிற்க அரசாங்கம் விரும்பவில்லை இதைச் சமாளிக்க அது ஒரு சின்னச் சதியில் இறங்கியது.

அதுதான், மேன்முறையீட்டு நீதி-மன்றில், மாகாணங்கட்கான பணிப்-பாளர்களை நியமிக்கும் அதிகாரம் பொதுமக்கள் சேவை ஆணைக்கு-ழுவுக்கோ, மத்திய சுகாதார அமைச்சுக்கோ கிடையாது என்று கூறி, நியமனங்கள் எதையும் ஆணைக்குழு செய்யாமலிருக்கத் தடை செய்யும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரும் வழக்கொன்றை வடமேல் மாகாணசபை முதலமைச்சர் நாவின்ன மூலமாக தாக்கல் செய்வித்தது. இந்த வழக்கின் மூலம் வைத்தியர்களை அவர்களது கோரிக்கையை தாம் நடைமுறைப் படுத்தாமல் இருப்பதற்கு அரசியலமைப்புச் சட்டம் காரணம் என்று நம்பவைக்க முயன்றது சுகாதார அமைச்சும், அமைச்சர் நிமால் சிறிபால த சில்வாவும்.

ஆனால் வைத்தியர்கள் சளைக்க-வில்லை. மாகாணசபை முதலமைச்சராக தெரிவு செய்யப்படும் வரை மாகாண சபைகட்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதை தீவிரமாக எதிர்த்த ஒருவர், திடீரென மாகாண சபைக்கு அதிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்வது என்பதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகட்காகவன்றி அதிகாரப் பரவலாக்கல் குறித்த அக்கறையால் அல்ல என்பவை விளங்கிக் கொள்ள முடியாத பிஞ்சுப் பாப்பாக்கள் அல்லவே வைத்தியர்கள்.

வைத்தியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தொடங்கிற்று.

அரசாங்கம் மக்களின் துன்பத்தைப் பற்றியும், சட்டவிரோத கோரிக்கை பற்றியும் பிரச்சாரம் செய்ததுடன் வைத்தியர்களை மிரட்டவும் தொடங்கியது. ஆனால் வைத்தியர்கள் மசியவில்லை. முடிவு? இருக்கவே இருக்கிறது ஜே.ஆர். ஜெயவர்த்தன உருவாக்கித்தந்த நமது இன்றைய ஜனாதிபதியால் முன்பு வெறுப்புக்குரியதாக பிரகடனப் படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள இராட்சத அதிகாரங்களின் அடிப்படையில் அவரால் சுகாதார சேவை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்-படுத்தப்பட்ட ஒரு சேவையில் உள்ள ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமானது மட்டுமல்ல, வேலை செய்யாமல் இருப்பது வேலையை இழப்பதற்கும், அவசரகால சட்டவிதிகளின் கீழ் கைதுக்கும் தடுப்புக்-காவலில் வைக்கப்படுவதற்கும் இட்டுச் செல்லக் கூடியதாகும்.

தபால் ஊழியர்கள் விவகாரத்தில் நடந்தது போன்ற கைதுகள் வைத்தியர்க-ளுக்கும் நடக்கக் கூடும் என்று எதிர்பார்க்-கப்பட்டது.

வைத்தியர்கள் வேலைக்குப் போனா-ர்கள். ஆனால் வேலை செய்யவில்லை. இதனை முறியடிக்க எந்தச் சட்டத்திற்கும் வலு இல்லை என்பது தெரிந்ததும் அரசாங்கம் எதிர்ப்புப் போராட்டங்களிலும், தாக்குதல் நடவடிக்கைகளிலும் தமது சகாக்ளை ஈடுபடுத்திப் பார்த்தது.

வைத்தியர்களது வாகனங்கள், வீடுகள் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டன. ஆயினும் நிலைமை முடிவுக்கு வரவில்லை.

தொடர்ந்து மறுத்து வந்த ஜனாதிபதி பிறகு ஒருவாறு பேச ஒப்புக் கொண்டு, அவர்களது பிரச்சினைகளை ஆராய ஒரு குழுவை நியமிப்பதாகவும், அத்தியாவசிய சேவைகள் பிரகடனம் நீக்கப்படும் என்றும் ஒப்புக்கொண்டார்.

அவர் ஒப்புக் கொண்டதுடன் வேலை நிறுத்தம் இடைநிறுத்-தப்பட்டது.

ஆனால், பேச்சுவார்த்தை முடிந்த ஒருசில மணி நேரத்தின் பின்னர் ராகம மேம்பால திறப்புவிழாவில் பேசும் போது ஜனாதிபதி தனது வழமையான பாணியில், வைத்தியர்களுடன் ஒப்புக் கொண்டதற்கு முரணாக அவர்களை கண்டித்து உரையாற்றினார்.

'நோயாளிகள் செத்துக் கொண்டிருக்கையில் வேலை நிறுத்தம் செய்யும் வைத்தியர்களையும், அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமாக செயல்படுமாறு கோரும் வைத்தியர்களையும் இலங்கையில் மட்டும் தான் காண முடியும் என்று பேசினார் அவர்.

ஏற்கனவே சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபடியே புலிகளைப் பற்றியும் பிரபாகரனைப் பற்றியும் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள நல்லெண்ணம் பாதிக்கப்படும் விதத்தில் மிகவும் காரசாரமாக விமர்சித்தவரல்லவா அவர். அதே பாணியில் தான் இதையும் குழப்பப் போகிறாரோ, எங்கே மீளவும் வேலை நிறுத்தம் வந்து விடப்போகிறதோ என்று மக்களை அச்சம் கொள்ளவைக்கும் விதத்தில் அமைந்திருந்தது இந்தப் பேச்சு.

வைத்தியர்கள் திரும்பவும் களத்தில் குதிப்பது பற்றி ஆலோசிப்பதாக அறிவித்தார்கள்.

எது எப்படியோ, தற்காலிகமாக இப்போது வேலைநிறுத்தம் நிறுத்தப்-பட்டிருக்கிறது.

அரசாங்கம் பிரச்சினைக்கு தீர்வு காணவென நியமிக்கவுள்ள குழு என்ன முடிவை எடுக்கப் போகிறது என்பது யாருக்கும் தெரியாது. அது எந்த முடிவை எடுத்தாலும் அந்த முடிவு மக்களது நலன்களுக்கு உகந்ததாக இருக்கப் போவதில்லை என்பது தான் இந்தப் போராட்டத்தின் துரதிர்ஸ்டம்.

ஒன்றில் மாகாணசபைகளின் இன்னுமொரு அதிகாரம் பறிபோகும். அல்லது இன்னுமொரு வேலை நிறுத்தம் தொடரும்.

வைத்தியர்களின் வேலை நிறுத்தம் அரசியல் வாதிகளின் தலையீடு, சீரழிவு என்பன குறித்தது தான் என்றால், அதை எதிர்த்துப் போரிடுவதற்குப் பதில், மாகாணசபை அதிகாரங்களை பறிக்க உதவுவதாக ஏன் அமைய வேண்டும்?

இந்த மாகாணம் வடக்கு கிழக்கு மாகாணமாக இருந்தால், இத்தகைய சீரழிவுகட்காக இப்படி ஒரு போராடத்தை வைத்தியர்கள் சங்கம் நடாத்தி இருக்குமா?

அப்படியானால், அங்குள்ள இன்றைய சுகாதார சீர்கேடுகள் பற்றி அது ஏன் எதுவும் பேசவில்லை?

உண்மையில் நாடுபூராவும் உள்ள உயர் பதவிகளை தமது சங்கத்தின் ஒரு தனியான குழுவாக பாவித்து தரம், தகுதி, மூப்பு அடிப்படையில் செயற்படுத்த வேண்டும் என்று கருதுகிற மருத்துவச் சங்கம், மருத்துவக் கல்விக்கான ஆட்சேர்ப்பில் அத்தகைய ஒரு நெறிமுறை கடைப்பிடிக்கப்படுவது பற்றி ஏன் அக்கறை காட்டவில்லை.

இவை, அப்பாவிப் பொது மக்களிடையே அடிபடுகிற நியாயமான கேள்விகள்.

விசேட நிருபர்.



நன்றி - நூலகத்திட்டம்



## முஸ்லிம் காங்கிரஸ் அரசியல்:

# கோமாளித்தனங்களும் ஏமாளி மக்களும்!

'ஒரு வக்கீல் தவறு செய்தால் அவரை நம்பியவன் ஆறடி உயரத்தில் தொங்குகிறான். ஒரு டொக்டர் தவறு செய்தால் அவரை நம்பியவன் ஆறடி ஆழத்தில் புதைகிறான். ஒரு அரசியல்வாதி தவறு செய்தால் அவரை நம்பிய சமூகம் ஆறாத் துயரில் ஆழ்வது தான் கதியாகிவிடும்' என்ற சோ. ராமஸ்வாமியின் கூற்றில் சில உண்மைகள் இல்லாமலில்லை.

கிழக்கு மாகாணத்துக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் களங்கள் சூடுபிடிக்க இருக்கும் இத்தறுவாயில் அதற்கான முன்னேற்பாடுகள் இப்போதே முடுக்கிவிடப்பட்டுள்ளன. கட்சிகள் என்று பார்க்கும்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய கட்சிகளை விடத் தனது இருப்பைப் பலப்படுத்தி வருவதோடு அதனது அனைத்துத்தள "காங்கிரஸ்களின்" பரப்பையும் விஸ்தாரம் செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. முஸ்லிம்கள் மீதான காங்கிரசின் திடீர் அனுதாபமும் அவசரமுமான சமூகப்பணிகளும் கேட்காமலேயே கூரையைப் பொத்துக்கொண்டு கொடுக்கும் அதனது தாராளத்தன்மையும், தயாள குணமும் காங்கிரசின் 'அரசியல் சாணக்கியத்துக்கு' சான்று எனலாம். எப்படி இருந்தாலும் இலங்கையின் மூன்றாவது அரசியல் சக்தி மு.காவா அல்லது ஜே.வி.பியா என்ற கேள்விக்கும் அது பதிலளிக்க வேண்டியும் உள்ளது!

திருமலையில், மூதூர் முதல் அம்பாறையில் இறக்காமம் வரை கிழக்கு மாகாணத்திலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் நடைபெற்றுவரும் அடிக்கல் நாட்டு விழாக்கள், பிரதேச, நகர சபைப் 'பிறப்புக்கள்', திறப்பு விழாக்கள், ஒதுக்கீடுகள், நடமாடும் சேவைகள் என வாக்கு வங்கிகளை லாவகமாகக் கைப்பற்றும் அதன் சாமர்த்திய சொரூபம் வெளித்தெரிய ஆரம்பித்துள்ளது. தேர்தல்களுக்காகவே "சமூக சேவை"கள் என்பதைப் போலவே காங்கிரசின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைந்துள்ளன.



பதியுத்தீன் மஹ்மூத்

இலங்கை முஸ்லிம்களின் நிறுவன ரீதியான அரசியல் வரலாற்றில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு மைல்கல். ஒரு துருவ சாதனை என்பது மிகையானதல்ல. "அல் லாஹு அக்பர்", "லாயிலாஹ் இல்லல்லாஹ்" போன்ற முஸ்லிம் சமூகத்தின் ஆன்மாவை உலுப்பக்கூடிய, உணர்வுகளைத் தட்டி எழுப்பக்கூடிய கோஷங்களால் இந்த சமூகம் உணர்வுபூர்வமாய் உயிர் பெற்ற அளவு, அறிவு பூர்வமாக இன்னும் உயிர்பெறவில்லை என்பது ஆதங்கத்துக்குரியது. இதன் விசனகரமான விளைவு, காங்கிரஸ் சாதிக்கத் துணிந்து செயற்படும் அனைத்து விடயங்களுக்கும் (அவை சிலபோது மார்க்கத்தின் வரம்புகளை மீறியதாக இருந்தாலும்) அதன் தான் தோன்றித்தனமான தனிக்காட்டு ராஜாத்தனத்துக்கும் முன்னால் இந்த சமூகம் வாய்பொத்தி மௌனம் சாதிப்பதாய்ப் போயிற்று.

இந்த வகையில் காங்கிரசின் அண்மைக்கால மார்க்கத்துக்கு முரணான போக்குகளும் மார்க்க அறிஞர்கள் குறித்த கீழ்மதிப்பீடுகளும் குர்ஆன், ஹதீஸ் என்பவற்றை அது தவறாகப் பிரயோகிக்கின்றமையும், மக்கள் பலத்தை ஒன்று திரட்ட அது காட்டும் வேடிக்கை விளையாட்டுகளும் வினோதக் கூத்துக்களும் இசை நடனங்களும் முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய ஒரு புதிய புரிதலை ஏற்படுத்தியுள்ளது.


இலங்கையில் அண்மைக்கால குறிப்பாக நடந்து முடிந்த தேர்தல்களும் அதன் முடிவுகளில் தெரிந்த மாறுதல்களும், இலங்கையில் இனி எந்தக் கட்சியும் மூன்றாம்பட்ச கட்சியின் துணையின்றி ஆட்சி அமைக்க முடியாது என்ற உண்மையை முன்னையைவிட இப்போது சற்று அழுத்தமாக வலியுறுத்தி நிற்கின்றன. மூன்றாவது அரசியல் சக்திகளுக்கு அரசியல் சதுரங்கத்தில் 'கிராக்கியை' சற்று உயர்த்தியுள்ளது. இந்த அரசியல் சாதகம் காங்கிரசின் தலைமையில் ஒருவகை அரசியல் அகம்பாவத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் பிரத்தியட்சமான வெளிப்பாடுதான் அது எந்த முடிவையும் எடுக்கவும் அதனை அமுலாக்கவும் அதற்கு பின்னுந்துதலைக் கொடுத்து வருகிறது.

அண்மையில் கடந்த 18,19,20 ஆகிய தினங்களில் ஒலுவில் கிராமத்தில் காங்கிரஸ் நடாத்திக் காட்டிய வெளிச்ச வீட்டுத் திறப்பு விழாவும் அதனையொட்டி நிகழ்ந்த கோலாகலமான இசை நடன விழாவும் கூத்தும் கும்மாளமும் காங்கிரசின் ஜனரஞ்சக அரசியல் வியாபாரத்துக்கு வெட்ட வெளிச்சான்று. அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர் சுருக்கமாகச் சொன்னால் "தென்கிழக்கு" சாம்ராஜ்யத்தின் பெரும்பாலான பிரதேசங்களிலிருந்து ஒலுவிலுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பஸ் சேவைகள். அதன் மூலம் ஏறி இறங்கிய ஆண் பெண்கள் அங்கு நடைபெற்ற அந்தரங்க அனாசாரங்கள் யாவும் காங்கிரசின் இன்றைய அரசியல் கோமாளித்தனங்களுக்கு சாட்சி பகர்வதாக உள்ளன.

கஞ்சாவையே சுவாசித்துக் காலந்தள்ளும் "பாவா" மார்களுக்கும் அவர்களது 'றபான்'களுக்கும் கூட சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கவும் பல கலாசார சீர்கேடுகள் நிகழவும் காரணமான இந்த விழாக்களை இந்த சமூகத்தின் வெறும் பார்வையாளர்களாக இருந்து 'புதினம் பார்க்கப்' பழக்கப்பட்டுப் போன மனிதர்களுக்கு தவறு என்று சுட்டிக்காட்டுபவன் வெகுசன விரோதி தான். என்ன செய்வது மார்க்கத்தின் பெயரால் அரசியல் வியாபாரம் நடாத்தும் இந்தக் கட்சியின் தலைமை இந்த அனாசாரங்களுக்கு குர்ஆன், சுன்னாவிலிருந்து ஆதாரம் காட்டினாலும் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

"எப்போது ஓர் உயர்ந்த கொள்கை சமுதாயத்தின் அடிமட்ட மக்கள் தளங்கள் அனைத்தையும் ஒட்டி ஜனரஞ்சகப்படுமோ அந்தக் கணத்திலிருந்தே அக் கொள்கை கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து சிதிலமாகி காலப் போக்கில் காணாமல் போய்விடுகிறது" இத்தகைய சமூகவியல் உண்மை. மு.காங்கிரசுக்கு இப்போது நூறுவீதம் பொருந்தும்.

"சாத்வீக வழிநின்று தன்மானம் காக்கும் தனித்துவத் தலைமை", "தானை"த் தளபதி" என்றெல்லாம் நாம் பொழியும் வாய்வழி உச்சாடனங்களில் உள்ள இந்தத் 'தனித்துவம்' முன்னைய முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்யாத, செய்துகாட்டாத பல மார்க்க விரோத செயல்களிலும் பிரதிபலிப்பது உண்மையில் தனித்துவம் தான். வெள்ளைக்காரர்களின் ஆட்சியின் போது நிலவிய சட்டசபையில் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்திய 1889ம் ஆண்டைய எம்.சி.அப்துர் ரஹ்மான் அவர்களது முஸ்லிம் அரசியல் பிரவேசம் முதல் கலாநிதி பதியுத்தின் மஹ்மூத் வரை இந்நாட்டில் முஸ்லிம் சார்பாக குரல் கொடுத்த சான்றோர்கள் பலர் சாதிக்காததை முஸ்லிம் காங்கிரஸ் சாதித்துள்ளது உண்மை தான் கந்தூரி வைபவங்களில் றாதிப் மஜ்லிஸ்களில், மலர்த்தட்டு ஏந்துவதில், பூசைகளில் பங்கேற்றலில், ஆராதனைகளில் ஈடுபடுதலில் அதனது தனித்துவம் தெளிவாகவே தெரிகின்றது.



அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்

இந்த நாட்டின் முஸ்லிம்கள் என்ற வகையில் நாம் எல்லோரும் மிக ஆழமாக உணர வேண்டிய ஒரு அடிப்படை யதார்த்தம் இன்னும் புரியப்படாமலேயே இருப்பது விசனத்துக்குரியது. அதாவது இந்தச் சமூகத்தை மிகச்சரியான சீரிய நேரிய பாதையில் வழிநடாத்தத் தேவையான தகுதி விதிகள் யாவும் மார்க்க அறிஞர்களையே சார்ந்துள்ள போதும் பொருளாதாரப் பின்னடைவும், அதிகாரப் பலமின்மையும் உலமாக்களை சமூகத்தளத்தை விட்டு பின்நோக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாகவே பல மௌலவிகள் அரசியலில் இருந்து ஒதுங்கிப் போனார்கள். சமூகத்தை வழிநடாத்த வேண்டிய அவர்களது வழிகாட்டல்கள், ஆலோசனைகள் அரசியல்வாதிகளால் தட்டிக் கழிக்கப்படுகின்றன. பல ஆலிம்கள் இந்த அப்பட்டமான யதார்த்தத்தை மறந்து 'வால்'பிடிப்புக்களிலும் முதுகு சொறிதல்களிலும், 'குடை'பிடிப்புகளிலும் திளைத்து தங்கள் பணியைப் புறக்கணித்துவிட்டார்கள். நேற்று 'நாரேதக்பீர்' என்ற சுலோகத்தை உரக்க உரத்து மக்கள் உணர்வைத் தட்டி விட்டவர்கள் அதன் அர்த்தத்தை புரியாத அடிமட்ட மனிதர்கள் ஆனால். இன்று தங்களது சுயலாபங்களுக்காக, "அல்லாஹு அக்பர்" போன்ற கோஷங்களை அர்த்தம் புரிந்தும் அரசியல் ஆதாயத்துக்காக உரத்துச் சொல்பவர்கள் உலமாக்கள் என்பதே மிக வேதனைக்குரியது.

முஸ்லிம் காங்கிரஸ் உலமாக்களின் ஆலோசனைகளைப் பெற்றால் ஆதாய அரசியல் நடத்த முடியாது என்பதை நன்றாகவே விளங்கி வைத்துள்ளது. இதன் காரணமாகவே அது உள்வாங்கியுள்ள சில மௌலவிமார்களும் சுயமாக சிந்தித்து முடிவெடுக்க முடியாத வெறும் தலையாட்டிப் பொம்மைகளாகப் போயுள்ளனர். போதாக்குறைக்கு சில மௌலவிகள் தங்களது சொந்த நலன்களுக்காவும், சமூக அந்தஸ்தின் மீதான அமோக மோகத்தாலும் காங்கிரஸ் அரசியல்வாதிகளுக்குப் பட்டமும் கொடுத்து பொன்னாடையும் போர்த்தி தனிமனித வழிபாடுகளிலும் இறங்கிவிட்டனர். அமைச்சர் அஷ்ரப்புக்கு மௌலவி. ஏ.சி.எம் புஹாரியினால் கொடுக்கப்பட்ட சமூகத்தலைவன் (செய்யிதுல் கவம்) என்ற நாமகரணமும், அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கு காத்தான்குடி ஸித்திக்கிய்யா அரபுக் கல்லூரியினால் வழங்கப்பட்ட மார்க்கத்தின் கிரீடம் (தாஜுல் மில்லத்) என்ற புகழ்மாலையும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

எது எப்படி இருந்தாலும் இன்றைய முஸ்லிம் காங்கிரசின் போக்குகள் உலமாக்களுக்கு ஒரு பெரும் சவாலாக மாறி வருகின்றமையை மாத்திரம் மிகத் துல்லியமாக அவதானிக்க முடிகிறது. காங்கிரசின் இந்தப் புதிய போக்கினை கீழ்வருமாறு பிரதானப் படுத்தமுடியும்.

1. உலமாக்களது சமூகப் பங்கை கீழ்மதிப்பீடு செய்து புறந்தள்ளுதலும், அரசியல் ரீதியான தலைமைக்கு ஒட்டுமொத்தமாக சமூகத்தை அடிபணிய வைத்தலும்.

   காலியில் பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யா அரபுக்கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் அஷ்ரப்பின் பேச்சில் இந்த உண்மையை நாம் தெளிவாக உணரலாம். தொப்பியையும், தலைப்பாகையையும் அணிந்து கொண்டு ஜிப்பாவையும், தாடியையும் பேணினால் மாத்திரம் மௌலவிகள் 'பத்வாக்' கொடுக்க முடியாது என்று அவர் உலமாக்களை குறைமதிப்பீடு செய்தமை அன்றைய தினகரனில் கூட பிரசுரமாகியிருந்தது. இதே கருத்தை 1997.06.19ல் சம்மாந்துறை "தப்லிக்குல் இஸ்லாம்" அரபுக்கல்லூரி பட்டமளிப்பு விழாவிலும் கூறியுள்ளார்.

2. உலமாக்களின் தீர்மானங்களை கருத்திலெடுக்காது அவர்களை புறக்கணிப்பதோடு தமது அதிகாரங்கள் மூலம் மார்க்க விரோத செயல்களுக்கு நியாயம் கற்பித்தல், தீகவாபி பூத்தட்டு ஏந்திய அஷ்ரப்புக்கு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா கொடுத்த எச்சரிக்கையை கணக்கில் எடுக்காதது முதல், காத்தான்குடியில் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அங்குள்ள உலமாக்களின் தீர்மானங்களுக்கு எதிராக மேற்கொண்ட எல்லா நடவடிக்கைகளும் இதற்கு சான்றுகளாகும்.

3. தங்களுக்கு சார்பாக குர்ஆனையும், ஹதீஸையும் கையாள சில மௌலவிமார்களை காங்கிரசினுள் உள்வாங்குதல், இதன் விளைவாகவே இன்றுபல மார்க்க மேதைகள் என்போர் காங்கிரசுக்கு குடைபிடிக்கவும் அதனது காட்டுக் கூச்சல்களால் காவுகொள்ளவும் படுகின்றனர். காங்கிரசின் உயர் மட்ட அரசியல் பீடத்தில் அமர்ந்துள்ள மௌலவி மஜீத், புஹாரி (சம்மாந்துறை) முதல் ஷியா சிந்தனையை இலங்கையில் பரப்ப துணைநிற்கும் இஸ்ஹாக் மௌலவி வரை இன்று முஸ்லிம் காங்கிரசின் ஊதுகுழல்களாக மாறியுள்ளமை இதன் பிரத்தியட்சமான வெளிப்பாடுகளே.

அகில இலங்கை ரீதியாகவும், ஊர்வாரியாகவும் உள்ள உலமாக்கள் சபை தங்களது பலவீனங்களைக் கண்டு அவர்களுக்குள்ளே நிலவும் கருத்து பேதங்களை மறந்து ஒற்றுமையாகவும், பலமாகவும் செயற்படுமானால் இந்தப் போலி அரசியல் அதிகாரத்தையே தகர்த்தெறிந்து முஸ்லிம் சமூகத்தின் இயங்கு திசையையும், அதன் செல்நெறியையும் மிகத் தீர்க்கமாகத் தீர்மானிக்க முடியும். இது குறித்து முஸ்லிம் புத்திஜீவிகள், மார்க்க அறிஞர்கள், சிந்திப் பார் களா என் பது தான் எமக்கு முன் னால் எழு ந்து நிற்கும் கேள்வி.

மு.காங் கிரஸ் தலை மைத்துவம் ஒரு வகை யில் "ஞானம்" கொண் டது. எந்தெந்த இட ங்களில் எப்படி எப் படிப் பேச வேண்டும் என்ற வே தாந்தம் அத ற்கு அத்துப் படி. காத் தான்குடி என்றால் மு. காங்கிரசின் விதை விழுந்த மண்ணின் மைந்தர்களே! என்பார். அக்கரைப்பற்றில் உரையாற்றினால் கற்றவர்களே! உற்றவர்களே என்று விழிப்பார். ஒலுவிலில் பிரச்சார மேடையில் முஸ்லிம் காங்கிரசின் போராளிகளே! என்பார். சமுதாயத்தை சாமர்த்தியமாய் வளைத்துப் பிடிக்கும் மாய வித்தை அதன் தலைமைக்கு கைவந்த கலை. காங்கிரசின் அரசியல் மேடைகள் இப்போது ஒரு புதிய "பாஷன்"னையும் கையாள்கிறது. அது தான் பகல்நேர ஒரு உரை மேடை. அதைத்தொடர்ந்து இரவு வேளையில் ஒரு "இசை நிகழ்ச்சி". வாக்குத் தலைகளை கச்சிதமாக பிடித்துக் கொள்ள போடப்படும் பொறிகள் இவை.

அமைச்சர் அஷ்ரப் அவர்கள் இப்போது புரியும் இந்தச் செயல்களை தட்டிக் கேட்க யாரும் இல்லை. ஊரில் இளைஞர் சேவை மன்றம், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் இலக்கியப் பேரவை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்படும் கலை விழாக்கள் மார்க்கத்துக்கு முரணானவை என்று அதனை தடுத்தி நிறுத்தும் உலமாக்கள் அஷ்ரப்பின் இசைநிகழ்ச்சிகளுக்கு முன்னால் வாய்பொத்தி மௌனம் காப்பதன் மர்மம் புரியவேயில்லை! சமூக விடுதலை!, விடுதலைப் போராட்டம்!!, இது உணர்வுபூர்வமான போராட்டம் போராளிகளே! போன்ற வார்த்தை மாத்திரைகளால் இந்தச் சமுதாயத்தை மயக்கி மார்க்கத்தின் பெயரால் மக்கள் உணர்வுகளை கிளர்ந்துவிட்டு விடுதலைப் போராட்டம் புரியும் அஷ்ரப்பின் இத்தகு அரசியல் கோமாளித் தனங்களை இந்நாட்டின் புத்திஜீவிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எங்கள் வேணவா. இளைஞர்கள் இது குறித்து சிந்திப்பார்களா?

**இப்னு ருஷ்த்**

நன்றி - நூலகத்திட்டம்



## பதுளை மகளிர் மகா வித்தியாலய பர்தா விவகாரம்:

# கலாசார மோதலும் பலிக்கடாக்களாகும் மாணவிகளும்!

பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலய 'பர்தா விவகாரம்' தொடர்பான மாணவிகளின் பகிஷ்கரிப்பு நடவடிக்கை ஒரு மாதம் கடந்த நிலையில் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. பாடசாலையில் கற்பிக்கும் இரு முஸ்லிம் ஆசிரியைகள் தங்கள் மதக் கலாசாரத்திற்கேற்ப ஆடையணிந்து வரத்தொடங்கியமை 'பாடசாலைக் கலாசாரத்திற்கு' முரணானது என்று கருதப்பட்டு, அவர்களை அவ்வாடையுடன் வகுப்பிற்கு செல்ல விடாது தடுத்தமையே பிரச்சினையாக உருவாகியுள்ளது.

பரஸ்பரப் புரிந்துணர்வுடனும், பல்லின சமூகச் சூழலில் நிலவ வேண்டிய மத, கலாசார சகிப்புத் தன்மையுடனும் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இப் பிரச்சினை மாணவர்களின் கல்வியில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்குச் சென்றிருப்பது மிகவும் கவலைக்குரியதாகும். இந்த மாணவர்களின் கல்வி விடயத்தில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பும் கரிசனையுடன் ஈடுபட்டதாக இது வரை தெரியவில்லை. அத்துடன் இங்கு தோன்றியிருக்கும் பிரச்சினையானது மாணவர்கள் இவ்வளவு காலமும் பகிஷ்கரிக்குமளவுக்கு அவர்களுடன் நேரடித் தொடர்புற்றதோ, அவர்களை நேரடியாக பாதிக்கின்றதுமான ஒன்றல்ல. இதில் இருந்து இம் மாணவர்களின் மட்டுமான பகிஷ்கரிப்பு பின்னணியைக் கொண்டுள்ளது என்று அறிய முடிகிறது. அத்துடன் சம்பந்தப்பட்ட அதிபர்,அதை ஏற்றுப் பின்பற்றும் ஏனைய ஆசிரியைகள் வழமை போல் கடமைக்குத் திரும்பி மாணவிகளைக் கொண்டு தாங்கள் தப்பித்துக் கொள்ளும் ஓர் உத்தியையும் கையாண்டு வருகிறார்கள். 'பாடசாலைக் கலாசாரம்' என்று சொல்லும் அதிபர், ஏனைய ஆசிரியைகள் ஏன் அக் கலாசாரம் மீறப்படுவதாகக் கூறும் போது அல்லது அதிபரின் கட்டளை மீறப்படுவதாக கருதும் போது பகிஷ்கரிப்பில் ஈடுபடவில்லை என பலரும் கேட்கிறார்கள். இப்போது பர்தா போடும் இரு முஸ்லிம் ஆசிரியைகள், அதை எதிர்த்து பகிஷ்கரிக்கும் பாடசாலை மாணவிகள் என்ற உருவை ஏற்படுத்தியிருக்கும் இப்பிரச்சினை தொடர்பான ஒரு ஒரு கள நோக்கை மேற்கொள்வதற்கு சரிநிகர் பதுளை சென்றிருந்தது.

குறித்த இப் பாடசாலையான பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயம் பதுளை நகரை அண்மித்து ஓர் அமைதியான சூழலில் போதிய இடப்பரப்பைக் கொண்டு அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இது ஒரு கிறிஸ்தவ பாடசாலையாகவே இருந்தது. பாடசாலை புனரமைப்பின் பின் இது கலவன் பாடசாலையாக இருந்தது. பின்னர் பலரின் வேண்டுகோளின் படி தமிழ் மகளிர் மகாவித்தியாலயமாக மாற்றம் பெற்றது. இப்பாடசாலையின் மத்தியில் இன்றும் கூட ஒரு கிறிஸ்தவ கன்னியர் மடமும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் சுமார் 1377 மாணவிகள் கல்வி கற்கின்றனர். இவர்களில் 204 அளவில் முஸ்லிம் மாணவிகள் உள்ளனர். எட்டு முஸ்லிம் ஆசிரியைகள் உட்பட மொத்தம் 38 ஆசிரியைகள் கற்பிக்கின்றனர்.தற்போது முஸ்லிம் மாணவிகள் மட்டுமே பாடசாலை சென்று வருவது குறிப்பிடத்தக்கது.


தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகக் கூறி நியாயம் கோரி மீயுயர் நீதி மன்றம் வரை சென்று இப் பிரச்சினையின் தீர்ப்பை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் இது தொடர்பாக கதைப்பதிலும், கருத்துத் தெரிவிப்பதிலும் மிகுந்த தயக்கத்தையே அதிபரும், ஆசிரியைகளும் வெளிப்படுத்தினர்.

எமக்குக் கிடைத்த தகவலின் படி இவ்வருட முஸ்லிம்களின் ஹஜ் பெருநாளுக்கு மறு தினமே குறித்த ஆசிரியைகள் ஹிஜாப் -பர்தா அணிந்து வந்துள்ளதாக அறிய முடிகிறது. அப்போதே இவர்கள் இவ்வாறு அணிந்து வரவேண்டாம் என்று கேட்கப் பட்டதாக தெரிகிறது. இவ்வாரம்பச் சம்பவத்தின் பின்னர் ஆசிரியைகள் இது தொடர்பில் கல்வித் திணைக்களத்தில் முறையிட்ட போது திணைக்களச் செயலாளர் பாடசாலைக்கு வந்து அவர்கள் அவ்வாடையுடன் வருவதற்கு அனுமதியுண்டு என்று தெரிவித்திருக்கிறார். இதிலிருந்து இப்பிரச்சினை மேலும் சூடுபிடிக்கத் தொடங்கி கௌரவ, அரசியல் தன்மானப் பிரச்சினைகளாக வெளித்தெரியத் தொடங்கியுள்ளது.

அதிபரிடம் இவ்விடயம் தொடர்பில் வினவ 'பாடசாலைக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவது அல்லது அவ்வாறு ஒன்று இருப்பது தவறா என்று கேட்கிறார். உண்மையில் பல்லின மத கலாசார சூழல் கொண்ட இலங்கை போன்ற நாட்டில், எந்தப் பாடசாலையிலும் எவரும் படிக்கலாம் என்ற நெகிழ்வான கல்விக்கோட்பாடு கொண்ட நாட்டில் அதிபர் குறிப்பிடும் பாடசாலைக் கலாசாரம் எதுவென்று அடையாளப்படுத்த முடியவில்லை. 'இன, மத ரீதியாக இதை நாங்கள் நோக்கவில்லை' என்று கூறும் அதிபர் பொட்டு எனும் இன அல்லது மத அடையாளத்தை பர்தா எனும் இன்னொரு மத அடையாளத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுத்திப் பார்க்கிறார் என்பதும் அதை தான் கூறும் 'ஸ்கூல் கல்ச்சர்'க்குள் எவ்வாறு அடக்குகிறார் என்பதும் கேள்வியாக உள்ளது. அத்துடன் அவர் பொலிசார், சட்டத்தரணிகள் தமக்கென்றொரு தனித்த நிலையான ஆடையை உருவாக்கி அணிந்து கொண்டிருக்கும் போது நாங்களும் ஆசிரியைகளுக்கென்று நிலையான ஓர் ஆடையை நடைமுறைப்படுத்தினால் என்னவென்று வினவுகிறார். எனினும் இவர் உதாரணம் காட்டிய பொலிசாரின் ஆடை ஆரம்பத்தில் இருந்த வடிவை விட்டும் பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு வடிவையும் நிறத்தையும் பெற்று மாறியிருப்பதை இன்று வரை அவதானிக்கலாம். அத்துடன் அதன் பிரிவுகளுக்கேற்பவும் பெண்களுக்கென்றும் வேறு வடிவுகளிலும் இருப்பதையும் அவதானிக்கையில் அதிபரின் கூற்றோடு ஒன்றிக்க முடியவில்லை. அத்துடன் அண்மையில் பிரிட்டனில் பாடசாலை ஒன்று மாணவியரின் ஆடை இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று குறித்த வடிவத்தை உத்தரவிட அது சூழலுக்கு ஏற்ப பொருத்த மற்றது என்று மேன்முறையீடு செய்து வெற்றி கண்ட ஒரு தாயின் விடயமும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வாழும் பல்லின மத கலாசார தனித்துவமுடையவர்கள் அவர்களின் தனித்துவ அடையாள அங்கீகாரமுடையவர்கள். இது இலங்கையின் அரச யாப்பும் அங்கீகரித்த விடயம். இது போக பொதுவாகவே முஸ்லிம் பெண்களின் ஆடைகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுவது உலகளவில் இடம் பெறுகிற விடயம். பிரான்ஸ் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகள் பர்தா உடை அணிய அனுமதி கோரி ஆர்ப்பாட்டம் செய்ததும், மதச்சார்பற்ற துருக்கியின் பாரா-ளுமன்றத்தில் பெண் எம்.பி. ஒருவர் இவ்வாடை அணிந்ததால் ஏற்பட்ட சச்சரவும் அண்மையில் இடம் பெற்றவை.

இந்தப் பாடசாலையின் 'கலாசாரம்' பற்றி குறித்த ஆசிரியைகளில் ஒருவரிடம் வினவ 'அவ்வாறுதான் இருந்தாலும், நாங்கள் மீறவில்லையே... இங்கு சொல்லப்படுகின்ற குறித்த நிற சாரியைத்தான் அணிகிறோம். மற்றப்படி அதே நிறத்திலேயே எங்கள் மதக் கலாசாரப்படி ஹிஜாபும் அணிகிறோம்' என்கிறார். 'பல வருடங்களாக இக் கலாசாரம் பின் பற்றப்படுகிறது. ஏனைய முஸ்லிம் ஆசிரியைகள் சாதாரணமாகவே வருகிறார்கள் இன்னொரு ஆசிரியை வாசலில் ஹிஜாபைக் கழற்றிவிடுகிறார்' என்பதையும் இங்கு அதிபர் சுட்டிக்காட்டுகிறார். எனினும் பதுளை வாசியொருவர் 1990 கள் அளவில் ஒரு முஸ்லிம் ஆசிரியை இவ்வாறு ஆடையணிந்து வந்துள்ளார் எனவும் அப்போது இவ்வெதிர்ப்பு இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். அத்துடன் ஒருவர் தன் விருப்புக்கேற்ற ஆடை அணிவதிலும், இன்னொருவர் அணியும் ஆடையை அகற்றச் சொல்வதற்குமிடையில் வித்தியாசமிருப்பதையும் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள்.



ஊவாவின் பெரிய சிங்களப் பாடசாலையொன்றிலும், ஏனைய சில தேசியப் பாடசாலைகளிலும் கூட முஸ்லிம் மாணவிகள் உட்பட ஆசிரியைகள் கூட இவ்வாறான உடையிலேயே செல்கிறார்கள் என்று எங்களுடன் உரையாடிய நபர் ஒருவர் குறிப்பிட்டார். பதுளையைச் சேர்ந்த முத்தன் என்பவர் எமக்கு அனுப்பியுள்ள தகவல்களில் இந்நிலை 'மதக்கலவரத்தை ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தை தோற்றுவித்'துள்ளதுடன் தமிழ் ஆசிரியர்கள் முஸ்லிம் பிள்ளைகளுக்கு டியூஷன் நடத்துவதில்லை. அதிகமான பெண்கள் 'பர்தா' அணியத் தொடங்கிவிட்டனர்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் அனுப்பியுள்ள தகவல்களில் பதுளை தமிழ் பேசும் மக்களின் பாடசாலைக் கல்வி நிலை தொடர்பில் நிறைய விடயங்களை அனுப்பியுள்ளார். அவற்றில் பதுளை மாவட்டத்தில் நான்கு தமிழ்ப்பாடசாலைகள் (சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், சரஸ்வதி மத்திய மகா விதியாலயம், அல்-அதான் மகாவித்தியாலயம், தமிழ் மகளிர் மகா வித்தியாலயம் ) மாத்திரமே உள்ளன என்றும், அவற்றில் நிறையப் பிரச்சினைகள் நிலவுகிறதென்றும் ஆதங்கப்பட்டுள்ளார்.



23.03.99ல் மாலை 5 மணியளவில் தமிழ் மகளிர் மகாவித்தியாலயம் இந்து மகளிர் மகா வித்தியாலயமாக பெயர் மாற்றும் பிரேரணை முதலமைச்சர் வரை சென்று சென்னன் எம்.பியால் இது அமுல்படுத்தப்பட தவறவிடப்பட்டதாகவும், இதையறிந்த முஸ்லிம்கள் இரு ஆசிரியைகளை அதுவும் அதிபருடன் நெருங்கிய தொடர்புள்ள ஆசிரியைகளை பர்தாவுடன் செல்லத் தூண்டியதாகவும் ஒரு தரப்பில் கூறப்படுகிறது என்றாலும் பர்தா அணிவது ஒன்றும் அதிகப்படியான இந்து மாணவிகளைக் கொண்ட பாடசாலையை இந்துப்பாடசாலையாக பிரேரித்து முதலமைச்சரின் அனுமதியின் பின் மாற்றிவிடக்கூடிய ஒன்றல்ல இலங்கையின் எத்தனையோ இந்துப் பாடசாலைகள் இந்தளவு முஸ்லிம் மாணவர்களைக் கொண்டிராத போதும் பர்தாவுக்கு தடை விதித்தில்லை என்பதையும் முஸ்லிம் தரப்பில் சிலர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இங்கு இவ்விடயத்தை வெறும் உடை என்ற அளவில் நோக்காது மதக் கலாசாரத் தனித்துவமுடைய சிறுபான்மையினரின் அடையாளம் தொடர்பான ஒன்றாக நோக்குவதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இன்று 'வீரவிதானய'வின் செயற்பாடுகள் கூட சிறுபான்மை அடையாளங்களுடன் மோதுவதாகவே உள்ளது. அத்துடன் அடையாள அழிப்பு அல்லது மறுப்பே இலங்கையின் இன்றைய எரியும் பிரச்சினைக்கு அடித்தளம் என்பதும் நாம் பரந்த மனதுடன் புரிந்து கொள்ளவேண்டிய ஒன்று! 'பர்தா தானே கழட்டுங்கள் பொட்டுத்தானே அழியுங்கள்' என்பதெல்லாம் எமது கலாசார அடையாளங்கள், தனித்துவங்களுடே சாதாரணமாகப் பார்க்கக் கூடிய விடயங்களல்ல என்பதில் எல்லோருக்கும் பொதுத் தெளிவு வேண்டும்.

இன்று இந்தப் பிரச்சினை அரசியல் கலந்த தன்மானப் பிரச்சினையாக மாறியுள்ளது தான் அவலம். இதனால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நூற்றுக்கணக்கான பிள்ளைகளின் கல்வி தொடர்பில் பெற்றோர் கூட அக்கறையற்றிருப்பது இன்னும் துயர் தருகிறது.

அடிப்படை உரிமைகள் என்ற வகையிலும் கல்விச் சுற்று நிரூப அங்கீகாரமுள்ள விடயம் என்ற வகையிலும் இவற்றுக்கும் மேலால், குறித்த ஆடையுடன் வரலாம் என்று இடைக்கால உத்தரவிடப் பட்டபின்னும் இன்னும் பலர் பிடிவாதமாக இருப்பது வேண்டாத, அடிப்படை அற்ற பிரச்சினையில் மீயுயர் நீதிமன்றத் தீர்ப்பிற்காய் காத்திருந்து காலத்தையும், கல்வியையும் பாழடித்து இன முரண்களை, சகிப்பின்மையை பாடசாலைகளில் தோற்றுவிக்கத்தான் செய்யும்.

மாணவர்களின் பகிஷ்கரிப்பைத் தூண்டியதிலும் அதை பல பாடசாலைகளுக்குப் பரப்பியதிலும் இ.தொ.கா. சார்ந்த சில பெரும்புள்ளிகள் இருப்பதையும் இவ்வடயம் தொடர்பில் அவதானிக்க முடிகிறது. இவர்களே பகிஷ்கரிப்பைப் பரவலாக்கி ஆதாயம் தேட முயன்றவர்கள் எனக்கூறப்படுகிறது. சிங்கள வீரவிதானய இ.தொ.கா. காரியாலயத்தை சேதப்படுத்தி, கொடியை எரித்து இனவாதமாக நடந்ததை கண்டித்து அவர்களுக்கு ஆதரவாக அவர்கள் நடாத்த இருந்த ஆர்ப்பாட்டத்திற்கும் ஆதரவு தெரிவித்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி இ.தொ.க. சிலரின் இவ்வினவாத தூண்டுகோளைச் சுட்டிக்காட்டி பகிரங்க ஆட்சேபம் தெரிவித்திருந்ததும் இதன் பின்னாலுள்ள அரசியல் பின்ணியைக் காட்டுகிறது. பதுளை நகரில் ஒட்டப்பட்டிருக்கும் சில போஸ்டர்களும் அரசியல் பின்னணியினரை அம்பலப்படுத்தியருக்கின்றன.

என்றாலும் இன்று இவ் அரசியல் பின்னணியினர் காணாமல் போய்விட்டனர். அதிபர் மாத்திரம் எல்லோரின் கணைகளுக்கும் உள்ளானவராக மாறிப்போயிருக்கிறார். அரசியல் வாதிகள் மௌனமான இடத்தை இப்போது இளம் வர்த்தகர்களையும், ஏனைய சிலரையும் கொண்டு உருவாக்கப்பட்ட 'தமிழ்க் கலாசார ஒன்றியம்' நிரப்பத் தொடங்கியுள்ளது. இவ்வமைப்பே இன்றைய பிடிவாதத்திற்கு காரணமாக இருக்கிறது. வழக்காடி வெல்லும் வரை பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டாமென்றும், ஆசிரியைகள் கற்பிக்க வேண்டாம் என்றும் இவ்வமைப்பே இன்று கோரிவருகிறது. எனினும் தமிழ்த் தரப்பில் வாதாட எந்த தமிழ்ச் சட்டவல்லுனர்களும் முடியாது என்று மறுத்திருக்கின்றனர். அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்த்து வாதிட முடியுமே தவிர ஆதரித்து வாதிட முடியாது எனவும் காரணம் தெரிவித்துள்ளனர். மேலும் இத்தகராறைப் பெரிது படுத்தி தமிழர்களுக்கெதிரான போஸ்டர்களும் ஒட்டப்பட்டிருக்கின்றன என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கதும் வருந்தத்தக்கதுமான ஒரு விடயமாகும். மீயுயர் நீதி மன்றத் தீர்ப்பினால் ஏற்படும் சாதக, பாதக நிலைகள் எங்கு கொண்டு போய்ச் சேர்க்கும் என்பது இன்னும் அச்சம் தருகிற கேள்வி! அணியும் இடைக்கால உத்தரவைப்பற்றி "They have won the game" என்று அதிபர் குறிப்பிடுகிறார். இந்த Game என்ற பதப்பிரயோகமே பாரிய ஒன்றாய்ப் படுகிறது. அதிபர் கருதும் இந்த Gameன் வெற்றி தோல்வி -அது யாருக்காக இருந்தாலும் எந்தத் தரப்பாலும சகிக்கப்படப் போகும் ஒன்றல்ல. மீண்டும் அங்கே மாணவிகளின் கவ்வியில்தான் அடிவிழும். தனது காலத்தில் தனக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் ஏன் தானோ இந்தப் பிரச்சினைகள் தோன்றியுள்ளனவோ என மன ஆதங்கப்படும் அதிபரிடம், "இவ்வாறான நிலை வேறொரு சமூகப்பிரிவினரால் உங்களுக்கு ஏற்படுமென்றால் உ+ம்: பொட்டு வைக்கக் கூடாது என்று கூறினால் என்ன செய்வீர்கள்' என வினவ தானென்றால் தனிப்பட்ட முறையில் தனக்குப் பிடிக்காது ஏற்றுக்கொள்ள முடியாத சூழல் நில்வுமாயின் அதிலிருந்து தவிர்ந்து கொள்வேன்... அதுதானே சிறந்ததென்றும் தன் கருத்தை சூசகமாக வெளிப்படுத்துகிறார். எனினும் இது இலங்கையின் கல்விச் சூழலில் ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தொன்று அல்ல என்பதை எவரும் அறிவர் ஏனென்றால் பாடசாலை நியமனங்கள் என்பது உறவுக்காரரின் திருமண வீட்டுக்குப் போவது போன்றதல்ல.

பல கோணங்கள் எடுத்திருக்கும்

— 20

நன்றி - நூலகத்திட்டம்



# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில்
# சூறாவளி!

*"இன்னும் ஈரமாக உள்ள என்*
*சொற்களுக்குள்*
*ஒரு வலைக்குள் நுழைவது போல்*
*நுழைந்து*
*அவற்றின் சாரத்தை*
*சந்தேகத்துடன் ஆராய உன்னால்*
*முடியாது"*
*- ரீட்டா பௌமி பப்பாஸ்*

பல்கலைக்கழகம் முற்றிலும் சுயாதீனமான நிறுவனமாக இயங்க வேண்டுமென்பது உலகெங்குமே எழுதப்படாத விதியாக இருந்து வருகிறது. ஒரு பல்கலைக்கழகத்தின் நம்பகத்தன்மையானது வெளித் தலையீடுகளையெல்லாம் எடுத்தெறிந்து, நடுநிலைத் தன்மையுடன் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்துவதில் தான் தங்கியிருக்கிறது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பத்தோடு பதினோராவது பல்கலைக்கழகமல்ல. அதன் பின்னே ஒட்டுமொத்தமான ஒரு சமூகத்தின் எதிர்பார்ப்புகள் படிந்துள்ளன. ஒரு மக்கள் திரளின் உன்னதமான எதிர்காலம் பற்றிய கனவுகள் அதன் உருவாக்கத்துள் உறைந்து கிடக்கின்றன. இப்படிப்பட்ட பொறுப்பு வாய்ந்த கல்வி நிறுவனமொன்று எவ்வாறு இயங்க வேண்டுமென்பது சொல்லித் தெரிய வேண்டிய தொன்றல்ல. அதனைப் பாரிய இலக்குகளை நோக்கி நகர்த்த வேண்டிய வரலாற்றுக் கடமை நம் முன்னே உள்ளது.

வரலாற்று ஓட்டம் எப்போதும் நமக்குச் சாதகமாக அமைந்து விடுவதில்லை. ஆயினும், இந்த வரலாற்று நகர்வைத் தமக்குச் சாதகமாகத் திசைப்படுத்தி, புதிய தளத்தில் முன் கொண்டு செல்வது எல்லோருக்கும் சாத்தியமான விடயமும் அல்ல. இந்த மாபெரும் பணியைத் தமது தோள்களிலே ஏந்திச் செல்பவர்கள் மிகவும் சொற்பமானவர்கள் தான். எண்ணிக்கையில் குறைந்த இந்த மனிதர்கள்தான் எதிரே வரப் போகின்ற பல நூற்றாண்டு கால மானுட சமூகங்களின் தலைவிதியை மாற்றியமைக்கப் போகிறவர்கள். இத்தகைய மனிதர்களைத் தான் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும். நமது பல்கலைக்கழகத்தின் வெளியீடுகள் அவ்வாறு அமையுமா என்ற நியாயமான அச்சம் இன்றும் நமக்கு உள்ளது.

உலக வரலாற்றின் பக்கங்களையெல்லாம் புரட்டினால் பல்கலைக்கழகங்கள் தான் பல புரட்சிகளினதும், சமூக மாற்றங்களினதும் கருவறைகளாக இருந்து வந்துள்ளன. எங்கு அடக்குமுறையும், ஒடுக்குமுறையும் திணிக்கப்படுமோ அங்கு புரட்சி வெடிக்குமென்பது எவ்வாறு ஒரு நியதியாக உள்ளதோ அதேபோல் அப்புரட்சி பல்கலைக் கழகங்களிலிருந்து தான் மேற்கிளம்புமென்பதும் ஒரு நியதியாக உள்ளதெனலாம். ஆனால், துரதிருஷ்டவசமாக இன்று பல்கலைக்கழகங்களினுள்ளேயே அடக்குமுறையும், மறைமுக நெருக்குதல்களும் அதிகரித்து வருகின்றமை மிகுந்த வேதனைக்குரியதாகும். சுயநலவாதிகளின் குகை என்று சொல்லுமளவுக்கு ஊழல், அதிகார துஷ்பிரயோகம், குழிபறிப்புகள் போன்ற ஏராளமான வெட்கக் கேடான சங்கதிகளால் பல்கலைக்கழகங்களின் புனிதம் களங்கப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பின்னணியில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை நோக்கினால் ஒரு பல்கலைக் கழகமாக அது இன்னமும் நன்கு ஸ்தாபிதமடையவில்லை என்பது தெளிவு. அது வளர்ச்சிக் கால கட்டத்துள் நடைபயில்கிறது. வளர்ந்து வரும் ஒரு பல்கலைக் கழகம் என்ற வகையில் நிறையப் போதாமைகளும், அதற்கே உரித்தான இயல்பான குறைபாடுகளும் நிலவுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால், இந்த வளர்ந்து வரும் பல்கலைக்கழகம் என்ற விடயத்தை சிலர் தங்களது விருப்பு வெறுப்புகளைத் தவறாகப்பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்திக் கொள்வதைத்தான் எந்த வகையிலும் அனுமதிக்கமுடியாது. பல்கலைக்கழகத்தின் உயர் நோக்கங்களை அடைவதற்கு தடைக்கல்லாக உள்ள சக்திகளை மாணவர்கள் இனம் கண்டிருக்கிறார்கள்.

இன்று தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வெடித்திருப்பது இப்படிப்பட்ட முதுகெலும்பில்லாத அரைகுறைகளுக்கு எதிராகத்தான்.

பல்கலைக்கழகமென்பது மாணவர்களுக்காகவே உருவாக்கப்பட்டதாகும். அதன் உயிர்த்துடிப்பான சக்தி அவர்களே. உலகெங்கும் இந்த மாணவ சக்தி சாதித்துக்காட்டிய மகத்தான விளைவுகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மனங்கொள்ள வேண்டும். இதற்கு மிகச் சமீபத்திய உதாரணம் இந்தோனேஷியாவில் வெகுண்டெழுந்த மாணவர் எழுச்சி, சுஹாட்டோ என்ற கொடுங்கோலனைப் பதவியிறங்கச் செய்ததாகும். இந்த இளைஞர்கள் தான் புதிய புதிய சிந்தனைகளின் பிறப்பிடங்கள். இவர்கள் தான் சமூகமாற்றத்தின் தொடக்கப்புள்ளிகள். இவர்கள் ஏந்தியிருக்கும் தீப்பொறி ஆக்கபூர்வமான திசைகளை நோக்கி ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமேயொழிய அழிவின், விளிம்பில் ஊசலாடக் கூடாது. இவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு சிந்திக்கும் மாணவ சக்தியை தென்கிழக்குப் பல்கலைக்கழக நிருவாகம் தவறாக எடை போடுகிறது. மாணவ சக்தியைக் குறைத்து மதிப்பிடுவதன் பிரதிபலனை மிக விரைவிலே இவர்கள் உணர்வார்கள். இன்று திரண்டிருக்கும் இந்த மாணவ அலை தனது முழுப்பலத்தையும் வெளிப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் வராமலா போய்விடும்?

எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்றிவிட முடியாது. அநீதி சதாவும் ஆட்சி செலுத்துவதில்லை. எப்போதும் இறுதி வெற்றி நியாயத்துக்கே. சத்தியம் தோற்று நாம் வாழ்வதை விடவும் மிகக் கேவலமானது வேறொன்றுமில்லை. அப்படிப்பட்ட முதுகெலும்பில்லாத மாணவ சமூகத்தை அல்லது இளைஞர் சக்தியை ஒரு சமூகம் பிரசவிக்குமெனில் அது அழிந்து நாசமாகக் கடவது. நாம் மடிந்தாவது சத்தியம் ஜெயிக்க வேண்டும். இதைத் தான் தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் விரும்புகிறார்கள். முதுகுசொறிகிற கேவலமான பிழைப்புவாதிகளாக நாங்கள் இருக்க விரும்பவில்லை. எதிலும் உண்மைத் தன்மையுடன் செயற்பட வேண்டுமென்பதே எமது உயர்ந்த ஆசை. இந்த உன்னதமான எதிர்பார்ப்பையே எங்களது ஆழ்மனங்களுள் விதைத்துள்ளோம்.

பல்கலைக்கழகத்தில் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் மேலாக மதிக்கப்பட வேண்டும். முரண்பட்ட கருத்துக்களினதும் மதிக்கப்பட்ட வேண்டும். முரண்பட்ட கருத்துக்களினதும், அபிப்பிராய பேதங்களினதும் சங்கமத்தினூடாகத் தான் புதிய பார்வைகளும், புதிய சிந்தனைகளும், புதிய கருதுகோள்களும் மேற்கிளம்பும். இந்த உண்மைகளை உணராது தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களது கருத்துச் சுதந்திரம் நசுக்கப்படுகிறது. மாணவர் என்பவர் சிந்திக்கத்தெரியாதவர் என்று அங்கு ஒரு சிலர் புரிந்து வைத்திருக்கிறார்கள். தொடர்ந்தும் ஒரே சூழலுக்குள் நின்று சுழலும் செக்குமாடுகள் போல் மாணவ சமூகத்தை யாரேனும் கருதுவார்களாயிருந்தால் அவர்கள் மிகத்தெளிவான முட்டாள்களே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சிந்திப்பதே பாவம் என்று இவர்கள் நமக்குப் புத்திமதிகள் சொன்னாலும் ஆச்சரியமில்லை.

ஒரு குறிப்பிட்ட கருத்தை மட்டுமோ அல்லது ஒரு கட்சியின் கருத்தை மட்டுமோ அல்லது நிருவாகத்துக்குச் சார்பான கருத்தை மட்டுமோ தான் பேசவேண்டுமென்று யாரும் யாரையும் நிர்ப்பந்திக்க முடியாது. மாற்றுக் கருத்துக்கு இடமளிக்க மறுப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். கருத்துச் சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதரதும் பிறப்புரிமை என்பதை எல்லோரும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை ஒரு ஆரோக்கியமான கல்வி நிறுவனமாகக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நிருவாகத்தினருக்கு மட்டுமே உரித்தானதொன்றல்ல. மாணவ சமூகமும் அப்பணியின் ஆக்கபூர்வமான பங்காளிகள். ஆனால், துரதிஷ்டவசமாக இன்று பல்கலைக்கழக நிருவாகத்தினருக்கும், மாணவர்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்து வருகிறது. இவ்விடைவெளியை எவ்வளவு வேகமாகக் குறைக்க முடியுமோ அவ்வளவு அவசரமாக இந்நிறுவனத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம். மாறாக,இவ்விடைவெளியை அதிகரிக்கும் வகையில்தான் பல்கலைக்கழக நிர்வாகம் நடந்து கொள்கிறது. நிர்வாகத்துக்கும் மாணவர்களுக்குமிடையே பாலமாகத்திகழ்ந்து பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்க் வேண்டிய மாணவ பேரவை இன்னமும் அமைக்கப்படவில்லை என்பதை மிகுந்த வேதனையுடன் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

மேலும் கடந்த 25.06.1999 வெள்ளியன்று பல்கலைக்கழக மாணவரொருவர் விரிவுரை மண்டபத்தில் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒருவர் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. இது மாணவர்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சிரேஷ்ட மாணவ ஆலோசகர் இதன் பின்னணியில் இருப்பதாக மாணவர்கள் நம்புகிறார்கள். சர்ச்சைக்குரிய அந்த நபர் சிரேஷ்ட மாணவ ஆலோசகரின் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமல்லாது சிரேஷ்ட மாணவ ஆலோசகர் தொடர்ந்தும் பாரபட்சமாக நடந்து கொள்வதாக மாணவர்கள் தொடர்ந்து புகார் கூறி வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலைகளும் அவ்வப்போது ஏற்பட்ட சிறுசிறு சம்பவங்களும் மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி அமைதியின்மைக்கு வழிவகுத்தது. இதன் காரணமாக கடந்த 29.06.99 செவ்வாய்க்கிழமையன்று பெருந்தொகையான மாணவர்கள் ஒலுவில் வளாகத்தில் ஒன்றுகூடி இவ்வமைதியின்மைக்குத் திருப்திகரமான தீர்வொன்றைக் காணவேண்டும் என முடிவு செய்தனர். இவ்வொன்று கூடலின் போது பிரதானமான மூன்று கோரிக்கைகளை முன்வைப்பதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பல்கலைக்கழக உயர் நிருவாக அதிகாரிகளுக்கும், மாணவர்களுக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் பினவரும் மூன்று கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

1. மாணவ பேரவை அமைப்பது தொடர்பான உப விதிகளின் 5 (i) ஷரத்தின் பிரகாரம் மாணவ பேரவைத் தேர்தலுக்கான அறிவித்தலை இரு வாரங்களுள் பல்கலைக்கழகப் பதிவாளர் விடுத்திருக்க வேண்டும். ஆனால், இரு மாதங்களாகியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக மாணவர்கள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்ட போதிலும் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை. எனவே, உடனடியாக மாணவர் பேரவை அமைப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
2. மாணவரொருவர் விரிவுரை மண்டபத்தில் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட சகலரும் பாரபட்சமற்ற முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, உண்மையான குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும்.
3. சிரேஷ்ட மாணவ ஆலோசகர் தொடர்ந்தும் பாரபட்சமாக நடந்து கொள்வதனால் அவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்து, தகுதியான ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க வேண்டும்.

மேற்கூறிய மூன்று கோரிக்கைளுடன் மாணவர்களது பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக பெருந்தொகையான மாணவர்கள் ஒப்பமிட்ட மகஜரொன்று தற்போது நிருவாகத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவை உரிய முறையில் கவனத்திற் கொள்ளப்படாதவிடத்து, மாணவர்கள் உயர் நீதிமன்றத்தில் நீதி கோரி வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர். மேலும், இக்கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக சுழற்சிமுறை உண்ணாவிரதம் போன்ற முற்றிலும் சாத்வீகமான போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராக உள்ளனர். பல்கலைக்கழக நிருவாகம் மாணவர்களது உணர்வுகளை மதித்து நடந்து கொள்வதில் தொடர்ந்தும் அலட்சியமாக நடந்து கொள்ளுமெனில், பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படுவதன் மூலம் ஒரு கல்வி நிறுவனத்தின் சீரழிவு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடும் அபாயம் உள்ளது. இந்நிலையைத் தவிர்க்கவே மாணவர்கள் விரும்புகிறார்கள்.

*'போராட்டத்தின் கவிதை சாகாது*
*நாம் ஓய்வெடுக்க முடியாது'*
*-ஹேமகாந்த் பருவா*



**ஸிராஜ் மஷ்ஹூர்**

நன்றி - நூலகத்திட்டம்



ARTICLE 19

INTERNATIONAL CENTRE AGAINST CENSORSHIP

இலங்கையின் தொடர்புசாதனங்கள் மீதான செய்தித் தணிக்கை தொடர்பாக ஆர்ட்டிக்கிள் 19இனால் வெளியிடப்பட்ட விசேட அறிக்கையிலிருந்து சில பகுதிகளை சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். குற்றவியல் சட்டத்தின் கீழ் மான நஷ்ட வழக்குகள் தொடரப்படுவதன் மூலமாக தொடர்புசாதனவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவது குறித்த அவ்வறிக்கையின் பிறிதொரு பகுதி இவ்விதழில் வெளியிடப்படுகிறது.

ஆ-ர்

பத்திரிகை ஆசிரியர்களுக்கும் தொடர்பு சாதனவியலாளர்கட்கும் எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் மானநஷ்ட வழக்குத் தொடர்வதை அரசாங்கம் தொடர்ந்து செய்து வருகிறது.

இலங்கையில் மானநஷ்டம் தொடர்பாக சிவில் சட்டத்தின் கீழோ அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழோ வழக்குத் தாக்கல் செய்ய முடியும். தண்டனைக் கோவை (Penal Code) யின் 479 வது பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யுமிடத்து, குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றப்பணத்துடன் இரண்டு வருட சிறைத் தண்டனைக்குள்ளாக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. ஆட்டிக்கிள் 19, இலங்கையில் அரசாங்க அமைச்சர்களையோ அவர்களது கொள்கைகளையோ விமர்சிப்பவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்து தண்டிக்கும் போக்கை அரசாங்கம் கொண்டிருப்பது தொடர்பாக நீண்ட காலமாக அவதானித்து வந்துள்ளது. இத்தகைய மிகக் கடுமையான ஒருவகை மிரட்டல் தன்மை வாய்ந்த வழக்குத் தொடுக்கும் செயலானது, அரசியல் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்துகிற அல்லது ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றை அம்பலப்படுத்துகின்ற சட்டபூர்வமான நடவடிக்கைகளில் உற்சாகம் குன்ற வைக்கும் ஒரு செயலாக அமைந்துள்ளது. இதனால் வருடக் கணக்காக இழுபடுகின்ற வழக்குகளிற்கு முகம் கொடுப்பதற்காகவும் விசாரணைகளுக்கு பதில் சொல்வதற்காகவும், பத்திரிகை ஆசிரியர்களும் தொடர்பு சாதனவியலாளர்களும் நீதிமன்றிற்கு திரும்பத் திரும்ப போய்வர வேண்டியதாக இருக்கும். இவ்வழக்குகள் பிறகு சாகவிடப்பட்டோ அல்லது தோல்வியடைந்தோ சிலவேளைகளில் நீதிமன்றுக்கு வெளியே சமரசம் காணப்பட்டோ விடப்படுகின்ற போதும் கூட இந்த இழுபறி இருந்து வருகிறது.

சாதாரண தனிநபர்களைப் போலல்லாது அரசியல்வாதிகள் கடுமையான விமர்சனங்கள் குறித்து சகிப்புத் தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று மனித உரிமைகட்கான ஐரோப்பிய நீதிமன்றம் எதிர்பார்க்கிறது. அது கூறுகிறது:

"அரசியல் விவாதத்திற்கான சுதந்திரம் என்பது ஒரு ஜனநாயக சமூகத்தின் முக்கியமான கருப்பொருள் ஆகும். ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய விமர்சனத்திற்கான எல்லைகள் ஒரு சாதாரண தனிநபருடையதைக் காட்டிலும் ஒரு அரசியல்வாதியைப் பொறுத்து அதிகமானதாகும். சாதாரண தனிநபர் ஒருவரைப் போலல்லாது அரசியல்வாதி தனது ஒவ்வொரு சொல்லும் செயலும் நெருக்கமாக தொடர்பு சாதனவியலாளர்களாலும், பரந்துபட்ட மக்களாலும் பரிசீலனைக்குட்படுத்தப்படுவதற்கு தவிர்க்க முடியாமலும், தெரிந்து கொண்டும் தன்னை திறந்து வைத்திருப்பதால், அதிகளவான சகிப்புத் தன்மையைக் கொண்டவராக அவர் இருப்பது அவசியமாகிறது"

இலங்கையின் பல்வேறு மனித உரிமைகள் மற்றும் தொடர்பு சாதன அமைப்புக்கள் போலவே ஆட்டிக்கிள் 19 உம் இலங்கையின் அரசியல் யாப்பிலிருந்து குற்றவியல் மானநஷ்டக் குற்றப்பிரிவு அகற்றப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக கோரி வருகிறது. இந்தக் கருத்து, முன்னைய தொடர்பு சாதன அமைச்சருக்கு 1996ல், தொடர்புசாதன சுதந்திரம், தகவல் சுதந்திரம் என்பவற்றைப் பாதிக்கும் சட்டங்களை சீர்திருத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்கவென நியமிக்கப்பட்ட குழுவின் சமர்ப்பித்த பரிந்துரைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் 1997 செப்டம்பரில் வெளியிடப்பட்ட அக்குழுவின் அறிக்கையில் கீழ்வரும் பரிந்துரை வெளியிடப்பட்டிருந்தது.

"தண்டனைக் கோவையின், குற்றவியல் மான நஷ்டம் தொடர்பான விடயங்களுக்கான 479வது சரத்து அது பல்வேறு பாதுகாப்புகளை அனுமதிக்கிற போதும், அதன் மூலம் மேற்கொள்ளப்படக் கூடிய வழக்குகள் அரசாங்க அமைச்சர்கள், அரசாங்க கொள்கைகள் என்பவற்றை விமர்சித்தல், அரசியல் மாற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்துதல் போன்ற செய்கைகள் மீதான ஆர்வத்தை குன்றச் செய்துவிடும் என்பதால் அச்சரத்து நீக்கப்பட வேண்டும். இத்தகைய ஒரு வழக்கைத் தொடர சட்டமா அதிபரின் அனுமதி தேவை என்ற நிபந்தனையை ஒரு போதுமான பாதுகாப்பாகக் கொள்ள முடியாது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அது நீக்கப்படா விட்டால் அது ஒரு மேல் நீதிமன்ற நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படலாமா இல்லையா எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் அது திருத்தப்பட வேண்டும். அப்படித் தீர்மானிப்பதற்கு ஏற்ற விதத்தில் ஆங்கிலச் சட்டத்தில் உள்ளது போல தெளிவான வழிகாட்டல்களை நீதிபதிக்கு வழங்கும் விதத்தில் அத்திருத்தம் அமைய வேண்டும். பின்வரும் ஆங்கிலச் சட்ட வழிகாட்டல்களைப் போன்ற வழிகாட்டல்கள் சேர்க்கப்பட வேண்டும்.

- அங்கே ஒரு மேலோட்டமாகவே தெரிகிற வழக்கு இருக்க வேண்டும்.
- குற்றம் மிகவும் பாரதூரமானதாக, ஒரு குற்றவியல் வழக்கைத் தொடரும் அளவுக்கு தெளிவானதாக இருக்க வேண்டும்.
- இத்தகைய குற்றவியல் விசாரணை நடவடிக்கைகளை தொடர்வதற்கு பொதுசன நலன் சார்பான தேவையிருக்க வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவர், வழக்கிற்கான அனுமதி வழங்குவதற்கு எதிராகத் தனது நியாயங்களைச் சொல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள், ஏற்றுக் கொள்ளப்பட்டு 1996இல் குற்றவியல் மானநஷ்டம் தொடர்பான சட்டம் திருத்தப்படும் என அன்றைய தொடர்பு சாதன அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க 1995 டிசம்பர் மாதத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தாலும் அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. அமைச்சர் தாம் எந்தெந்த மாற்றங்கள் செய்யப்படும் எனக் கருதுகிறோம் என்ற எந்த விபரத்தையும் அப்போது அறிவிக்கவில்லை. இதனால் சட்டம் மாற்றப்படாமல் அப்படியே இருந்து வருவது மட்டுமல்லாமல், தொடர்ந்தும் தொடர்பு சாதனவியலாளர்கட்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போதைய தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர ஆட்டிக்கிள் 19க்கு தெரிந்தளவில், இந்தக் குற்றவியல் மான நஷ்ட சட்ட விதிகளை மாற்றுவது தொடர்பாக எந்தக் குறிப்பான அக்கறையையும் காட்டவில்லை. 1998 ஜனவரியில் ஆட்டிக்கிள் 19 உடனான சந்திப்பொன்றின் போது, பத்திரிகைகள் தாம் வெளியிட்ட தவறான செய்திகள் தொடர்பான தமது திருத்தங்களை பிரசுரிக்க மறுக்கிற சந்தர்ப்பங்களில் மட்டுமே நாம் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர வேண்டியிருக்கிறது என்றார். ஆயினும் அவர் அரசாங்கம் இதனை சீர்த்திருத்தும் நோக்குடன் கவனிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். 'தொடர்பு சாதன சுதந்திரமும் பொறுப்புணர்வும் தொடர்பான கொழும்புப் பிரகடனம்' கூட இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

### தற்போது நடந்துவரும் குற்றவியல் மான நஷ்ட வழக்குகள்

இலங்கையின் சில தொடர்பு சாதனவியலாளர்கள் இத்தகைய குற்றவியல் மான நஷ்ட வழக்குகள் பலவற்றுக்கு முகம் கொடுக்கிறார்கள். உண்மையில், தனக்கெதிராக முன்வைக்கப்பட்ட தொடர்ச்சியான குற்றச் சாட்டுக்களுக்காக ஒரு மூத்த பத்திரிகையாசிரியர் நஷ்ட ஈடு கோரி உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். சிங்கள வாராந்திரியான ராவய பத்திரிகையின் ஆசிரியரான விக்டர் ஐவனே இப்பத்திரிகையாளராவார். முன்னைய அரசாங்க காலத்திலும் இப்போதும் திரும்பத் திரும்ப தன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அரசியலமைப்பு சட்டரீதியாக தனக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிக்கின்ற பாரதூரமாக தன்னை அவமதிக்கின்ற நடவடிக்கைகள் என்று குற்றம் சாட்டியுள்ளார் அவர்.

கீழுள்ள பத்திரிகை ஆசிரியர்கள் உட்பட பல ஆசிரியர்கள் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கடந்த ஓராண்டு காலத்தில் முகம் கொடுத்துள்ளார்கள்.

சண்டே லீடர் : 1995 செப்டம்பர் 3ம் திகதிய இதழில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் அவருக்கு மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் எழுதப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது எழுதப்படும் வரை இவ்வழக்கு முடியவில்லை

சண்டே ரைம்ஸ் : ஒரு அரட்டைப் பத்தியில் ஜனாதிபதியைப் பற்றி எழுதியது தொடர்பாக மான நஷ்ட வழக்கு தொடரப்பட்டது. 1997 யூலை மாதம் முடிந்த இவ்வழக்கில், குற்றவாளியாகக் காணப்பட்ட அதன் ஆசிரியர் சிங்கதிஸ்ஸ மிசார ரணதுங்க ஏழாண்டு காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத கால சிறைத் தண்டனையைப் பெற்றார். அவர் இத்தீர்ப்புக்கு எதிராக இப்போது மேன்முறையீடு செய்துள்ளார்.

லக்பிம : ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க தொடர்பாக 1995 பெப்ரவரி 19ம் திகதி எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் அவருக்கு மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் எழுதப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் பந்துல பத்ம குமார நீதிமன்றத்தால் 1998 பெப்பரவரி 6ம் திகதி விடுதலை செய்யப்பட்டார். ஆயினும் இத் தீர்ப்புக்கு எதிராக அரசு சார்பில் சட்டமா அதிபர் மேன்முறையீடு செய்துள்ளார். இந்தக் கட்டுரை சண்டே ரைம்ஸ் கட்டுரையைப் போன்றதே. இதற்காகத்தான் 7 மாதங்களுக்கு முன் சிங்க ரணதுங்க குற்றவாளியாக காணப்பட்டிருந்தார்.

லக்பிம ஆசிரியருக்கும் இன்னொரு பத்திரிகையாளருக்கும் எதிராக 1996 ஒக்டோபரில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் தபால் தந்தி தொடர்புத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு (அப்போது அவர் தொடர்பு சாதன அமைச்சராகவில்லை) மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் எழுதப்பட்டிருந்ததாக இன்னொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. பொது நிதியைப் பயன்படுத்தி ஒரு உத்தியோகபூர்வ பங்களாவுக்கு தளபாடங்கள் வாங்கி அதிகார துஷ்ப்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டி இக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சர் மங்கள சமரவீர பொறுப்பு என்று அக்கட்டுரை குற்றம் சாட்டியது.

பத்திரிகை ஆசிரியர் பந்துல பத்மகுமார அக்கட்டுரை சரியானதென்றும் ஆகவே அது மான நஷ்டத்துக்குரியதல்ல என்றும் கூறுகின்றார். முதலாவது நாள் விசாரணையின் போது, தாம் வழக்கை வாபஸ் பெற தயாரென்றும், பத்திரிகையில் அந்தக் கட்டுரையிலுள்ள தகவல் தவறானதெனக் கூறி ஒரு மன்னிப்புக் கோரும் குறிப்பை எழுத வேண்டும் என்றும் அரச வழக்கு தொடுநர் தரப்பு தெரிவித்தது. 1998 மே 27ம் திகதி வரை இது பற்றி யோசித்து முடிவு சொல்ல பத்திரிகை ஆசிரியருக்கு அவகாசம் கொடுத்து வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் ஆசிரியர் தாம் எழுதியது சரி எனவும், மன்னிப்பு கோரி எழுத முடியாதென்றும் தெரிவித்தார். வழக்குத் தொடர்கிறது.

திரிசிங்கள : வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் இந்திக்க குணவர்தனவுக்கு மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் எழுதப்பட்டதாக குறிப்பிடும் கட்டுரை ஒன்று தொடர்பாக இவ் வழக்குத் தொடரப்பட்டது. 1997 ஓகஸ்ட்டில் இப்பத்திரிகையின் ஆசிரியர் திலக் வெஹெல்ல குற்றத்தை ஒப்புக் கொள்ள யோசிப்பதாக தகவல் வெளியானது. இவ்வழக்கு செப்ரம்பர் 3ம் திகதி ஆரம்பமாக இருந்தது. இவ்வழக்கின் முடிவு பற்றி ஆட்டிக்கிள் 19க்கு தெரியவில்லை.

தி ஜலண்ட : முன்னாள் கடற்படை கொமாண்டர் வைஸ் அட்மைரல் மோஹன் சமரசேகரவிற்கு மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் 1996 ஏப்ரலில் வெளியான கட்டுரை ஒன்று எழுதப்பட்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஜனவரி 1998 இல் எடுக்கப்பட்ட இவ்வழக்கு மே மாதம் வரை ஒத்திப் போடப்பட்டது. இதை எழுதும் வரை இவ்வழக்கு முடியவில்லை.

ராஜாலிய : ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரான காலிங்க ஒபேவன்ஸவுக்கு மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் 1993 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்று எழுதப்பட்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஐ.தே.க ஆட்சியில் இருக்கும் போது இவ்வழக்கு தொடுக்கப்பட்டது. ஆசிரியர் தெனகமகே லன்டேவல 1997 யூன் மாதம் பிணை நிற்க யாரையும் அவர் தராததால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். ஒக்டோபர் மாதம் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

திரிசூல : நாலந்தாக் கல்லூரியின் அதிபருக்கு மான நஷ்டம் ஏற்படுத்தும் விதத்தில் யூன் 1995இல் எழுதியதாக கூறப்படும் கட்டுரை ஒன்று தொடர்பாக ஒரு வழக்கு தொடரப்பட்டது. 1997 நவம்பரில் மேல் நீதிமன்றம் ஆசிரியருக்கு அழைப்பாணை விடுத்தது. ஆட்டிக்கிள் 19க்கு இவ்வழக்கின் முடிவு தெரியவில்லை.

கிந்தற: ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு மான நஷ்டம் ஏற்படும் விதத்தில் எழுதிய குற்றச்சாட்டுக்காக வழக்கு தொடரப்பட்டது INFORM தரும் தகவலின் படி 1998 ஜனவரியில் மருதானை பொலிசாரால் ஆசிரியரும் பத்திரிகையின் வெளியீட்டாளருட்பட ஏனைய எட்டுப்பேரும் கைது செய்யப்பட்டு ஒரு மாஜிஸ்திரேட்டால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

### விக்டர் ஐவன் மீதான வழக்கு

ராவய சிங்கள மொழியில் வெளிவரும் ஒரு பிரசித்தமான பத்திரிகை. அதன் ஸ்தாபக ஆசிரியரான விக்டர் ஐவனின் வார்த்தைகளில் சொல்வதானால் 'ஊழல், அநீதி என்பவற்றை அம்பலப்படுத்துவதும் இன, மத, சாதி மற்றும் பிற எல்லைப் படுத்தல்களுக்கு அப்பாலான ஒரு ஜனநாயகமும் நீதியும் நிலவும் சமூகத்தை உருவாக்குதலை ஊக்குவிப்பதுமே' ராவய பத்திரிகையின் நோக்கங்களாகும். அதன் இன்னொரு குறிக்கோள், "பயங்கரவாதம் இல்லாத ஒரு அமைதியான சமூகம்". ஓகஸ்ட் 1986இல் ஒரு மாதாந்த சஞ்சிகையாக தொடங்கப்பட்ட இது 1991 நவம்பரில் இருந்து ஒரு வாராந்தப் பத்திரிகையாக வெளிவருகிறது.

ராவய பத்திரிகையின் அம்பலப்படுத்தல்கள் பெருமளவான அரசாங்க அதிகாரசபைகள் மற்றும் பொதுசன சபைகளின் மீது அக்கறை காட்டுபவையாக அமைந்தன. ஊழல், காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு, எயர் லங்கா போன்றவற்றின் சட்ட விரோத பரிமாற்றங்கள் நடைமுறை ஒழுங்கு விதிகளை மீறிய செயற்பாடுகள், பொதுசன சேவை அலுவலக உயர்மட்ட உத்தியோகஸ்தர்களின் நடவடிக்கைகள் என்பவற்றை அது அம்பலப்படுத்தி எழுதி வந்தது.


ராவய பத்திரிகை எழுதும் விடயங்கள் பொதுஜன நலனுக்கு அவசியமான விடயங்களே என்பது தெளிவு. உண்மையில் ராவய பத்திரிகையால் அம்பலப்படுத்தப்பட்ட பல விடயங்கள், பின்னர் அலுவலகங்களில் விசாரிக்கப்பட்ட போது உண்மை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் 1993 வரை ஆசிரியர் பல பாரதூரமான குற்றவியல் மான நஷ்ட குற்றச்சாட்டுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில், பொதுநல காவலராகச் செயற்படும் தனது முக்கியமான பங்களிப்பை - ஒரு உண்மையான ஜனநாயக சூழலின் உருவாக்கத்திற்கு அது மிக அவசியமாகும் - தடைசெய்யும் விதத்தில் தன்னைச் சீண்டும் திட்டமிட்ட நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருவதாக நம்புகிறார் விக்டர் ஐவன். எவ்வாறாயினும் உயர் நீதிமன்றத்தில் அவர் தொடுத்த அடிப்படை உரிமை வழக்கு தோல்வியுற்றது.

விக்டர் ஐவன் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு முன்னை நாள் (ஐ.தே.க) தெங்குப் பொருள் உற்பத்திக்கான அமைச்சருக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் தொடர்பானது. ராவயவில் வெளிவந்த ஒரு செய்தியில் சட்டவிரோத காணி. மாற்றீடுகளினூடாக அவ்வமைச்சர் பணம் சேர்த்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 1994ல் அரசாங்கம் மாறியதன் பின் நடைபெற்ற ஒரு உத்தியோக பூர்வ விசாரணை, ராவயவின் குற்றச் சாட்டுக்கள் உண்மை என்பதை நிரூபித்தன. ஆயினும் விக்டர் ஐவன் தனக்காக, மான நஷ்ட குற்றச் சாட்டுக்கெதிராக வாதாட வேண்டியிருந்தது. புதிய அரசாங்கத்தின் இந்த விசாரணை நடத்தப்பட்டுக் கொண்டிருந்த போது விக்டர் ஐவனின் வழக்கு உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் நிலையில் இருந்தது. அந்த வழக்கு தொடர்பாக அவர் இவ்வாறு சொல்கிறார்.

## இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் கீழ் அச்சுறுத்தப்படும் பத்திரிகையாளர்கள் !

'ஆட்டிக்கிள் 19'




நன்றி - நூலகத்திட்டம்



மே 31

புகைத்தல் ஒழிப்புத் தினம்

# தம் அடிக்கும் ஸ்டைலும் விலைக்கு வாங்கப்படும் உயிரும்!



## ஸ்டைலுன்னா

ஸ்டைலுதான்
நான் தம் அடிச்சா ஸடைலுதான்
நான் தம் அடிக்கிற ஸ்டைல பாத்து
தனலட்சுமி விரும்பிச்சு
நான் ரம் அடிக்கிற ஸ்டைல பாத்து
ராக்கம்மா விரும்பிச்சு
நான் யாரையும் விரும்பல
எனக்கு யாரையும் புடிக்கல

இது சமீப காலமாக பல இளைஞர்களது வாய்களில் முணுமுணுக்கப்படும் பாடலின் ஆரம்ப வரிகள். திரைப்படத்தில் இதனை சூர்யா படிக்க, இப்பாடலுக்கு பின்னணி பாடியிருப்பவர் விஜய்.

இன்றைய தொடர்பூடகங்கள், சராசரி மண்டைகளில் உருவகிக்கும் கருத்தியலைப் பற்றி புதிதாக விளங்கப்படுத்தத் தேவையில்லை. அதிலும் முக்கியமாக சினிமா எனும் சாதனமானது படுபயங்கரமான போலித்தனங்களுக்குப் பழக்கப்படுத்துவதிலும், அத்திரைப்படங்களின் கதாநாயகர்களைப் / கதாநாயகிகளைப் போல வாழ பழக்கப்படுத்துவதும், அதில் உள்ள நாயக/நாயகிகளைப்போன்ற உருவங்களை/உடல்களை தமது துணைவியாக/துணைவ்ராக அடையும் ஆர்வத்தை உண்டுபண்ணுவதிலும் அது அதிகளவு பங்களிப்பைச் செய்கிறது.

அவர்களின் நடை, உடை, பாவனை உள்ளிட்ட மத்திய தரவர்க்க குணாம்சங்கள் மற்றும் நாயக/நாயகிகளின் அதிகாரத்துவம் x பணிதல், என்பனவற்றை மிகவும் சூசகமாகவும்,' ஆழமாக வேறூன்றக் கூடியவாறும் சினிமா செய்கிறது. அந்த வகையில் கதாநாயகனின் "ஸ்டைலின்" பாதிப்பை சிறுவர்கள் தொடங்கி டீன் ஏஜ் ஊடாக மத்திய வயதுக்காரர் வரை சமூகத்தில் காணலாம்.

தற்போது வெளியாகியிருக்கும் தம் அடிக்கும் ஸ்டைல் பற்றிய பாடல் ஆற்றுகின்ற பாத்திரமும் இதுவே.

அப்பாடலில் "தம்", "ரம்" ஆகியவை ஸ்டைலை உணர்த்துவனவாகவும், அப்பேர்பட்ட ஸ்டைலைக் கொண்டுள்ள தன்னை அடைய பல பெண்கள் அலைவதாகவும், ஆனால் தான் அவர்கள் ஒருவரையும் விரும்பவில்லையென்றும், தான் அதனை அலட்சியப்படுத்துவதாகவுமே அப்பாடலின் ஆரம்ப வரிகளின் சாராம்சம் கூறுகிறது.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் என்பன சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்பு அலட்சியப்படுத்தக் கூடியவையல்ல என்பதை எவரும் ஒப்புக் கொள்வர்.

இங்கு நாம் பேசப்போவது அதனைப் மட்டுமல்ல புகைப்பிடித்தல் பற்றி இலங்கையில் சமீப காலமாக பேசப்பட்டுவரும் ஒரு விடயம் பற்றியது.

1999 மே 31ஆம் திகதியன்று புகைத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் நினைவு கூரப்பட்டது. இத்தினத்தையொட்டி உலக சுகாதார நிறுவனம் புகைத்தலின் காரணமாக ஏற்படுகின்ற சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைக்காக "புகைத்தலற்ற உலகு" எனும் விருதினை ஸ்ரீ லங்கா குடியரசின் அதிமேதகு கௌரவ ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்த விருதினை வழங்குவதற்கு உலக சுகாதார நிறுவனம் என்னென்ன தகுதிகளை எதிர்பார்த்ததோ நாமெவரும் அறியோம். அதுபோல அம்மையாரும் எந்தவித கூச்சமுமின்றி பெருமிதத்துடன் இதனைப் பெற்றதானது தான் இதனைப் பெற பூரண தகுதியிருப்பதாகவே கருதியிருக்கிறார் என்றே தெரிகிறது.

ஆனால் இலங்கையர்களுக்கு நன்றாகத் தெரியும் இந்த புகைத்தல் இன்று இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளில் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் பற்றி சமீபத்தில் வெளியாகியுள்ள தரவுகள் இதனை நன்றாக உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் விற்பனையாகின்ற சிகரட்டுகளில் 60 வீதமானவை தனி சிகரட்டுகளாகவே விற்பனை செய்யப்படுகின்றதாம். வறுமையான குடும்பமொன்று மாதத்துக்கு 600 ரூபாவை சிகரட்டுக்காக செலவிடுகிறதாம். சிகரட்டினால் இலங்கையில் வருடத்துக்கு மரணிப்போர் எண்ணிக்கை 20,000 பேர்களாம். அது போல இலங்கையில் ஹெரோயின் பாவிக்கும் 40,000 பேர்களில் 99 வீதமானோர் அதற்கு முன் புகைப்பழக்கமுடையவர்களாம். இது தான் இலங்கையின் நிலைமை. இத்தகவலை தெரிவித்திருப்பதும் சந்திரிகா அம்மையாருக்கு விருது வழங்கிய அதே உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை தான் என்பது வேடிக்கையானது.

அவ்வறிக்கையில் தெரிவித்திருக்கும் தகவல்களின்படி வயது வந்தபின் புகைப்பவர்கள், சிறுவயதிலேயே புகைத்தல் பிரச்சாரத்துக்குப் பலியாக்கப்பட்டவர்களாம்.

இன்று ஆரவாரத்துடன் கூடிய, கவர்ச்சிகரமான புகைத்தல் விளம்பரங்களை எங்கு பார்த்தாலும் காண்கின்றோம். புகைத்தல் மற்றும் போதைவஸ்துக்களுக்கு எதிராக மக்கள் செய்த போராட்டங்களின் பலனாக புகைத்தல் விளம்பரங்கள் தொடர்பூடகங்களில் தடை செய்யப்பட்டன. ஆனால் போதைவஸ்து கம்பனிகளோ வேறு வழிகளில் தமது பிரச்சார உத்திகளையும், வியாபார தந்திரோபாயங்களையும் மாற்றியமைத்துக்கொண்டன. பத்திரிகைகளில் போட முடியாமல் போன விளம்பரங்களை திரைப்பட அரங்குகளில், திரைப்படங்கள் திரையிடுவதற்கு முன்னர் சலனக் காட்சிகளாகவும், சிலைட்டுகளாகவும், கடைகளின் பெயர் போர்டுகளின் வாயிலாகவும், சந்திகளில் பெரிய கட்அவுட்டுகளாகவும், சுவரொட்டிகளாகவும், விளம்பரப் பலகைகளாகவும் தமது விளம்பரங்களைச் செய்கின்றன.

இவ்விளம்பரங்களின் மூலம், மதுபானம், மற்றும் சிகரட் என்பன ஆண்மையின் குறியீடாகவும், பெண்களைக் கவரும் ஒன்றாகவும், வசதி படைத்தோரின் வெளிப்பாடாகவும் கருத்துட்டப்படுகின்றன. இதன் காரணமாக பொதுவில் இலகுவாக மத்தியதரவர்க்க பிரச்சாரங்களுக்கு அகப்படக்கூடிய சமூகத்திலுள்ள பெரும்பாலானோரை இவ்விளம்பரங்கள் ஈர்த்து, அதில் கொஞ்சம், கொஞ்சமாக மூழ்கடிக்கின்றன.

இன்று சிகரட் இல்லாத கடைகளைத் தேடிக்கண்டுபிடிப்பது அரிது. சிகரட் விற்பனையை மறுக்கும் வியாபாரி எவரையாவது நாம் காண முடிகிறதா? சிகரட் விளம்பரங்களை எதிர்க்கும் எந்த வியாபாரியையாவது எம்மால் காண முடிகிறதா? டீன் ஏஜ் மற்றும் இளம் வயதுகாரர்களிடம் தான் தனது சந்தைப்படுத்தல் உத்திகளை சாத்தியப்படுத்தலாம் என்கின்ற நம்பிக்கையில் தான் அவை பெரும்பாலும் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு அநுசரணை வழங்கி அங்கு தமது பிரச்சார வலைக்குள் இழுக்க முயற்சி செய்கின்றன.

இலங்கையில் என்னதான் மக்களின் போராட்டங்களின் காரணமாக, தொடர்பு சாதன விளம்பரங்களை அரசு தணிக்கை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டாலும் அதனை இன்னொரு வழியில் அக்கம்பனிகள் செய்ய பூரணமாக வழிதிறந்து விட்டது. இதற்கு காரணம் என்னவாக இருக்கும்?

அரசுக்கு கிடைக்கும் வருமானத்தில் மிகவும் பலமான வருமானங்களில் ஒன்று தான் இந்த மதுபானம், மற்றும் சிகரட் என்பனவற்றிலிருந்து கிடைக்கப்படும் வரி. ஒவ்வொரு வருடமும் வரவுசெலவுத் திட்டத்தின் போது கட்டாயமாக விலை அதிகரிக்கப்படும் பொருட்கள் தான் இவை. எனவே ஒரு புறம் மக்களிடமே யுத்த வரி பெற்று மக்களையே அழிக்கும் அரச கொள்கையைப் போலவே, இந்த மதுபான, சிகரட் விற்பனையை முழுமையாக அங்கீகரித்து. இன்னொருபுறம் மக்களை அழிக்கிறது. மக்களும் விலை கொடுத்து சாவை வாங்கிக் கொள்ள பழக்கப்படுத்தப்படுகின்றனர்.

இலங்கையில் உள்ள சிகரட், மற்றும் மதுபான உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்கள் என்பது இன்னொரு அப்பட்டமான உண்மை. இவற்றுக்கு மக்களின் நலன் பற்றி கவலைப்பட எந்தத் தேவையும் இருக்கப்போவதில்லை. மிகவும் சூசகமாக தமது பொருட்களை சந்தைப்படுத்திவிட்டு கொள்ளைகொள்ளையாக அத்தனையையும் சுருட்டிக் கொண்டு போவது தான் அவற்றின் இலக்கு. இதனை விளங்கிக் கொள்ள பெரிய ஆராய்ச்சிகள் தேவையில்லை. "ஆணைக்குழு"வும் அம்மையாருக்கு தேவையில்லை.

விற்பனை செய்யப்படும் சிகரட்டுகளில் 60 வீதமானவை தனி சிகரட்டுகளாகத்தான் விற்பனையாகின்றது என்றால், ஒரே தடவையில் சிகரட் பக்கற் வாங்கி பாவிக்க முடியாத வறுமையிலுள்ளவர்கள் தான் அதிகளவு சிகரட் பாவிக்கின்றார்கள் எனத் தெரிய வருகிறது.

மாதாந்தம் 2000 ரூபா வருமானமுள்ள ஒரு குடும்பத்தில் மூன்றில் ஒரு பகுதி சிகரட்டுக்காகவே செலவிடப்படுகிறது. அப்படிப் பார்க்கப் போனால் 200 குடும்பங்கள் உள்ள ஒரு குடியிருப்பை எடுத்தால், ஒரு குடும்பத்தில் ஒரு நாளைக்கு ஒருவர் 5 சிகரட் பாவிப்பவர் இருக்கிறார் என்று எடுத்துக் கொண்டால், அக்குடியிருப்பில் மாதம் ஒன்றுக்கு சிகரட்டுக்காக ஒரு லட்சத்து இருபதினாயிரம் (1,20,000) ரூபா செலவிடப்படுகிறது. எமது நாட்டைப் பொறுத்தளவில், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இப்படி ஒரு கிராமத்துக்கு இப்படியொரு தொகையை வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் கூட ஒதுக்க முடியாதது.

இலங்கையின் வறுமை ஒழிப்புக்காக 800-900 கோடிகள் சமுர்த்தி திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற அதே வேளை அதே வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரால் 1,825 கோடிகள் புகைத்தலுக்காக செலவிடப்படுகிறது.

வருடாந்தம் புகைத்தலினால் உலகில் மரணிப்போரின் எண்ணிக்கை 40 லட்சம் மக்கள் ஆகும். ஒவ்வொரு நாளும் 11 ஆயிரம் பேர் மரணிக்கின்றனர். அதாவது ஒரு நிமிடத்துக்கு 456 பேர் புகைத்தலினால் இறக்கின்றனர்.

ஒருவரை சிகரட் பாவிக்க வேண்டாம் என்றோ அதனை வீசச் செய்யும்படியோ கோருவது இதற்கு தீர்வாகி விடப் போவதில்லை.

ஒரு புகைபிடிக்கும் நண்பனும், புகைப்பிடிக்காத நண்பனும் பாதையில் சென்று கொண்டிருந்தார்கள். புகைபிடிக்காத நண்பன் புகைபிடிக்கும் நண்பனை நோக்கி அருகிலிருந்து மாடிக் கட்டிடத்தைக் காட்டி நீ இது வரை சிகரட்டுக்கு செலவளித்திருக்கிற தொகையை சேர்த்திருந்தால் இது போன்ற ஒரு கட்டிடத்தைக் கட்டியிருக்கலாம் என்றான். புகைபிடிக்கும் நண்பனோ சிறிது நேரம் யோசித்துவிட்டு புகைபிடிக்காத நண்பனைப் பார்த்து புகைபிடிக்காத நீ இப்படிக் கட்டியிருக்கலாமே என்றான். இக்கதை ஒரு வகையில் முதற் கருத்தை மறுதலிக்க கூறப்படும் கருத்தாக இருந்தாலும் இதில் ஒரு அடிப்படை அர்த்தம் உண்டு. வெறுமனே நபர்களை மாற்ற முயற்சி செய்வது போதுமானதாக இருக்கப் போவதில்லை. அது தீர்வாகவும் ஆகிவிடாது. மாறாக இருக்கின்ற அதிகாரக் கட்டமைப்பைப் புரிந்து கொண்டு அதன் அடித்தளத்தையே மாற்றும் வழி தான் இதற்குத் தீர்வாக இருக்கமுடியும்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி 2020ஆம் ஆண்டு புகைத்தலின் காரணமாக மரணிப்போரின் எண்ணிக்கை ஆயிரம் மில்லியனாக இருக்குமாம். இத்தொகையானது எச்.ஐ.வி., புற்றுநோய், கர்ப்பிணி மரணம், வாகன விபத்து, தற்கொலை, கொலை என்பனவற்றின் மொத்த எண்ணிக்கையையும் மிஞ்சி விடும் என்கிறது. புகைத்தலின் காரணமாக மரணிக்கும் எண்ணிக்கையை விட அதிகளவு புதிதாக புகைத்தலுக்கு பழக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இருக்கிறது என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. அப்படியானால் புகைத்தலுக்கு எதிராக எவ்வளவு குரல் கொடுத்தும் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதே இங்கு தெளிவாகிறது.

பன்னாட்டு நிறுவனங்களான இந்த மதுபான, சிகரட் நிறுவனங்கள், தமது வியாபாரத்தை இன்னும் பெருக்கத் தான் போகின்றன. அரசும் அவற்றில் தங்கியிருக்கத்தான் போகின்றன. அரசு அவற்றை ஊக்குவிக்கத்தான் போகின்றன. அவற்றின் சுரண்டலுக்கும், நுகர்வுக்கும் பலியாகத்தான் போகின்றார்கள் மக்கள்.

எனவே தான் இதற்கு எதிராக வெறுமனே "நபர்களைத் திருத்துவது", "பிரசாரம் செய்வது" என்பன வெறும் சீர்திருத்த வேலைகளாக மட்டுமே இருக்கப் போகின்றது. அவை நிலையானதும் உறுதியானதுமான தீர்வாக இருக்கப் போவதில்லை என்பதை மட்டும் இப்போதைக்கு கூறி வைக்கலாம்.

-ஜென்னி

**இலங்கையில் விற்பனையாகின்ற சிகரட்டுகளில் 60 வீதமானவை தனி சிகரட்டுகளாகவே விற்பனை செய்யப்படுகின்றது. வறுமையான குடும்பமொன்று மாதத்துக்கு 600 ரூபாவை சிகரட்டுக்காக செலவிடுகிறது. சிகரட்டினால் இலங்கையில் வருடத்துக்கு மரணிப்போர் எண்ணிக்கை 20,000 பேர்கள். அது போல இலங்கையில் ஹெரோயின் பாவிக்கும் 40,000 பேர்களில் 99 வீதமானோர் அதற்கு முன் புகைப்பழக்கமுடையவர்கள். இது தான் இலங்கையின் நிலைமை. இத்தகவலை தெரிவித்திருப்பது சந்திரிகா அம்மையாருக்கு விருது வழங்கிய அதே உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை என்பது தான் வேடிக்கையானது.**

நன்றி - நூலகத்திட்டம்



# அப்துல்லா ஒக்கலானுக்கு மரண தண்டனை?

## குர்திஷ் போராட்டம் பின்வாங்காது!


குர்திஷ் விடுதலை இயக்கத் தலைவர் அப்துல்லா ஒக்கலானை அமெரிக்க சீ.ஐ.ஏ. மற்றும் இஸ்ரேல் மொஸாட் ஆகியவற்றின் உதவியுடன் துருக்கி கைது செய்து தற்போது மரண தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது. அவருக்கு எந்த நேரமும் மரண தண்டனை அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேன்முறையீடு செய்வதற்கான முயற்சிகளை செய்யவிடாது பலத்த முயற்சிகள் துருக்கி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமது தலைமையைஅழிப்பதற்கு துருக்கிய அரசால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் அதன் அழிவுக்கே கொண்டு செல்லுமென துருக்கி அரசாங்கத்துக்கு, PKKவின் இராணுவப் பிரிவு எச்சரித்துள்ளது. தலைவர் ஒக்கலான் விடுத்துள்ள சமாதானத் தீர்வு அழைப்பு நிராகரிக்கப்பட்டு அவர் தூக்கில் போடப்படுவாராக இருந்தால், துருக்கிய அரசாங்கத்துக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரிக்கும் என்றும், குர்திஸ் மக்கள் தமது தேசிய நலனைப் பாதுகாக்க சகல வழிகளிலும் போராடுவதற்கு உரித்துடையவர்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது இராணுவப் பிரிவு. இந்த அறிவிப்பை அடுத்து கருத்து வெளியிட்டுள்ள துருக்கிய அரசு குர்திஸ் தரப்புடன் தாம் ஒருபோதும் சமரசம் செய்யப்போவதில்லை எனவும் அது ஒரு பயங்கரவாத அமைப்பெனவும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஒக்கலான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என சிறையில் இருக்கும் போது தெரிவித்திருக்கிறார். அத்துடன் தாம் ஆயுதங்களைக் களைந்து சமாதானப் பேச்சுவாாத்தைக்கு தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டதென துருக்கி தெரிவித்திருக்கிறது. இதனை குர்திஷ் தொழிலாளர் கட்சி மறுத்துள்ளது.

மேலும் ஒக்கலான் கட்சியின் நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்கக்கூடிய நிலையில் இல்லையென்பதாலும், எதிரியின் சிறையில் இருந்தகொண்டு எடுக்கப்படும் எந்ததனி முடிவும் கட்சியின் முடிவாக ஆகமுடியாது எனவும் கட்சிக்குள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி பகிரங்கமாக இது வரை தெரிவிக்கவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் ஒக்கலானை கடுமையாக சித்திரவதை செய்துள்ளதாக துருக்கியில் உள்ள மனித உரிமைகள் இயக்கங்கள் பல தெரிவித்திருக்கின்றன.




ஒக்கலானுக்கு ஏற்றப்பட்டுள்ள ஊசியொன்று அவரை சுயநினைவற்று இருக்கச் செய்துள்ளதுடன், அந்த ஊசியின் கடுமையின் காரணமாக அவரது முடிகள் கூட உதிர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமை தொடர்கையில் அவரது முடிவை கட்சியின் முடிவாக எடுக்கக்கூடாது என கட்சியின் மத்திய குழு அண்மையில் முடிவு செய்துள்ளது. குர்திஷ் தொழிலாளர் கட்சியின் தலைவராக தொடர்ந்தும் ஒக்கலானை மதிக்கும் அக்கட்சி ஒக்கலான் மீதான தண்டனைக்கெதிராக உலகளாவிய ரீதியில் பல எதிர்ப்புப் போராட்டங்களைச் செய்து வருகிறது.



ஒக்கலான் கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி கைது செய்யப்பட்டார். ஐரோப்பிய நாடுகள் பல ஒக்கலானுக்கு அரசியல் தஞ்சம் வழங்காதது மட்டுமன்றி பெருங்காட்டிக் கொடுப்பைச் செய்திருந்தன.

தனியான ஒரு தீவில் உள்ள சிறைச்சாலையில் தேசத்துரோக குற்றச்சாட்டின் பேரில் ஏப்ரல் மாதத்திலிருந்து விசாரணைகள் செய்யப்பட்டன. கடந்த யூன் 29ஆம் திகதி அவருக்கு மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. குர்திஷ் போராட்டத்தின் போது கொல்லப்பட்ட 31 ஆயிரம் பேருக்கும் இவரே பொறுப்பானவர் என்று துருக்கி அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக துருக்கியில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் ஒக்கலான் மீதான மரணதண்டனை என்னவாகும் என்கின்ற சந்தேககங்ளும் எழுப்பபப்பட்டுவருகின்றன. அதே வேளை துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் கோரிக்கையும் ஐரோப்பிய ஒன்றியத்தால் பரிசீலிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நிலையில் இப்படி துருக்கி மரண தண்டனை போன்ற ஒரு தண்டனையை அமுலுக்குக் கொண்டுவருமானால் அது ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவம். குறித்த பரிசீலனையில் பாதிப்பை செலுத்துமென பின்லாந்தும் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தது.

இது எவ்வாறிருந்த போதும் துருக்கியும், அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளும் ஒக்கலானின் மரண தண்டனையை நிறைவேற்றுவதில் தாமதிப்பதானது இன்னொருபுறம் வேறு பல பிரச்சினைகளை உண்டுபண்ணுமென நம்புவதாகவும் தண்டனையை நிறைவேற்றக்கோரிவருவதாகவும் அறியப்படுகிறது.

அமெரிக்கா உலகில் தலையிட்டுள்ள அனைத்து விடுதலைப்போராட்டங்களிலும் இப்படித்தான் அதன் தலைமையை அழித்துவிட்டால் எல்லாம் சரி என்கின்ற முடிவுடன் இயங்கி வருகிறது. முன்னர் பொலிவியாவில் சீ.ஐ.ஏ.வின் உதவியுடன் பொலிவிய அரசாங்கம் சேகுவேராவைப் பிடித்தபோதும் அமெரிக்கா கொடுத்த அலோசனை உடனடியாக ஆளைக் கொன்று விடு என்பதே. அதன்படி சேகுவேரா சில மணி நேரங்களில் கொல்லப்பட்டார். இதுபோன்ற சம்பவங்கள் பல உள்ளன. ஒக்கலானின் விடயத்திலும் அமெரிக்கா கூறுவது அதனைத் தான். (பிரேமதாச ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர விடயத்திலும் இதே வழிமுறையைத் தான் கையாண்டார்.) ஒரு தனிநபரை அழிப்பதன் மூலம் ஒரு விடுதலை இயக்கத்தையோ, விடுதலைப் போராட்டத்தையோ முற்றாக அழித்துவிடலாம் என்பது இந்த சக்திகளின் கனவு.

இயக்கங்களின் பலமானதும் இறுக்கமானதுமான அமைப்புக்கட்டுப்பாடும், அதன் அரசியலும், ஜனநாயக மத்தியத்துவமுமே இப்பேர்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு அமைப்பை காக்கின்றன.

அமெரிக்க-துருக்கிய உறவானது பரஸ்பரம் பல்வேறு நலன்கள் சார்ந்தது. உலகிலேயே ஆயுத உற்பத்தியில், விற்பனையில் முதன்மை வகிக்கும் நாடு அமெரிக்கா. உலக ஆயுத ஏற்றுமதியில் 55 வீதத்தை (1996இன் கணக்கெடுப்பின்படி 23.50 பில்லியன் டொலர்கள்) அமெரிக்காவே செய்கிறது. அது போல உலகில் அதிகளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நாடுகளில் நான்காவது இடத்தை வகிப்பது துருக்கி (5 பில்லியன் டொலர்கள்) இதில் அமெரிக்காவிடம் இருந்து மாத்திரம் 64 வீதத்தை கொள்வனவு செய்கிறது. (இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு http://www.acda.gov எனும் வெப் சைட்டில் பார்க்கவும்.)

அமெரிக்கா உலகிலுள்ள பல நாடுகளில் வழங்கி வருகின்ற ஆயுதப் பயிற்சியில் அதிகளவு பணம் செலவிடுவது போலந்துக்காக (1,600,000 டொலர்கள்) இரண்டாவதாக செலவிடுவது துருக்கிக்காக (1,500,000 டொலர்கள்). இவ்வருடத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள இத்தொகை அடுத்த வருடத்துக்கும் இதே அளவு ஒதுக்க அமெரிக்க காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. இத்தொகை தென்னாசிய நாடுகள் அனைத்துக்கும் ஒதுக்கப்படும் மொத்தத் தொகைக்கு சமமானது.

அமெரிக்கா துருக்கிக்கு ஆயுதம் வழங்குவதாயின் அது மனித உரிமைகளைப் பேணுவதிலும், சமாதான முயற்சியில் அக்கறை காட்டவும் வேண்டுமென நிபந்தனை விடுத்திருந்தது. ஆனால் கடந்த 1998 செப்டம்பரில் குர்திஷ் தொழிலாளர் கட்சி பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்ததை துருக்கி உதாசீனம் செய்திருந்த போதும் துருக்கிக்கு அமெரிக்கா உள்நாட்டிலேயே போர் ஹெலிகப்டர் தயாரிக்கும் தொழில்நுட்ப உதவிகளைச் செய்யும் ஒப்பந்தத்தை செய்து கொண்டதுடன், மேலும் பல இராணுவ தளபாடங்களையும் கொள்வனவு செய்துள்ளது. இதற்குப் பிரதியீடாக துருக்கியும் அதன்தென்கிழக்குப் பகுதிகளில் அமெரிக்காவின் போர் விமானங்கள் பறக்கவும், (ஈராக் மீதான ஆக்கிரமிப்பு செய்வதற்கான விமானத் தளம்) அப்பகுதியில் அமெரிக்காவுக்கு விமானத் தளம் அமைக்கவும் வசதி செய்து கொடுத்தது. (இது பற்றிய மேலதிக விபரங்களை http://www.fas.org/asmp/ASM39.html வெப் விலாசத்தில் உள்ள Arms Sales Monitor எனும் சஞ்சிகையில் காணலாம்.)

துருக்கி அதன் சுற்றுவட்டாரத்தில் தனது பேட்டை ரவுடித்தனத்தை நிறுவுவதற்கும், குர்திஷ் மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கும் அமெரிக்காவின் உதவியை நாடியிருக்கிறது. அது போல அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது பேட்டை ரவுடித்தனத்தை நிறுவுவதற்கும், தனது ஆயுதச் சந்தையை விரிவுபடுத்துவதற்கும் தென்கிழக்கு ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்குப் பகுதிகளில் தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. இந்த நிலைமையில் அமெர்க்கா குர்திஷ் மக்களின் போராட்டத்துக்கு எதிராக முழு ஒத்துழைப்பையும் துருக்கிக்கு வழங்கிவருகிறது.

ஒக்கலான் விவகாரத்திலும் ஒக்கலான் மரண தண்டனையிலிருந்து தப்புவதற்கான சாத்தியங்கள் அரிதாகவேபடுகிறது. அப்படி அவர் தூக்கில் இடப்பட்டாலும் கூட அது குர்திஷ் மக்களின் எதிரிகள் நம்புவதைப்போல குர்திஷ் போராட்டத்தை எள்ளவும் பின்தங்கி விடச்செய்யப்போவதில்லை. அதே வேளை அவ்வெதிரிகள் இதற்கு பல விலையை கொடுக்க நேரிடப்போகிறது என்பதை மட்டும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

குர்திஷ் தொழிலாளர் கட்சியின் உத்தியோபூர்வ தகவல்களைப் பெற http://www.pkk.org எனும் வெப் விலாசத்தை உபயோகியுங்கள்.

—கோமதி

### 1993இலிருந்து 1998 யூன் வரையான காலப்பகுதிக்குள் குர்திஷ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்:

ஆதாரம் : Human Rights Association - IHD

| | |
|---|---|
| இனந்தெரியாத எதிரிகளால் தாக்கப்பட்ட — காயப்பட்டவர்கள் | 1170 கொலைகள். 182 காயப்பட்டவர்கள் |
| சிறையிலிருக்கையில் வதைபுரியப்பட்டு கொல்லப்பட்டவர்கள் | 923 |
| ஆயுத மோதல்களின் போது கொல்லப்பட்டவர்கள் | 15.172 |
| சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் | 999 கொலைகள். 1377 காயப்பட்டவர்கள் |
| தடுத்துவைக்கப்பட்டவர்களின் மீதான தாக்குதல்கள் | 146 |
| படையினரால் மிரட்டப்பட்ட மற்றும் தாக்கப்பட்டவர்கள் | 325 |
| தடுப்புக்காவலின் போது காணாமல் போன மக்கள் | 858 |
| வதைக்குள்ளானவர்கள் — பதிவு செய்யப்பட்டவை | 3374 |
| ஆணையில்லாமல் கைது செய்யப்பட்ட மக்கள் | 98.134 |
| ஆணையுடன் கைது செய்யப்பட்டவர்கள் | 7274 |
| மக்கள் விரட்டியடிக்கப்பட்ட கிராமங்கள் | 2717 |
| அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களின் மீது சூட்டுச் சம்பவங்கள் | 733.890 |
| குண்டுத் தாக்குதல் | 696 |
| மூடப்பட்ட அரசியல் இயக்கங்கள். கட்சிகள். தொழிற்சங்கங்கள். வெளியீட்டகங்கள் | 636 |
| தாக்கப்பட்ட மற்றும் தேடப்படும் அமைப்புகள். | 763 |
| கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் | 1180 |
| பறிமுதல்செய்யப்பட்ட வெளியீட்டகங்கள் | 1679 |
| கொல்லப்பட்ட சிறுவர்கள் | 200 |
| கொல்லப்பட்ட பெண்கள் | 165 |
| கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் | 19 |
| காணாமல் போன பத்திரிகையாளர்கள் | 2 |
| கொல்லப்பட்ட ஆசிரியர்கள் | 29 |
| கொல்லப்பட்ட வைத்தியர்கள் | 12 |
| கொல்லப்பட்ட. IHD மனித உரிமையாளர்கள் | 8 |
| கொல்லப்பட்ட வழக்கறிஞர்கள் | 5 |
| கொல்லப்பட்ட தொழிற்சங்கவாதிகள் | 5 |
| கொல்லப்பட்ட மதத்தலைவர்கள் | 21 |

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய தொழில்நுட்பமும் பெண்களும்

மாதுரி டிக்சிட் போன்ற நடிகைக்கு வேற்றுமைகாட்ட எவராலும் முடியாதென பலர் நினைக்கிறார்கள். இவர் இந்தியாவில் ஒரு தேவதையாக மதிப்பைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணம். மாதுரி டிக்சிட், பெண்களுக்கு எதிரான வேறுபாடுகள், ஆண்களுக்கு சமமாக பெண்கள் எவ்வளவுதான் சிறப்பாக நடித்தாலும் பெண்களுக்கு குறைவான கொடுப்பனவுகள் வழங்கப்படல் என்பன வேதனைக்குரியதென தெரிவித்திருந்தார். இந்நிலைமை கீழைத்தேய நாடுகளில் மட்டுமன்றி ஹொலிவூட்டிலும் நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருந்தார். கிரீடத்தைச் சுமந்து கொண்டிருக்கும் அரசிகள் மட்டுமல்ல, வெள்ளித்திரையின் அரசிகளும், பெண்ணியப் போராட்டத்திற்குள் குதிக்க வேண்டியுள்ளது.

மாதுரி கனவுலகின் அரசியானாலும், தயாரிப்பாளர்களின் முன் வேறுபாடுகளுக்கு, தூற்றல்களுக்கு உள்ளாகும் இன்னொரு சாதாரணப் பெண்ணே. ஹொலிவூட்டின் பிரதான நடிகையான மெரில் ஸ்ட்ரிப் கூட இவ்விடயம் தொடர்பாக விமர்சனம் செய்திருந்தார் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில், தேர்தல் நடவடிக்கைகளின்போது, வெளிப்படையாகத் தெரியும் விடயம் தான், வன்முறைகள் பெருகப் பெருக பெண்களின் பங்களிப்பும் குறைந்து செல்கின்றது என்பது. வன்முறைகள் பெருகியதும், பெண்களின் வாக்குச்சீட்டை எடுத்துக் கொண்டுச் சென்று வேறு ஒருவரின் மூலம் வாக்குப்போடுவது வெளியே தெரியாத குற்றமாகிப் போகின்றது. தேர்தல் நிலையத்தில் எவரும் கேள்வி கேட்காவிட்டால், இவ்வாறான கள்ள வாக்குகளை இலேசாக இட்டுவிடலாம். மறுபுறம் தேர்தலின்போது, குடும்பப் பாரத்தைச் சுமந்துக் கொண்டிருக்கும் பெண்களே எதிர்ப்பார்ப்புடன் தேர்தல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பல தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட உயரதிகாரியொருவர் என்னிடம் இவ்வாறு கூறினார். "குடும்பத்தின் பாரத்தைச் சுமந்து கொண்டிருக்கும் ஏழைப்பெண்களே, காலையில் எழுந்து வாக்குச்சாவடிக்கு சென்று வாக்குப்போட முயற்சிக்கின்றார்கள். அவர்கள் எப்படியாவது தமது பிரச்சினைகளை செவிமடுக்கக் கூடிய பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கவே முயற்சிக்கின்றார்கள். தேர்தல் வன்முறைகளுக்குள் அகப்படின் நிச்சயமாக இந்த பெண்களே பெரும் பாதிப்புக்குள்ளாவர்"

மேல் மாகாணத்தின் மாகாண சபையில் இரண்டு பெண் பிரதிநிதிகளே உள்ளனர். ஜே.வி.பி. கட்சி சார்பில் முஸ்லிம் பெண்ணொருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது சந்தோசமான விடயமே. பொதுவாக முஸ்லிம் பெண்கள் அரசியலில் ஈடுபடும் ஆர்வமற்றவர்கள். இவ்வாறான நிலைமையில் முஸ்லிம் பெண்ணொருவர் இடதுசாரிக் கட்சியினால் மாகாண சபையொன்றுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது அதிசயமான சம்பவமாகும். இவ்வாறு சமூகத்தில் ஒதுங்கியிருக்கும் பிரிவுகள் அரச அதிகாரத்தில் பங்குபெற மாகாண சபைகளைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பது இந்தச் சம்பவத்தின் மூலம் நிரூபணமாகின்றது. மாகாண சபையைக் கலைக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்த கட்சியே மாகாண சபையை பயன்படுத்திய முறையை சுட்டிக்காட்டியதும், முக்கியமான விடயம். ஜே.வி.பி. தனது தவறுகளைக் களைந்துவிட்டு முன்னணிக்கு வரலாம் என்ற கருத்து இவ்வாறான செயற்பாடுகளினால் உறுதியாகின்றது என்றே நான் எண்ணுகின்றேன்.



நாட்டைப் பிரிப்பதல்ல மாகாண சபையின் தவறு. அவற்றுக்கு சரியான அதிகாரங்கள் இல்லாததனாலேயே பலவீனமடைந்துள்ளன. மாகாண சபை அதிகார இயந்திரத்திற்குள் சுயமாக பிரவேசித்த நிர்வாக அதிகாரிகளிடம் மிகவும் கவலையுடன் இவ்வாறே கூறவேண்டியுள்ளது. 'இவற்றுக்கு சரியான அதிகாரங்கள் வழங்கப்படவுமில்லை. கொடுத்த அதிகாரங்களை செயற்படுத்தவும் முடியவில்லை. கொடுத்தவற்றை பாராளுமன்ற சட்டங்கள் மூலமும், அமைச்சர் ஆணைகளின் மூலம் பறித்தெடுக்கப் பார்க்கின்றார்கள் அவ்வாறிருக்கும் போது மாகாண சபைகள் பலவீனம் அடையாமல் இருக்குமா?" அவ் அதிகாரிகள் ஆளுநர் மூலம் ஜனாதிபதி எங்கனம் மாகாண சபைகளை நிர்வகிக்கின்றார் என முழு விபரங்களுடன் சுட்டிக்காட்டுகின்றனர். அதேபோல் அமைச்சு சுற்று நிரூபணம் மூலம் சட்டத்திற்கு முரணாக திருட்டுத்தனமாக மாகாண சபையின் செயற்பாடுகளை அமைச்சுக்கள் பறித்தெடுத்த விதத்தையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். முதலமைச்சர் எங்களை தாலாட்டி இவ்விடயம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்போம் எனக் கூறினார். எனினும், மத்திய அரசாங்கம், அதிகாரங்களை பிராந்தியத்திற்கு வழங்காவிட்டால், முதலமைச்சரினால் மட்டுமல்ல சுக்கிரக்கடவுளினாலும் காப்பாற்ற முடியாது. ஆச்சரியமான விடயம் என்னவெனில், மாகாண சபை அதிகாரங்களை காலில்போட்டு மிதித்துக் கொண்டு தான் சந்திரிகா அதிக அதிகாரங்கள் கொண்ட சபைகளைப் பற்றிக் கதைக்கின்றார்!

இதன்மூலம் பெண்கள் பதவிக்கு வந்து அதிகாரத்தைப் பெற்றவுடன் ஜனநாயகம் உறுதியடையும் என்பது பொய் எனத் தெரியவருகின்றது. சந்திரிகா பதவிக்கு வந்தவுடன் தாய்வழிச் சமூகத்தின் ஆரம்பம் ஏற்பட்டுவிடுமென நம்பியோரும் உள்ளனர். ஆனால், இப்பொழுது அவர்களுக்கு அவர்களுடைய முட்டாள் தனம் விளங்கிவிட்டது. எனினும், சந்திரிகா பெண் என்ற காரணத்தினால் அவரைக் குற்றம் சாட்டுவது தவறு. ஐ.தே.க. மேடைகளில் பல்வைத்தியரான ராஜித அவர்கள், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார் என பலரும் தெரிவிக்கின்றனர். ராஜித அவர்கள் இவ்வாறான பேச்சுக்கள் தொடர்பாக அதிக ஆர்வம் கொண்டவர். அன்று ஒருநாள் ஓரினச் சேர்க்கையாளர்களை அலிகள் எனக்கூறி பெரும் குழப்பங்களை விளைவித்தார். ரணில் அவர்கள் கூட அது பற்றி கண்டிக்கவும் இல்லை. அதனால், தான் செய்தது சரியென ராஜித பெருமிதத்துடன் இருப்பதாகத் தெரியவருகின்றது. அரசியல் மேடைகளுக்கு வந்து, அரசியல் பற்றி கதைக்காது, வெவ்வேறுபட்ட அரசியல்வாதிகளைப் பற்றி தூற்றுவதில் பெரும் பிரச்சினை ஏற்படுவது, ஆணாதிக்க கருத்துக்களை முன்வைக்கும் போது தான். அவ்வாறான விமர்சனங்களினால் சந்திரிகா பலமடைகின்றார் என எனக்குத் தோன்றுகின்றது.

இந்தோனேசியாவில் சுகர்ணோ புத்திரியின் எழுச்சியுடன் முழு ஆசியாவும் பெண் தலைவர்களினால் சூழ்ந்த பிரதேசமாகியுள்ளது. ஆனால், இந்நிலைக்கு வந்த பெண்கள், தந்தை, கணவன் ஆகியோரின் ஆதரவுடன் வந்துள்ளனர். தமது சுய தலையீட்டினால், இங்கிலாந்தில் தச்சர் அவர்கள் போன்று அதிகாரத்தைப் பெற்றவர்கள் முழு ஆசியாவிலுமே இல்லை. சிறிமா உலகத்தின் முதல் பிரதமரானதும், அவரது கணவரின் பெயரினால் தான். ஒரு அமெரிக்கர் அன்றொரு நாள் என்னிடம் 'இறந்த பண்டாரநாயக்கா அவர்களின் நோக்கு கொண்டவர் என்றதனாலேயா மக்கள் சிறிமாவை பதவியில் அமர்த்தினர்' என்றார். அன்று அக்கூற்றை நான் மறுத்துப் பேசினாலும், அதில் ஒரு உண்மை உள்ளதென எனக்குத் தோன்றுகின்றது. அதன்படி பார்த்தால், சந்திரிகா இரு ஆவிகளில் தங்கியுள்ளார். மாறாக, அவர் சுயாதீனமான சுயேட்சையான பெண் தலைவர் அல்ல. மக்கள் பண்டாரநாயக்கா மற்றும் குமாரதுங்க பற்றி கனவு கண்டுகொண்டிருக்கும் வேளை சந்திரிகா மேற்கத்தேய சக்திகளின் கைப்பாவையாகியுள்ளார். வாசுதேவ போன்றோருக்கு இந்நிலைமை தற்போது விளங்கத் தொடங்கியுள்ளது.

உண்மையில், பெண்களின் பலம் தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக தற்போது உலகத்திற்கு தெரியவந்துள்ளது. இந்தப்புதிய தொழிநுட்பங்கள், பெண்களுக்கு அன்றாட நடவடிக்கைகளில் தடையேற்படுத்தாது பயன்படுத்தக் கூடியவை. இதனால் வேலைகள் வீட்டுக்கு வருகின்றன. மறுபுறம் வீடு வேலைத்தளமாகியுள்ளது. வேலைச் சுமை குறைந்து, செயல்கள் இலகுவாகின்றன. இதனால் உயர்நிறைவேற்று தன்மையான துறைகளில் பெண்கள் ஈடுபடுகின்றனர். இன்னும் சில நாட்களில் முகாமைத்துவ வேலைகள் பெண்கள் கைகளிலேயே தங்கியிருக்கும். தற்போது மேற்கத்தேய நாடுகளில் மட்டுமன்றி கீழைத்தேய நாடுகளில் கூட பெண்கள் கணணி மூலம் முகாமைத்துவ வேலைகளை கைப்பற்றியுள்ளனர். இன்ரநெற் உள்ள வீடுகளில் பெண்கள் பெரும் வளர்ச்சிப் பெறுகிறார்கள். ஏனெனில், குழந்தையை கையிலேந்திக் கொண்டு உலகத்தையே பெண்கள் சுற்றிவருகின்றனர்.

இதுசரியாக புத்தர் போதனை புரிந்துபோன்றதாகும். புத்தரின் செயலால் பெண்களும் அடிமைகளும் தர்மத்தை கற்க முடிந்தது. இதனால் அந்தணர்கள் வசமிருந்த அறிவு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. புதிய தொழிநுட்பத்தினாலும் இவ்வாறனதொரு நிலைமையே தோன்றும் எனலாம்.

*கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன*
*'நினவ்வ' லக்பிம*

# வயல்களை விட்டு நெடுந்தூரம்...

**- விவேகி**

"எனது வயது 23. எனது சொந்த இடம் பன்குளம். 90ல் ஏற்பட்ட கலவரத்தினால் பெற்றோருடன் இடம்பெயர்ந்தேன். வளமான வாழ்க்கையும், வயற்காணிகளும் எங்களை விட்டுப்போயின. அகதியாக அலைந்து முத்தையன்கட்டு சென்றேன். பின்னர் புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் எங்கள் அவல வாழ்வைத் தொடர்ந்து கஷ்டப்பட்டு இப்போது திருகோணமலை திரும்பியுள்ளோம். இங்கு வந்தது சந்தோசம்தான். என்றாலும் சகஜமாக வாழும்நிலை என்று வருகிறதோ அன்றுதான் எனக்கும் என்னைப் போன்று பன்குளத்தை விட்டு வெளியேறி மீள வந்திருப்போருக்கும் உண்மையான சந்தோசம்" என்கிறார் விஜயா.

அலஸ்தோட்டம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள விஜயாவுக்கு இந்தச் சிறிய வயதில் மூன்று குழந்தைகள். மூத்த மகனுக்கு 6 வயதாகிறது. அவன் அகதிமுகாமிலுள்ள பாடசாலையில் முதலாம் ஆண்டில் சேர்க்கப்பட்டிருக்கிறான்.

ஊரை விட்டு ஓடும்போது அவளுக்கு வயது 19. 9ம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். படிப்பு நின்றது. வறுமையும் துயரமும் சேர்ந்தன. கன்னியாவிலிருந்து தங்களைப் போல அகதியாக ஓடிவந்த குடும்பமொன்றைச் சேர்ந்த அன்ரன் சுரேஷ் என்ற இளைஞரைப் பெற்றோரின் சம்மதத்துடன் 'இளவயது' கல்யாணம் செய்து கொண்டார். கூலிவேலை செய்து மனைவியையும், குழந்தைகளையும் காப்பாற்றிய அன்ரன் சுரேஷ் இப்போது கடற்றொழிலுக்குப் போய்வருகிறார்.

விஜயாவின் பெற்றோர்கள் இந்தியா சென்றுவிட்டார்கள். தனது கிராமமான பன்குளத்திலோ, கணவனது கிராமமான கன்னியாவிலோ குடியேறக் கூடிய சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லையென்பதால் அகதி வாழ்வு மேலும் தொடரும் என்ற சோகம் அவர் பேச்சில் தொனிக்கிறது.

மே. 17ல் சுயவிருப்பின்பேரில் அரச உதவியுடன் புதுக்குடியிருப்பை விட்டுப் புறப்பட்ட விஜயா பேசாலை முகாமில் தங்கவைக்கப்பட்டு மே. 30ல் திருகோணமலை கொண்டுவரப்பட்டிருக்கிறார்.

மானிப்பாயைச் சேர்ந்த ஜெரோம் ஜெயராசா (24) கூறுகிறார். "சூரியக்கதிர் - 1 நடவடிக்கையின்போது எனது உறவினர்களுடன்சொந்த இடத்தைவிட்டு மட்டுவிலுக்கு இடப் பெயர்ந்தோம். பின்னர் அங்கேயும் இருக்கமுடியாத நிலைதோன்றவே கிளாலியூடாக கிளிநொச்சி வந்து தங்கியிருந்தோம். அங்கிருந்து மடுவுக்கு இடம்பெயர்ந்தோம். மடுவிலிருந்து எல்லோரையும் வெளியேறச்சொன்னார்கள். இப்போது உறவினர்களை நம்பி இங்கு வந்துள்ளேன்.

கையில் குழந்தையுடன் நின்றார். யாருடைய குழந்தை என்ற கேள்விக்கு நெளிந்தபடியே பதில் சொன்னார். மயிலிட்டியைச் சேர்ந்த உறவுக்காரப் பெண்ணைக் காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டாராம். இப்போது ஒரு குழந்தையின் தகப்பன் அவர்.

தங்கள் கிராமங்களை எப்போது காண்போம் என்ற ஏக்கம் இவர் பேச்சில் பெரிதாகக் காணப்பட்டது. மயிலிட்டியையும், மானிப்பாயையும் பாதகர்கள் அழித்து விட்டார்களே என்று குமுறுகிறார் இந்த இளைஞர்.

இவர் முகாமைவிட்டு வெளியேறி உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருக்கிறார். ஏதாவது தொழில் தேட வேண்டும் என்ற முனைப்பும் இவரிடம் காணப்பட்டது.

மடு, பேசாலை ஆகிய பகுதிகளிலிருந்து தங்கள் சொந்த இடம் நாடி 226 குடும்பங்களைச் சேர்ந்த 820 ஜீவன்கள் அண்மையில் இங்கு வந்துள்ளன. புதிய திருமணங்கள், புதிய வரவுகள் எனக் கலமாற்றங்களுக்குகிசைவாகவே இவர்களது வருகையும் அமைந்துள்ளது. சுமார் 200 பேர் அகதிவாழ்வின்போது பிறந்தவர்கள். தங்கள் பெற்றோர் வாழ்ந்த மண்ணை - தாம் இனிமேல் வாழப்போகும் மண்ணை - முதன்முறையாகக் காண்கிறார்கள்.

பேசாலையிலிருந்து ஏப்ரல் 21ல் 21குடும்பங்களைச் சேர்ந்த 79 பேரும், மே 15, 13, 30 ஆகிய தினங்களில் முறையே 15, 17, 58 குடும்பங்களைச் சேர்ந்த 308 பேரும், ஜூன் 1, 3 ஆகிய திகதிகளில் முறையே 80, 33 குடும்பங்களைச் சேர்ந்த 386 பேரும், மடுவிலிருந்து மே 25ல் 10பேரைக் கொண்ட 3 குடும்பங்களும், ஜூன் 8ல் வவுனியாவிலிருந்து 37பேரைக் கொண்ட 14 குடும்பங்களும் ஒளியைத் தேடி நம்பிக்கையுடன் வந்து சொந்த இடங்களிற் குடியமரும் நன்னாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.


இவர்களில் 15 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அலஸ்தோட்டம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். ஏனையோர் வெளியில் உறவினர்களை அண்டியிருக்கின்றனர். நிலாவெளி முகாமில் சில குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. இவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் கூடாரங்களையும் குடம், அரிக்கன் விளக்கு, ரீ ஷேர்ட் என்பவற்றையும் ஓரளவு வழங்கியுள்ளது. எகெட் நிறுவனம் உணவுப் பொருள்களை விநியோகித்துள்ளது. குடும்பப் புனர்வாழ்வு நிலையமும் ஆலோசனைகளை வழங்கி ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து வருகிறது. அகதிகள் எங்கிருந்து எப்போது வந்தாலும்

☛ 20

நன்றி - நூலகத்திட்டம்







படையினரை கதிகலங்கச் செய்த மட்டக்களப்பு ஊர்வலம்!

# "எமது மண்ணை எமக்குத்தா!"

சர்வதேச ரீதியாக எத்தனையோ தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டாலும் இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமைகள் தினம், சித்திரவதை தினம் என்பன மிகப் பொருத்தமானவையாக அமைந்து விடுகின்றன. அந்த அளவிற்கு மனித உரிமைகள் மீறப்பட்டும், சித்திரவதைகளின் கொடுமையும் இலங்கையில் நிறைந்தே காணப்படுகின்றன.

ஜூன் 26ம் திகதி சர்வதேச சித்திரவதை ஒழிப்புத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டு உலகமெல்லாம் நினைவு கூரப்பட்ட வேளையில் இலங்கையில் இத்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மட்டுநகரின் மையப்பகுதியில் மிகவும் உணர்ச்சிபூர்வமான நிலையில் நினைவு கூறப்பட்டது.

மட்டக்களப்பில் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ்க் குழுக்கள் பல இருந்தும், கடந்த மே தினத்தைக் கூடக் கொண்டாடுவதற்கு இக்குழுக்களுக்கு அரசின் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மிகவும் இறுக்கமான அரசாங்கத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் நகரின் மையப்பகுதியில் சர்வதேச சித்திரவதை ஒழிப்புத்தினம் நினைவு கூரப்பட்டமை அரச சார்பான பல தரப்பினரையும் மூக்கின் மேல் விரலை வைக்க வைத்துள்ளது.

பார் வீதியில் ஆரம்பிக்கப்பட்ட சர்வ்தேச சித்திரவதை ஒழிப்புத் தினத்தையொட்டிய இவ்வூர்வலம் பார்வீதியின் ஊடாக அரசடிச்சந்தி, பொலிஸ் நிலையம், மணிக்கூட்டுச் சந்தி, வாவிக்கரை ஓரமாகச் சென்று வில்லியம் ஓல்ட் ஞாபகார்த்த மண்டபத்தை வந்தடைந்தது. சிவப்பு நிற முழு அங்கி அணிந்து ஆண்களும் பெண்களுமாக அணிவகுத்துச் செல்ல, கொற்றவையின் உருவத்தைத் தாங்கிய வண்டி பின் செல்ல அடக்கி வைத்திருந்த தமது மன அழுத்தங்களை வெளிக்காட்டிய வண்ணம் கோஷங்களை எழுப்பியபடி சென்ற ஊர்வலம் பார்த்தோரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

"எமது மண்ணை எமக்குத் தா", "பயமின்றிய வாழ்வை அடைவோம்", "ஆக்கிரமிப்பாளர்களே வெளியேறுங்கள்" போன்ற கோசங்களை நகரே அதிரும் வண்ணம் சத்தமிட்டுச் சென்ற இவ்வூர்வலம் கச்சிதமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்ததும் இதன் இன்னுமொரு சிறப்பு. ஊர்வலத்தின் உச்சக்கட்டமாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்பு கறுத்த உருவம் ஒன்றை ஊர்வலத்தில் சென்றோர் சின்னா பின்னப்படுத்தி பிய்த்து எறிந்தமை அவர்களின் உள்மனக்குமுறல்களை வெளிப்படுத்துவதாக இருந்தது. மேலும் மணிக் கூட்டுக் கோபுரத்தைச் சுற்றிய வீதியில் புரண்டு, உருண்டு அழுது தமது மன உணர்வுகளை வெளிப் படுத்தியமை இலங்கையில் இன்று அல்லல்படும் தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான மனக் குமுறல்களையே வெளிப்படுத்தியதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஊர்வலம் செல்லும் வழியில் தம் கண்எதிரில் தென்பட்ட அரச படையினரையும், பாதுகாப்பு முகாம்களையும் கண்டு ஊர்வலத்தில் சென்றோர் உணர்ச்சிவசப்பட்டுக் கத்தியமையும், அவர்களை வெளியேறும்படி அவர்களின் முகத்திற்கு நேரே பேசியமையும் அரச படையின்பால் மக்கள் கொண்ட வெறுப்பையும், அரச படைகளால் மக்கள் அனுபவிக்கும் கொடுமைகளையுமே வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இவ்வூர்வலத்தை சாதாரண பக்திபூர்வமான ஊர்வலமாகக் கற்பனை செய்து அனுமதி வழங்கிய பொலிசார் ஊர்வலத்தின வேகத்தைக் கண்டு கதிகலங்கிப் போனார்கள் என்று சொன்னால் மிகையாகாது. அவசர அவசரமாக அழைக்கப்பட்ட அரச உளவுப் படையினரால் ஊர்வலம் வீடியோ மூலம் பதியப்பட்டதுடன், ஊர்வலம் சென்ற வழியெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டமை அரசின் எச்சரிகை உணர்வை புலப்படுத்துவதாய் இருந்தது.

அது மட்டுமல்லாமல் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பொலிஸ் உயர் அதிகாரிகளும், உளவுப்பிரிவினரும் ஊர்வல ஏற்பாட்டாளர்களை துண்டித் துண்டி விசாரித்தமையும், அவர்களின் ஏனைய நடவடிக்கைகளும் நடந்து முடிந்த விடயங்கள் தங்கள் கையைமீறிப் போய்விட்டதாக அவர்களே ஏ்ற்றுக் கொள்வதாய் இருந்தது.



வில்லியம் ஓல்ட் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும், தங்கள் மனக்குமுறல்களை, தாங்கள் அரசின் படைகளுக்குப் பயந்து வாழ்வதை மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக வெளிப்படுத்தியதை ஏனையோர் அதைப்பார்த்து கண்ணீர் சிந்தும் அளவிற்குக் கூறியதில் இருந்து அவர்களுடைய உணர்வுகள் எந்த அளவிற்கு அடக்கப்பட்டிருந்தது என்பதை உணரக் கூடியதாக இருந்தது. இக்கூட்டத்தில் தென் இலங்கையைச் சேர்ந்த அமைப்புகளின் பெண் பிரதிநிதிகள் கருத்துக் தெரிவிக்கையில் இலங்கையில் நிலவும் ஒடுக்குமுறையும், அரசின் செயற்பாடுகளும், தமிழ் மக்களுக்கு மட்டும் என்றில்லாமல் அது சிங்கள மக்களைக்கூட பெருமளவு பாதித்திருக்கின்றது என்று தெரிவித்ததோடு, இன்று தமிழர் படும் துயரங்களில் தாங்கள் பங்கெடுப்பதாகக் கூறியமை அவர்களின் பெருந்தன்மையைக் காட்டியது.

பல்லைக்கழக மாணவன் ஒருவர் தென் இலங்கையில் புதைகுழிகளைத் தோண்டி அரசியல் இலாபம் தேடிய அரசு வடகிழக்கில் அத்தகைய புதைகுழிகள் இருந்தும் பாராமுகமாக இருப்பதும், அதை மறைக்க முற்படுவதும் அரசின் இனத்துவேசத்தையே வெளிப்படுத்துவதாகக்கூறி மட்டக்களப்பில் சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் உள்ள புதைகுழிகள் உடன் தோண்டப்படல் வேண்டும் என ஆவேசமாகக் கூறி மண்டபத்தைவிட்டு வெளியேவந்த உடன் வெளியில் நின்ற அரசின் உளவுப்பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டு தீவிர விசாரணையின் பின் அன்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளார். அது மட்டும் அல்லாமல் ஊர்வலம் நடாத்துவதில் முன் நின்ற பலரை பொலிசார் தொடர்ந்தும், விசாரணைக்கென பல தடவைகள் அழைத்ததில் இருந்து ஊர்வலமும் அதில் கூறப்பட்ட விடயங்களும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதை உணர முடிகின்றது.

இவ்வூர்வலத்தை ஏற்பாடு செய்து நடாத்திய பொது நிறுவனங்களான பொதுஜன அபிவிருத்தி மன்றம், தடாகம் கிராமிய மக்கள் அமைப்பு, கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றியம், அரங்கச் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்களைக் கண்டு நடைபெற்ற ஊர்வலம் தொடர்பாக கேட்டபோது, அடக்கப்பட்டிருந்த மக்கள் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு உரிய களம் இல்லாத நிலையில் தாம் அதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட அனைவரும் வடகிழக்கின் பல பிரதேசங்களைச் சேர்ந்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் வெளிப்படுத்தியவை அனைத்தும் உண்மையில் அவர்கள் அனுபவித்தவை என்றும் தெரிவித்தனர். அத்தோடு மக்கள் தமது துன்பங்களை வெளிப்படுத்த வழமையான நடவடிக்கைகளான அரசியல்வாதிகளை நாடுதல், அறிக்கைச் செய்தல் என்பவற்றில் இருந்து விடுபட்டு தமது பிரச்சினைகளை தாமாகவே வெளிபடுத்தமுனைவது அவர்களின் அரசியல் முதிர்ச்சியையே காட்டுகின்றது என்றும் கூறினார்.

காலத்தின் தேவையைக்கருதி நடாத்தப்பட்ட இவ்வூர்வலம் தவிர்க்க முடியாதது என்பதோடு இதனால் ஏற்படும் கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்ததாகக் கூறும் இவர்கள் உண்மையில் பாராட்டப் படவேண்டியவர்கள் என்பதோடு, பலரின் உணர்வலைகளையும் தட்டி எழுப்பி அரசுக்கு வக்காலத்து வாங்கும் பிழைப்பு அரசியலின் இருப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளார்கள்.

கர்சன்.

நன்றி - நூலகத்திட்டம்



"அயோத்தி, அத்தினாபுரம், காவிரிப்-பூம்புகார், சைதாப்பேட்டை. ரோட்டுக்கு கீழே இன்னொரு ரோடு. மேலே மனுசன் போறான் வாறான். கீழே கொதக்குப் புதக்குன்னு பிராய்டு வீட்டு அன்கன்ஷஸ் மைன்டாட்டம் நகர்ந்துகிட்டு வருது இம்மாம் பெரிய அகலத்துல மனுசன் விட்டுக் கழிச்ச சாக்கடை. சிந்துவெளி முத்திரை, நாலு வேதம், ஆறு சாஸ்த்ரம், அறுவத்தினாலு கலை, ஆனையேத்தம், குதிரையேத்தம். ஒரு அம்பை உட்டா அது நூறு, ஆயிரமா மல்ட்டிப்ளை பண்ணி, கூடா கூடாம நொய்யினு சாக்கடைத் தேக்கத்துலேருந்து கிளம்பற கொசுக்களாட்டம் வரப்போ அதன் மறைவிலே கப கபன்னு ஒளிச்சுவாற பிரம்மாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், பாசுபதாஸ்த்ரம். இதல்லாம் புளுகுடாங்கற உப்பாநிஷத்து திரிபிட்க்கு. அடியைப் புடிச்சுப்பாடின சங்கம் பொயட்ரி. மனுசனுக்கு உதவாத மனுதர்மம், மாமனுக்கேத்த சீதை, மச்சிக்கேத்த குறளு. நாடியில சோசியம், உள்வீட்டு ஏட்டுச் சொரக்காயில ஜனக்கூட்டத்தின் ஜாதகக்குறிப்பு. எதுகை மோனை, ஏண்டா இதுன்ன புதுக்கவிதை. வெட்டடா தட்டடாங்கற அரிவா, சுத்தி. சுத்திக்கிட்டுதர்மத்தை அறுக்கிற சக்கரம் அஸ்தமிக்கிற சமயத்துலே போட்டோவுக்கு போஸ் குடுத்த உதயசூரியன். எல்லாமே கரகாட்டம் போட்டு பாதாளத்துலே ஸ்லோ மோஷனில் யுகாந்திர யாத்ரை வருதுடா. புள்ளை குட்டி இல்லாத புணர்ச்சி விந்திலேருந்து புஸ்-வாணப் புரட்சி வரைக்கும் அந்தப் பாதாளக்குழாயில ஒண்ணடி மண்ணடி, எந்த அவதாரமும் எந்த யுகத்து தர்மாவேசப் புரட்சி சாஸ்தரமும் சாதிக்காத சமத்துவம் நிலவுதுடா அந்தக் குழாயிலே. அதுக்குள்ளதாண்டா எனக்கு நேத்து டூட்டி. பீ டூட்டி" என்றான் சாமுண்டி.

தண்ணி போட்டிருக்கிறான்.

இந்த யூகத்தினால் தான் நான் ஒன்றும் எதிர்வாக்கு தரவில்லை. என்னால் தரமுடியாது என்பது ஒரு பக்கம் இருக்க, "என்னடா ரெண்டு நாளா ஆளக் காணம்?" என்ற என் அனுதாபக் கேள்விக்கு அவன் தந்த இந்த தோரணையான பதிலைக் கேட்டு "பதிலா இது?" என்று நான் கேட்டிருக்க வேண்-டியது, கேட்கவில்லை.

காக்கி பேண்ட் ஜிப்பைச் சேர்த்து மேல்வாக்காக இழுத்து கிளிப்பை அழுத்திவிட்டு என் செக்யூரிட்டி வேலைக்குரிய டியூனிக்கை கொக்கியிலிருந்து எடுத்து உதறினேன். நான் வேலை செய்யும் சுக்குணியப்பன் அன்ட் சன்ஸ் கோடவுன்கார பாலசுந்தரத்தின் தயவில் அருகாமையிலேயே கிடைத்த ஒரு ரூம், ஒரு கிச்சன், ஒரு வராந்தாப் பொந்து அது. வராந்தாவில் சாமுண்டி நின்று இடது கையை ரூம் வாசற்-படியில் முட்டுக் கொடுத்து வலது காலை ஊன்றி இடதுகாலை கிருஷ்ணாவதார முறையில் மடக்கி, கால்விரல்களை வலது பாதத்துக்கு வலப் பக்கமாக ஊன்றி, வலது கையை இடுப்பில் வைத்தபடி "அய்யப்பா என் கோவணம் புதுசப்பா" என்றான்.

டூட்டி முடிந்ததும் குளித்துவிட்டு கோவணத்தை மாற்றுகிற தன்னுடைய சுத்தவஸ்த்ரானுஷ்டானத்தை அறிவிக்கிறானாம். அதற்காக வெறும் கோவணதாரியாக மட்டுமே இந்த சென்னை மாநகரத் தெருவில பஸ் ஏறாமல் - எந்த பஸ்காரன் ஏறவிடுவான்? - நடையாக நடந்து இப்படி விஸிட் வரவேண்டுமா? கேட்கப்பட்ட என் பழம்பெரும் கேள்வி. அப்பப்போ நான் கேட்கும் போது, தத்துவக்கோணம். அரசியல் கோட்பாட்டுக்-கோணம், அழகியல் கோணம், போதாததுக்கு இதை எல்லாம் மிஞ்சிய மருத்துவக் கோணத்தில் எல்லாம் இருந்து தனது கோவணத்தை நியாயப்படுத்தி விடுவான் சாமுண்டி. கேட்கிறவன் அறிவை மதிக்கிறவனாக இருந்தால் உடனே அவுத்துப்போட்டு அவனைப் போல் நிற்க வேண்டும். அவனுடன் சிறுபிராயத்திலிருந்து பழகிய தோஷம், நான் ஒரு புக்ரீடர். அவ்வளவு தான். அறிவை இவ்வளவு தூரம் மதிக்கிறது. அது, இது, எல்லாம் வராது. நல்லவேளையாக!

பாலசுந்தரம் தமது கோடவுனில் சரக்கு மேற்-பார்வைக்கும் கணக்கர் வேலைக்கும் அவனைக் கேட்டார், "செக்யூரிட்டியாகவாவது இரு. படிச்சவன் நீ!" என்றார். அவன் எல்லாவிதமான மரியாதைக்கார வேலைகளையும் ஒரு வெறிச் சிரிப்புடன் மறுத்து விட்டான். அந்த வெறியின் பின் நின்றது ஒரு வெறுமை. அதை நானறிவேன். ரிடையராகிவிட்ட எங்களூர் தமிழ் வாத்யாரான வி.பி.எஸ். மெய்யன் அறிவார். அறிவார் என்றாலும் அதை அறிந்த கணத்திலிருந்து அவருக்கு அறிநிலை இல்லை. உயிர் மட்டும் ஒரு நகைச்சுவைத் துணுக்கிற்குள் சிரிப்பை எதிர்பார்த்து நிற்கும் கருப்பொருளாக இன்னும் இருந்து கொண்டிருக்கிறது

நான் சாமுண்டியின் கோவணத்தைப் பார்க்காமல் இருக்க முயன்றபடி, அவனது கண்களையும், சந்திக்க தைரியம் இல்லாமல் தங்கப் பெயின்ட் பூசின பிளாஸ்டிக் பட்டன்களை டியூனிக்கில் மாட்டத் தொடங்கினேன்.

0 0 0

"சொல்லுடாலே, அகரமுதல...." என்ற தமிழ் வாத்யார் வி.பி.எஸ். மெய்யனின் பிரம்பு, தேவப்புள்ளைகள், பாப்பாராப்புள்ளைகள், புள்ளைப்-புள்ளைகளின் தலைகளுக்கு மேலே ஏரோப்பிளேன் மாதிரிக் கிளம்பி ஓட்டாமத்தட்டாம தூரத்தில் உட்கார்த்தி வைக்கப்பட்ட அரிசனப்பசங்களுக்குள் குறிவைத்து சாமுண்டியைக் காட்டியது.

என்னருகே என்னைப்போல் முழங்கால்வரை கட்டின முண்டுடன் உட்கார்ந்திருந்த அவன் விசுக் என்று எழும்பி, "பகாசுர முதலை எல்லாம் சாதி பகவான் சார்" என்றான். புரிந்த எனக்கு 'பகீர்' என்றது. மற்றப்பசங்கள் எவருக்குமே புரிந்த குறிப்பு இல்லை. கண்மண் தெரியாமல் சாமுண்டிக்கு பிரம்படி தரப்போகிறார் வாத்யார். அந்த அடி பரவி எங்களுக்கும் விழும் என்றிருந்த என்னை வியப்பில் ஆழ்த்தியது மெய்யனின் கம்யூனி-ஸத்தனமான 'கெக்கெக்கே' சிரிப்பு.





- பிரமிள்

ஏற்கெனவே "தமிழ் வாத்யார் ரொம்ப நல்ல வாழ்றா" என்று ஒலிச்சேஷ்டையுடன் சாமுண்டி கூறியிருந்ததின் தாத்பர்யம் அப்போது தான் எனக்குப் புரிந்தது. இரண்டு மூன்று நாட்கள் நான் ஸ்கூல் கட் என்பதால் இது முன்பே எனக்குத் தெரியவில்லை.

"யாப்பிலக்கணம் தெரியாத மண்டு! சார் என்பதை நீக்கி 'முதற்றேயுலகு' என்பதைச் சேர்க்க வேண்டும். எங்கே நீ சொல்லு" என முன்வரிசைச் சூட்டிகைப் புள்ளைப்புள்ளை ஒன்றிடம் கேட்கிறார் மெய்யன். அது கோலாகலமாக 'அகரமுதல் எழுத்தெல்லாமாதி பகவன் முதற்றேயுலகு' என்று ஒப்பிக்கும்போதே இப்படிக்கூட ஒரு முட்டாள் ஜன்மமா என்ற பாவனையில் கைகாட்டி "வெவ்வெவ்வெவ்வே" என்கிறார் மெய்யன்! எல்லோருக்கும் ஒரே சிரிப்பு.

சாமுண்டி என் சட்டையில்லாத முதுகில் சதக் என்று கிள்ளினான். எனக்கு பைத்யக்கார ஆஸ்பத்திரி என்றால் எப்படி இருக்கும் என்றொரு லேசான தெளிவு ஏற்பட்டதே தவிர ஒன்றும் புரியலை. "பொர்ச்சிடா"! என்றான் சாமுண்டி. முதன்முதலாக அப்போது தான் அந்தச் சொல் என் அறிவிற்குள் விழுகிறது.

"புரட்சி வருதுடா புள்ளைங்களா" என்றார் மெய்யன். என்றபடி இரண்டு கைகளையும் அகல விரித்தார். முதலில் கொடுத்த சிலுவைப் போஸ் திகுதிகுவென்று எரியும் நெருப்புப்போஸ் ஆக மேல்நோக்கி ஆடியது. வேஷ்டிக்கட்டு தடுத்திருக்கா-விட்டால் அப்படியே ஒரு நடராஜபோஸ் கூடக் கொடுத்திருப்பார் என்பது என் அந்தரங்கக் கருத்து. தொடர்ந்து 'ஹய்யா' என்று ஓடிவந்தார்கள் கால்-மார்க்ஸ்ஸும், அம்பேத்கரும், பெரியார் ராமசாமி 'உய், உய்'னு விஸில் அடிக்கிறாரு. பொல்லுக்கம்பை ஊனிக்-கிட்டு 'நானும், நானும்' என்று மகாத்மா காந்தியாரு, "சாதிமத சேதி. சரித்திரத்தின் பேதி" என்றார் மெய்யன். அப்புறம் ஒரு எல்லையில்லாத முக்கோண தத்துவம். அதை இப்படி பிளாக்போர்டில் எழுதிக் காட்டினார்.




தத்துவம் புரியாவிட்டாலும் முக்கோணங்களின் டிசைன் பிடித்திருந்தது. சிலேட்டுகளில் எழுதிக் கொண்டோம், தாறுமாறாய்.

கல்வீட்டில் வாழக்கூடாது. ஊர்க்கோவிலுக்குள் போகக்கூடாது. வேதசாஸ்திரம்' அனுஷ்டானம் கிடையாது, சொம்பு, பட்டு, நெய் ஏதும் தொடப்படாது, ஜாதிக்காரன் கண்ணிலேயே படப்படாது. ஸ்கூலுக்குப் போனாலும் தனிப்பானைத் தண்ணிதான். இதெல்லாம் நியாய அநியாயக் கோணம் ஒன்றிலிருந்து எங்களுக்குக் காட்டப்பட்டாலும், கால்மார்க்ஸின் சுரண்டல் தத்துவம் இல்லாவிட்டால் "ஏன்?" என்பது புரிந்திராது. எனவே "காரிலமார்க்ஸ் வாராரு" என்ற ஒரு தினுசான சுலோகத்தை சாமுண்டி உருவாக்கினான். காரணம் பசங்களான எங்களுக்கு கார் என்றால் கண்கொள்ளாக் காட்சி!

குளத்து மேட்டில் போயிருந்து ஆரும் காணாமல் கெட்ட வார்த்தைகளைக் கத்தி விழுந்து விழுந்து சிரித்த சாமுண்டியும் நானும் "காரிலமார்க்ஸ் வாராருடா, புரட்சி வருதுடா புள்ளைங்களா!" என்பதையும் சேர்த்துக் கத்தினோம். குட்டிப்பசங்களுக்கு எங்கள் சுலோகங்கள் அத்துபடியாகவில்லை. ஆனாலும் உற்சாகமாக "காரல் மாரல்" என்று கத்திக்கொண்டு சாமுண்டிக்குப் பின்னால் ஓடினார்கள். இப்போதும் எங்கள் சேரியில் சாமுண்-டியை "காரல் மாரல்" என்று தான் குறிப்பிடுவார்கள்.

குடிசையின் வளைக்கம்புகளில் செருகப்பட்டு ஓலைக்கறுப்பு ஏறிய புத்தகங்கள், ஒன்று, இரண்டு, பத்து என்று சாமுண்டியிடம் சேர்வதை அப்போதே கண்டு கொண்டேன். சாமுண்டி மீது குறிவைத்த வி.பி.எஸ். மெய்யன் கொடுத்த புத்தகங்கள் அவை.

ஒரு நாள் மெய்யன் "என்னடா உங்களுக்-குள்ளேயே ஜாதிக்குள்ளே ஜாதி?" என்று கேட்டார். நாங்கள் பரபரவென்று முழித்தோம். "பறையர், பள்ளர், தோட்டி, அருந்ததியர், ஆதிதிராவிடர் - எல்லாருமே தீண்டாமைக்குள்ளே! ஆனால், ஒருத்தனுக்கு ஒருத்தன் கலியாணம் வாடிக்கையில்லே, அப்புறம் எங்கடா வரும் புரட்சி?" என்று கூச்சல் போட்டார்.

இதற்கு ஒரு பின்னணி உண்டு. மெய்யன் தமது செல்வாக்கு, சொல்வாக்கு இரண்டையும் பின்னி, வேறு சில ஆசிரியர்கள், சில உள்ளூர் அரசியல்வாதப் புள்ளிகள் ஆகியோரைப் பிணைத்து 'பொதுப்பானைத் தண்ணீர்ப் புரட்சி' ஒன்றைக் கொண்டுவர முயன்றார். கூட்டம் போட்டபோது பல கைகள் தட்டப்பட்டாலும் ஜாதீயப் பிதாமகர்கள் தீண்டப்படாதவர்களுக்குள் இருந்த வேறுபாடுகளைப் பயன்படுத்தி மெய்யனை முறியடித்து விட்டார்கள். ஆப்ரேஷன் சக்ஸஸ், நோயாளி குளோஸ்! அதாவது ஸ்கூலில் அடுத்த நாள் பொதுப்பானையை மெய்யன் கொண்டுவந்து வைத்தபோது பிரின்ஸிபால் சில தீண்டப்படாத வகுப்புப் பிரதிநிதிகளை முன்வைத்து, "இவங்கெல்லாம் இத ஒத்துக்கிட்டா செய்யுங்க" என்றார். அவர்கள் "ஒங்களுக்கென்ன சாமி! உதபடுறது நாங்கல்ல?" என்-றார்கள். 'உதைச்சா திருப்பி உதைங்கடா!' என்று சொல்லக் கூடிய மெய்யன் திடுக்கிட்டார்.' நேத்தெல்லாம் ஒத்துக்கிட்டீங்களே" என்றார் ஹீனஸ்வரமாக. "அது நாங்கல்லை சாமி. அது வேற சாதி அரிசனங்க. நாங்க வேறசாதி அரிசனங்க."

"காந்தி கூட பப்ளிசிட்டிக்காக ஒண்ணு ரெண்டு தவிர மற்றப்படி ஆரும் போகாம மூடிக்கிடந்த கோவில்களுக்குள்ளதான் அரிசனங்களுக்கு ஆலயப் பிரவேசம் நடத்தினாரு" என்றார் பிரின்ஸிபால். "இதெல்லாம் தேவையான ஷோதான் மிஸ்டர் பொய் சொல்லா மெய்யன். ஆனால் பிராக்டிகல் இல்லே. காந்தியான காந்தியே புரிஞ்சுகிட்ட விஷயம் இது".

அருகே வரிசையாக நின்ற பசங்களுக்கு அன்று தான் மெய்யனின் ஃபுல்நேம் வி. பொய் சொல்லா மெய்யன் என்று தெரிந்தது. 'அசத்தல் பேருடா' என்று கிசுகிசுத்தான் சாமுண்டி.

பிஞ்சுகளான எங்களுக்கு நாடகத்தின் சமூகவக்ரம், அதன் இரும்புத்தனமான மூர்க்கம் எத்தகையது என்று புலனாகவில்லை. மிஸ்டர் பொய் சொல்லா மெய்யன் கிளாஸ் ரூம்களில் சொல்ல விரும்புகிறதைச் சொல்லலாம். ஆனால் அரிசனப் பசங்க-ளுக்கு தனிப்பானைத் தண்-ணிதான் என்று முடிவாயிற்று.

ஓரிரு நாட்களுக்குப் பின்பு கணக்கு வாத்யார் சுந்தரநாதன், "அன்னிக்கு நீங்க பொதுப்பானைப் புரட்சிக் கூட்டத்தில் பேசினது - ஆஹா! இலக்கியம்னா இலக்கியம்! கல்ச்சர்னா கல்ச்சர்!" என்றதும், மெய்யன் சீத் தூ! மனுசனாடா நீ" என்று காறித்துப்பவும் கைகலக்காத குறையாக இருவருக்கும் சண்டை. மெய்யன், "டேய் சுந்தரசாமி, அந்தரநாதா! உன் மண்டைக்-குள்ளே இருக்கிறது மனுசத்-தனம் இல்லாத இலக்கியப் பு....!" என்று முடிவாகக் கத்தினார். இதன் தாத்பர்யம் சாமுண்டிக்கும் எனக்கும் பரிபூர்ணமாகப் புரியா-விட்டாலும் எங்கள் குளத்து மேட்டுக் கெட்டவார்த்தைக் கட்சியில் பொய் சொல்ல மெய்யனும் இருக்கிறார் என்றொரு குஷி!

இங்கிலீசும், தமிழுமாய் நிறைய புக்ரீடிங், கட்சிகளின் பிரசுரங்களைப் படித்தல், எழுதிப் பார்த்தல் எல்லாம் இருந்தாலும் முறையான கல்விச்சாலைப் படிப்பு ஏறத்தாழ எஸ்.எஸ்.எல்.சிக்கு முன்பே சாமுண்டிக்கு நின்று விட்டது. எனக்கு மிலிட்டரி ஆர்வம். ஒரு தடவை இதற்காக மெட்ராசுக்கு ஓடிப்போய் வயது போதாது என்று பத்திரமாகத் திரும்பி வந்துவிட்டேன்.

புத்தகப் படிப்பை விடாவிட்டாலும் கிணற்றில் தூர் எடுக்கும் வேலையில் சாமுண்டி நிபுணன் ஆகிவிட்டான். கிணறுகளுக்குள் தண்ணீரைக் கொண்டுவரும் ஊற்றுக்களுள் ஆபூர்வமாய் சில பாதாளக் குகைகள் என்று அவன் ஏதோ இங்கிலீஷில் படித்து வைத்திருந்தான். ஒரு நாள் சரியாக ஊறாத ஒரு பாறை ஊற்றின் தூர் அடைப்பை உடைத்து உள்ளே போனவன் சுமார் ஐந்து நிமிஷங்களாக வெளியே வரவில்லை. திடீரென்று ஊற்றிலிருந்து நீர் குபுக் என்று வந்தது. கூடவே, குத்துக் கம்பை இரண்டு கைகளிலும் பிடித்தபடி கால்கள் முன்னாடியும், தலை பின்னாடி-யுமாக சாமுண்டி வெளியே வந்து கிடந்தான்- பிரஞ்ஞை இல்லாமல். கிணற்றுக்கு வெளியே கொண்டு வந்துபோடப்பட்டதுமே நல்ல காற்றில் அவனுக்கு பிரக்ஞை வந்துவிட்டது.


அவன் செய்தது முரட்டு வேலை என்ற என் விமர்சனத்துக்கு பதில் சொல்லவோ ஏதோ நினைத்தவனாக என்னைப் பார்த்த சாமுண்டி, "இது மூச்சு! உள் மூச்சு, அதுக்கும் உள்மூச்சு! உனக்குப் புரியாதுடா அய்யா அப்பா"! என்றான்.

"என்னமோ படித்துத் தொலைத்துவிட்டுப் பண்ணிப் பார்த்திருக்கிறாய்!" என்று கத்தினேன்.

"ஒரு பீடி இருந்தாக் குடு!" என்றான். தேவலை.

நன்றி - நூலகத்திட்டம்





ஏறத்தாழ முப்பத்தைந்து வருடங்களாக தமிழின் நவீன எழுத்துத்துறையில் தீவிரமும், ஆழமும் குன்றாமல் எழுதி வந்தவர் பிரேமிள்.

கவிதை, சிறுகதை, இலக்கிய விமர்சனம் என அனைத்துத் தளங்களிலும் அவர் தனது தடங்களை பதித்துச் சென்றிருக்கிறார்.

ஜுன் முதலாம் திகதி அவருடைய மூன்றாவது நினைவு தினம். அதனையொட்டி அவருடைய சிறுகதையொன்றை இங்கு தருகிறோம்.

நம்ப உலகத்தில்தான் இருக்கிறான் என்று பீடிக்கட்டை எடுத்துக் கொடுத்தபோது நான் ஏமாந்து விட்டேன் - பேச்சின் திசையை சாமுண்டி மாற்றிவிட்டான்.

0 0 0

ஏற்கெனவே ஒரு நைட்வாச்மேன் வேலைக்கு நம்பகமான ஆளைத்தேடி வந்தவர்களுடன் என்னைக் கூப்பிட்டு, மாற்றலாகிப் போய்விட்ட மெய்யனின் நண்பர்கள் சிலர் பேசினார்கள். வேலை மெட்ராஸில் சாமுண்டி மறுத்துவிட்டதால்தான் எனக்கு வேலை கிடைத்தது.

"ஜாதி என்ன?" என்ற பேச்சு வந்தபோது "உங்களுக்கு எது வேணும், ஜாதியா நம்பிக்கையா?" என்றார்கள் மெய்யனின் ஆட்கள். வந்தவர்களுக்கு இந்தப் பேச்சு பிடிக்கவில்லை என்பது, "டெம்பரரி வேலைதான்" என்ற அவர்களுடைய முன்பின் முரணான பேச்சில் தெரிந்தது. பஸ் மாறி ரயில் ஏறியபோது ஆறேழு வருஷத்துக்கு முன்னாடி குஜராத்தில் தீபாவளியிலோ திருநாளிலோ ஜாதிக்காரர்களின் முன்னால் சங்கீதமாக ஒரு ஹரிஜன் பாடிவிட்டான் என்று சேரி சேரியாகப் பூந்து அடித்து, எரித்து, விரட்டிய செய்தி சிலர் பேச்சில் அடிபட்டுக் கொண்டிருந்தது.

ஒரு கண்ணாடிக்காரர், "காந்தி பிறந்த மாநிலம் அது" என்றார். "அடுத்த ஜன்மம் இருப்பது உண்மை என்றால் தாம் ஒரு ஹரிஜனாக பிறக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாராம். அப்படிப் பிறந்திருக்கக் கூடிய காந்திக்கும் செமத்தியாகக் கொடுத்திருக்கிறான்கள்."

சக பயணிகளுக்கு இந்த டைப் பேச்சு பிடிக்கவில்லையோ புரியவில்லையோ ஏதோ. ரயில் கடகடப்புக்குள் ஒரு கமுக்கமான மௌனம். ஜன்னலருகே உட்கார்ந்திருந்த நான் அவரை "யார்ரா இவன்?" என்கிற மாதிரிப் பார்த்தேன். எதிர்ப் பலகையில் நடுவே உட்கார்ந்திருந்து என்னைத் தாண்டி ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்த அவரது கண்ணாடியில் வெளியே உதயமாகிவிட்ட பூரண நிலவின் வட்டம். விடமாட்டார் போலிருந்தது. "எல்லா விதமான புரட்சிகளும் இதே விதமாகத்தான் முடிகின்றன" என்றார் இலக்கண சுத்தமாய். "ஜே. கிருஷ்ணமூர்த்தி அடையாறில் தாம் நடக்கிற பாதையில் ஏதும் குப்பை கிடந்தால் அதை சிரத்தையோடு எடுத்து குப்பைத் தொட்டியில் போடுவார். நான் பார்த்திருக்கிறேன். அவரை ஒரு உலக ரட்சகராகக் கண்டுபிடித்த மாய்மாலக் கதைகளை விடாமல் பயாகிராபி எழுதுகிற எவரும் அவர் இப்படி கடைசிவரை தமது பாதையில் கிடந்த குப்பையை தாமே எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டதை பதிவு செய்யவில்லை. பாத்ரூம் கிளீனர் வருவதற்கு முன்பு, தாமே அதைக் கிளீன் பண்ணிவிட்டு, கிளீனர் வந்ததும் அவரை வியக்கவைக்கும் விஷமத்தை அவர் செய்வது பற்றி தேசிகாச்சார் என்ற யோகாசன டீச்சர் எழுதியதை பலரும் படிக்கட்டும் என்று ஜெராக்ஸ் பண்ணி கிருஷ்ணமூர்த்தி லைப்ரரியில் போட்டேன். அங்கே பொறுப்புள்ள ஒருவர் 'திஸ் இஸ் இன் பேட் டேஸ்ட்' என்று அதை அகற்றி விட்டார். தம்முடைய அசுத்தத்தை அகற்ற இன்னொருவன் வேண்டுமென்று அதற்காக ஒரு சமூகக் கட்டுமானத்தையே உருவாக்கி வைத்துக்கொள்வது எப்பேர்பட்ட 'குட் டேஸ்ட்' என்றவர் கண்ணாடியைத் தூக்கி நிலவை நிலவுதானா என்று செக் பண்ணுகிற மாதிரிப் பார்த்துவிட்டு, தொடர்ந்தார், "இப்பவும் சிட்டிகளில் பாதாளச் சாக்கடைக்குள் மனிதனை இறக்கித்தான் அடைப்பைக் குத்திவிடுகிறான்கள். இதற்கெல்லாம் மேல்நாடுகளில் மெஷின் உண்டு. ஆர்யபட்டா செயற்கைக் கோளை மேலே விடுகிறவன் ஹரிஜனப்பட்டா சாக்கடை மெஷினை ஏன் கீழே விடமாட்டேங்கிறான்?"

'சரியான சாமுண்டி' என்று அவருக்கு மானசீகமாய் சாமுண்டிக்குத் தரும் செல்லக் கிள்ளு ஒன்றைமட்டும் அன்று தந்தாலும், இன்று அவர் சொன்னது மீண்டும் அதே தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது.

0 0 0

சொன்னபடி வேலை தற்காலிகம் தான். ஆனால், வேறு தொடர்புகள், இரண்டு மாற்றங்கள், பிறகு மெய்யனின் பால்ய கால நண்பர் பாலசுந்தரம் சந்திப்பு. கோடவுனில் எனக்கு ஃபுல் யூனிபாரத்துடன் செக்யூரிட்டி வேலை. கடிதங்களுக்கு லேசில் பதில் எழுதாத சாமுண்டி சென்னைக்கு வந்து ஏதோ கட்சித் தொண்டு செய்யப்போவதாக எழுதியிருந்தான். ஆனால், ஆளைக் காணோம். அப்போது ஒரு நாள் பாலசுந்தரம் "அம்பேத்கார் நினைவு நாள் கூட்டத்துக்கு வர்றயா?" என்றார். நாம்பளாச்சு, வேலையாச்சு, கூலியைப் பிரிச்சு ஊருக்கு கொஞ்சம் மணியார்டர் பண்ணிட்டு சிட்டியிலே ஜாதிக்காரிகளை பஸ்ஸிலே இடிக்கிறது போதாதோன்னு எரிச்சலோட நினைச்சாலும் "சரி"ன்னேன்.

ஊர்வலமா அந்தச் சிலையிலேருந்து இந்தத் திடலுக்குப் போறதெல்லாம் வேண்டாம், எங்கே கூட்டம், தெரிஞ்சுக்கலாம் என்று கேட்டால் "இதுவேறே, தனிக்கூட்டம். அண்ணா நகர் டவர் வடக்குல ஒரு மீன் தண்ணியை கக்கிக்கிட்டிருக்கும். அங்கின ஒரு ஆள் வந்து 'வாற நியூஸ் எல்லாம் பொய்'ம்பான். 'நான் சொல்றது மெய்'யினு நீ சொல்லணும். அவன் கூட்டத்துக்கு இட்டாந்திடுவான்" என்றார் பாலசுந்தரம்.

இந்த நாடகம் தினுசாகத் தோன்றினாலும் பொய், மெய்யில் பொய் சொல்லா மெய்யினைக் கண்டு கொண்டேன். "ஆருக்கும் சொல்லக் கூடாது" என்றார், பாலசுந்தரம் முடிவாக, "கரக்ட் டைம் பார்த்து வா. வாட்சை செட் பண்ணிக்க".

நான் "புரட்சி வருதா ஸார்?" என்று கேட்கவில்லை. ஏனென்றால் மெய்யன் சின்னப்பசங்களாக நாங்கள் இருக்கும்போதே அரிஜனக் குழந்தைகளை அப்பப்போ ஆருக்கும் தெரியாமல் சேர்த்து விபரம் கேட்பார், புரட்சி பற்றி புரிந்து கொள்ளக் கூடியவர்களை தனியாக்கி ஞாபகம் வைத்துக் கொள்வார். நாங்கள் வாலிபமான பிறகு மெய்யன் தலைமையில் கூட்டம் கூடிய விபரத்தை சாமுண்டி சொல்லி இருக்கிறான். கூட்டத்தில் வேறு இடங்களின், தேசங்களின் புரட்சிமுறை, ஆயுதமுறை, அரசியல்முறை நம்பி இறங்கலாமா என்பது எல்லாம் பேசப்பட்டது. "சூடு இல்லை" என்பதுதான் இதைப் பற்றிய சாமுண்டியின் தீர்ப்பு. இருந்தும் இப்போது நம்ப பாலசுந்தரம் சார் சொல்றாரே, போயப் பார்க்கலாம் என்று டவர் பஸ்டாப்பில் இறங்கி தெருவை கடக்குமுன் வாட்சைப் பார்த்தால் இருபது நிமிஷத்துக்கு மேல் இன்னும் நேரம் இருந்தது.

பஸ் ஸ்டாண்டிலிருந்து சற்றே தள்ளி நடந்து போய் அங்கிருந்து 'பங்க்' கடையில் ஒரு பாக்கெட் சார்மினார் வாங்கி ஒன்றை உருவி பற்றவைத்துக்கொண்டேன். அது மாலை நோக்கி சரிந்து கொண்டிருந்த 'பீக் அவர்'. ஒரே திசையில், நான் நின்ற பக்கத்துத் தெருவில் இரும்பு நெரிசலாக கார், பஸ், ஸ்கூட்டர் ஓட்டம். அதன் கரடுமுரடான சப்தத்தில் சிந்திப்பது கூட மனசுக்கு கேக்காது. போதாததுக்கு பஸ்ஸிலிருந்து இறங்குவதும் போவதும் வருவதுமாக உயர் மட்டத்துக்கு உபரிமட்டமான ஆபீஸ் மண்டல எறும்பு மனிதர்கள். கொஞ்ச நேரம் நின்று அந்த முகங்களில் குடிகொண்டிருந்த ஏகோபித்த மந்தைத் தனத்தைப் பார்த்தால் "புரட்சி வந்த பிறகும் இது இதுவாகத்தானே இருக்கப் போகுது?" என்று எந்த சேகுவேராவுக்கும் நாடி விழுந்துவிடும்.

சிகரட்டை ஊதிக் கொண்டிருந்தபோது, சற்று தள்ளி என் பக்கம் இருந்த பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிற்கு பதிலாக ஒரு கறுப்பு அம்பாஸிடர் வந்து லகுபதனக் காகமாக நின்றது. பின் ஸீட்டிலிருந்து ஜோல்னாப் பையுடன் ஒருத்தி இறங்கினாள். சிம்பிள் சுடிதாரை மீறியே அவளது கட்டுடலின் வளைவுகள் தெரிந்தன. குறிப்பாகப் பார்க்க எதுவும் இல்லாத இடத்தில் இப்படி ஒரு சில வளைவுகள். காரிலேயே போய் வருகிறவள் அல்ல என்பது அசமந்தமாக அவள் காரிலிருந்து இறங்கிய தோரணையிலேயே தெரிந்தது. காரின் பின் சீட் கதவு, உடனே மூடவில்லை. உள்ளே இருந்து ஏர்கண்டிஷனில் வெளிறிய ஒரு ஆண் கை வெளியே வந்தது. அதில் பிளாஸ்டிக் பேப்பரூடே தெரிந்தது மார்பளவு வரக்கூடிய ஒரு ரோஜா மாலை. நான் உடனே முகத்தைத் திருப்பி இருக்க வேண்டியவன் அந்த நங்கை நல்லாள் அந்த மாலையைப் பார்த்த முகபாவத்தில் உள்ளூரத் துணுக்குற்றேன். அந்த முகபாவத்தை நான் கவனித்திராவிட்டால் இந்தப் பதிவு எழுதப்பட்டிருக்காது.

சேரிக்கு அருகே புதர்க்காட்டுக்குள் நானும் என் சின்னத் தங்கையும் சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த போது ஒரு குட்டி நாகம், இத்துணூண்டு படத்தைத் தூக்கியபடி ஒரு புதரிலிருந்து இன்னொன்றுக்கு ஓடியது. அதைத் தங்கை பார்த்ததைத்தான் நான் பாம்புக் குட்டியைப் பார்க்கும் முன் பார்த்தேன். ஆடாமல் அசையாமல் நின்றிருந்த அவளது பாப்பா முகத்தில் பீதியும் அருவருப்பும் ஒன்றாகப் பின்னி ஒரு வக்ரமான திடீர் முதிர்ச்சியை ஏற்றியிருந்தன. மறுகணம் திரும்பி, பாம்பைப் பார்த்ததும் "பாம்புடீ" என்று அவளை இழுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டேன்.

அன்று என் குட்டித் தங்கை பாம்பைப் பார்த்தபோது அவளது முகம், இந்த ரோஜா மாலையை இந்த நங்கை நல்லாள் பார்த்தபோது இவள் முகம், இரண்டும் இடம், காலம்மாறி, நான் இவள் கையைப் பிடித்தபோது "பாம்புடீ" என்று இழுத்துக் கொண்டு ஓடத் தோன்றியது. அதற்குள், மாலை அடங்கிய பிளாஸ்டிக் கவரை இவள் தனது ஜோல்னாப் பைக்குள் வைத்துவிட்டு காருக்கு டாட்டா காட்டினாள். மறுவினாடி அவளையும், என்னையும் ஒரு கொத்து ஆபீஸ்காரிகள் மறைத்தார்கள். பிறகு அவள் அவர்களை முந்தி தெருவைக் கடந்து கொண்டிருப்பது தெரிந்தது. நானும் தெருவைக் கடந்தேன். நான் டவருக்குப் போக வேண்டிய அய்யன் கோயில் பாதையும் அவள் போன பாதையும் ஒன்று. டவர் இருந்த பார்க்கின் மெயின் கேட் அருகே ஒரு வேன் அருகில் வந்ததும், அருகே நின்றுக் கொண்டிருந்தவன் வேன் முன் கதவைத் திறந்தான். அவள் டிரைவர் ஸீட் அருகே உட்கார்வதைக் கவனித்தபடி தாண்டிப் போய் பார்க்கிற்குள் நுழைந்தேன். புதர்க்காட்டுக் குட்டிப்பாம்பு நிகழ்ச்சியின் மனப்பிரதிமையை என் இப்போதைய அர்த்தமற்ற டென்ஷனுக்காக சபித்தபடி டவரின் வடக்குப் பக்கம் எது என்று நிதானிக்க நான் நிற்கவும், "அய்யப்பா, நீ ஒரு பொய்யப்பா!" என்றபடி கைகளை சிலுவையாக விரித்தான் எதிரே வந்த சாமுண்டி.

பான்ட் ஷர்ட்டில் ஆள் அடையாளமே தெரியவில்லை. "வா மற்றவர்கள் எல்லாம் வந்தாச்சு. இந்த 'பாஸ் வேர்ட்' பாச்சா பூச்சா எல்லாம் உனக்கா மட்டும் தான். அப்படியும் நீ லேட். எபவ் டர்ன்டா! அங்கே எங்கே போறே?" என்று வந்த வழியில் என்னைத் திருப்பினான். நாங்கள் வெளியே வந்து திரும்பி நடந்தது வேனை நோக்கியா? நான் நின்றேன்.

"என்னது?" என்றான். சாமுண்டி நான் முகத்தில் கேள்வியுடன் வேனைச் சுட்டிக் காட்டினேன். அவன் புன்னகையில் பதில் தந்தான். "ஆரு பொண்ணு?" என்றேன். வெறும் புன்னகை விசாலித்துப் பரந்தது. அநாவசியமான கிசுகிசு குரலில்? ஊரிலேருந்து லவ் பண்ணி வெரட்டிக்கிட்டு வந்திருக்கேன். அரிசனப் பொண்ணுனாலும் நம்பசாதி அரிசனத்தி இல்லை. ஆனாலும் எங்க மேரேஜ் நடக்கும் பொய் சொல்லா மெய்யனின் மாணவப் பெண்மணிகளுக்குள் தலையாய புரட்சித் திலகம். நைல் தவழும் எகிப்து, பாபிலோன், சிந்துவெளி, அப்படியே குமரிவரை வடிவமான தாய்க் கண்டம் அவள்."சூழ்ந்து கோஷிக்கும் சமுத்ரம் நான். பொண்ணை எங்கே பார்த்தே" என்றான். நான் இந்த டெலிவரிக்கு அதிக கவனிப்புத் தராமல், வேனின் முதுகுப் பக்கத்தைக் கவனித்தேன். "அவள் பெயரே தாயம்மாள் தாண்டா!" என்று முடித்தான் சாமுண்டி.

"ரோஜா மாலை?" என்றேன்.

"அம்பேத்கார் படத்துக்கு அவ போட்டுட்டு வீட்டுக்குக் கொண்டுபோய் பூட்டி வைக்கணும்னாளே அதுவா இருக்கும். ஏன் கேக்றே?" அவனது குரலில் ஒரு ஸ்வரவேறுபாடு. என் முகபாவத்தைக் கவனித்துவிட்டான். நான் வேனை பார்த்தபடி, "திரும்ப வீட்டுக்குக் கொண்டு போறமாலையா? அவ கூட அம்பாஸிட்டர் காரில் வந்த ரோஜா மாலையாச்சே. பாங்கிப் பெட்டகத்லேன்னா வச்சுப் பூட்டணும்!" என்றேன்.

0 0 0

"டாக்டர் சாமுண்டி இப்போ அமெரிக்காவில் பெரிய கான்ஸ்டியூஷனல் லாயர். சர்வதேசிய தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையில் அவர் பேசியதை நேற்று அவர் எனக்கு அனுப்பியிருக்கிறார்" என்றார் கிளினிக் கட்டிலில் சார்த்தி உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்த மெய்யன். முன்பு வெறுமனே கிணற்றில் தூர் எடுத்துக் கொண்டிருந்த சாமுண்டி இப்போது சென்னை மாநகர் சாக்கடைகளின் மலமூத்திர பாதாளக் குழாய்களுக்குள் ஏற்படும் அடைப்புக்களை மூச்செடுத்து உள்ளோடிக் குத்திவிடும் அடியோ அடிமட்டத் தோட்டி என்பதை அறியவே முடியாத மனோஸ்தம்பிதத்துடன்.

ரோஜா மாலையை சாமுண்டி தாயம்மாளிடம் இருந்து பிடுங்கி ஒரே வீச்சில் மலர்களை உருவியபோது வெளிப்பட்ட கருவி என் வசம்தான் இப்போதும் இருக்கிறது. அதிநவீன முறையில் இரண்டு மணிக்கும் மேற்பட்ட பேச்சை, ஒரு கிசுகிசுவைக்கூட, சுமார் இருபது அடி குறுக்களவு உள்ள வட்டத்துக்குள் கேட்டு அது பதிவு செய்யக்கூடியது. மாலை பிடுங்கப்பட்டதுமே தாயம்மாள் சரேலென்று வேனிலிருந்து குதித்து விடுவிடுவென்று மெயின் தெருவை நோக்கி நடந்து போய்விட்டாள். அவளை நோக்கி சாமுண்டியின் கை நீண்டு ஏதோ ஒரு கணத்தைப் பற்றி இழுத்து நிறுத்தி அதற்கு முன்னும் பின்னும் கால ஓட்டம் ஏதுமற்று அதை மட்டும் ஸ்தம்பிக்கச் செய்ய முயன்று வெறுமையைப் பிடித்த வியர்த்தத்தோடு தளர்ந்தது.

வேனில் மீந்திருந்தவர்களுடன் ஏறி மெய்யன் எங்களுக்காகக் காத்திருந்த ஒரு கட்டிடத்துக்குப் போய் அவரிடம் விஷயத்தைச் சொன்னபோது அவர் முகம் இரும்பாக மாறி சாமுண்டி தாயம்மாளைப் பற்றி நிறுத்த முயன்ற முஷ்டியாக இறுகி உடனே சிரித்தது. அந்தச் சிரிப்பு மட்டும் இன்னும் மாறவில்லை. அவரைப் பொறுத்தவரை காலம் ஏதோ ஒரு கணத்தில் ஸ்தம்பித்து விட்டது.

இரண்டொரு வாரத்திலேயே சாமுண்டி எங்கள் சுக்குணியப்பன் கோடவுனுக்கு போன் பண்ணி, ஒரு குறிப்பிட்ட பிள்ளையார் கோவிலுக்கு வரச் சொன்னான். "கோவிலுக்கா" என்றேன். தனக்கு கல்யாணம் என்றான். "தாயம்மாவோடு" என்று அவன் சேர்த்துக் கொண்டபோது எனக்கு மனம் குமட்டியது.

"என்னடா சொல்றே?" என்றேன். "ஹலோ?'

"சாமுண்டியோடு சேர்ந்து புரட்சி வகுப்புக்கு மெய்யனால் தயாரிக்கப்பட்ட அரிஜனப் பசங்களுள் இருவர் இப்போது ரிமாண்ட் ஜெயிலில். கற்ற வித்தையை பிக்பாக்கெட்டுக் கைவரிசையாக மாற்றி இருக்கிறான்கள்" என்றது சாமுண்டியின் குரல், இலக்கணம் பிசகாமல். "தாயம்மாளை உளவுக்கு உபயோகித்தவரே என்னை அழைத்துச் சென்று காட்டினார். பசங்கள் தாயம்மாள் விலாசத்தை போலீசுக்கு கொடுத்து அது அவர் விலாசமும் ஆகி இருக்கடா... அவர் கையில் நான் தாயம்மாளுக்கு எழுதிய கடிதங்கள் இருக்குடா பாவி! கட்டிக்கிறியா கம்பி எண்ணறயாங்கறாண்டா! அந்த வேளைப் பார்த்து இந்தப் பிள்ளையார் கோவில் ஏரியா டூட்டி எனக்கு, அன்னிக்கு மாதிரி லேட் பண்ணாமல் கண்டிஷனா டயத்துக்கு வாடாய்யா அப்பா!"

அதென்ன பிள்ளையார் கோயில் டூட்டி என்று நான் அறியுமுன்னால் போனை வைத்து விட்டான். அவன் குறிப்பிட்ட கோவிலுக்குப் போனபோது மைலாப்பூரின் வடகிழக்குச் சந்து பொந்துகளுக்குள் இருந்த அந்த ஏரியா நாறிக்கொண்டிருந்தது. பாதாளச் சாக்கடை அடைசல்! தெருவில் அதன் கங்கா பிரவாஹம். பரிகார வேலை நடந்து கொண்டிருந்தது. ஏற்கெனவே நான் பார்த்த லகுபதனக் காகமாக வந்து நின்று காருக்குள்ளிலிருந்து புதுப்புடவைக் கட்டுடன் தாயம்மாளும் கூடவே ஏர்கண்டிஷனில் வெளுத்த அந்தக் கையோடு ஒரு மாஜிக் கம்யூனிஸ எழுத்தாளரும் இறங்கினார்கள். "இவர் பெயர் தெரியாதவர்களுக்கு தமிழ் நவீன இலக்கியப் பரிச்சயமே இல்லை என்றுதான் அர்த்தம். நாகபாலு என்பார்கள். ஏம்ப்பா அய்யப்பா படிச்சிருக்கேல்ல, 'பல பல்டிகள்'ங்கற நாவல்...?" என்று எனக்கும் இதர நண்பர்களுக்கும் அறிமுக லெக்சர் அடித்துக் கொண்டிருந்தார் பாலசுந்தரம். என் கண்கள் தாய்ம்மாளின் வயிறு எவ்வளவு உப்பியிருக்கிறது, ஏன் இந்தக் கெடிபிடிக் கல்யாணம் என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தது.

கோவில் பக்கமாக இருந்து "எங்கே மாப்பிள்ளை?" என்றது ஒரு ஐயர்க்குரல். "இந்த நேரம் பார்த்து அதுவும் இந்த எடத்துல சாக்கடை அடைப்பா?" என்று நாகபாலு அடித்தொண்டை என்று தாம் நம்பிக் கொண்டிருந்த வாயால் ஊரறிய முணுமுணுத்தார்.

திடீரென்று சாமுண்டியின் "ஏரியா டூட்டி" எனக்குப் புரிந்தது. அதே கணம், வேலை நடந்து கொண்டிருந்த ஒரு கண்வாயிலிருந்து உடலெங்கும் மலம் வழிய குபுக் என் எழுந்து ஒரே எவ்வில் வெளியே வந்தான் சாமுண்டி. "எங்கே தாலி?" என்று அவன் கேட்டபோது தான் அவனை மற்றவர்கள் அடையாளம் கண்டார்கள். கல்யாணப் பார்ட்டி அலறிச் சிதறி ஓடிப்போன இடம் இன்றுவரை தெரியவில்லை.

சாக்கடையின் கங்கா பிரவாஹம் கண்வாயை நோக்கித் திரும்பி வற்றிக் கொண்டிருந்தது. அன்று நான் பார்த்த அதே கோவணக் கோலம்தான் இன்றும் சாமுண்டிக்கு!

0 0 0

"மிஸஸ் தாயம்மா சாமுண்டி எழுதிய அன்டச்சபிளிட்டி அண்ட் தி சோஷியல் ஸ்டேட்டஸ் ஆஃப் இன்டியன் விமன் இன் ஜெனரல்" என்ற புக் படிச்சிருக்கயா? எங்கே ஒரு ஜனத்தொகை தீண்டப்படாததாகிறதோ, அதை அப்படி ஆக்கும் சமூகம் தனக்குள்ளேயே புதுப்புதுவித தீண்டாமைகளையும் உருவாக்கும். இன் ஈகுவாலிட்டி பிரீட்ஸ் ஃபார்தர் இன் ஈகுவாலிட்டி!" என்றார் மெய்யன் என்னைப் பார்த்து விரலை ஆட்டிச் சிரித்தபடி.

தாயம்மாள் அட்ரஸ் தெரியாத விதத்தில் தலைமறைவாகி விட்டாள் என்ற விபரத்தைச் சொல்லியும் கூட கிரகிக்க முடியாதவராக!

நான் என் குரல்வளைக்குள் ஏதோ ஒன்று கரடுமுரடாகத் திரள்வதை உணர்ந்து ரூமுக்கு வெளியே கிளினிக்கின் மூன்றாவது மாடி வராந்தாவுக்கு வந்தேன். தூரத்தே கட்டிடங்களை மீறி நின்றது ஒரு புராதன மிருகத்தின் முதுகெலும்பு போன்ற டவர். குரலுக்குள் திரண்டது, அழுகையாக அன்றி ஒரு உறுமலாக ஓங்கரித்து வெளியுலகின் மீது பாய்ந்தது.

0 0 0

"பட்டன் ஒன்றுக்குரிய துளை கீழே துளை ஒன்றுக்குரிய பட்டன் மேலே" என்றான் சாமுண்டி, இரண்டு கைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக்கி டெலஸ்கோப்பாகப் பிடித்து என் டியூனிக்கை மேலும் கீழும் பார்த்தபடி.

நான் ஒரு அசட்டுப் புன்னகையுடன் பட்டன்களைக் கழற்றத் தொடங்கினேன், மீண்டும் சரியாக மாட்டுவதற்காக.

நன்றி - நூலகத்திட்டம்



# அகிலன் கவிதைகள் : ஓர் அறிமுகம்

வெங்கட் சாமிநாதன்

ஈழத் தமிழ் எழுத்துக்களைப் படிக்கும் நம்மில் எத்தனை பேர் அவை எந்நிலையில் எழுதப்பட்டன, எத்தகைய வாழ்க்கை அனுபவங்களால் சிறைப்பட்டவை அவை என்பதை நினைத்துப் பார்க்கிறோம்? 15-16 வருடங்களாகி விட்டன. தாம் இழந்த உரிமைகளை திரும்பப்பெற எழுந்த போராட்டம் போர்க்குணம் பெற்று உச்சநிலை அடைந்து தொடர்கிறது. ஒரு பெரும்பான்மை சமூகம் ஒரு சிறுபான்மை தன் தயவிலேயும், தான் தயை காட்டி இடும் பிச்சையிலும் தான் வாழ்கிறதென்ற இறுமாப்பில் அதை எவ்வளவு கொடுமைப்படுத்த முடியுமோ அதன் சாத்திய எல்லைகளை தொடர்ந்து விஸ்தரித்துக் கொண்டே போவதில் வெற்றிப்புன்னகை பூத்து இறுமாந்துக் கிடக்கிறது. அப்புன்னகையின் கொடூரம்! பெரும்பான்மையின் மிருகத்தனம்! ஈழத்தில் என்று இல்லை. எங்குமே எக்காலத்திலும்!

குண்டுகள் என்றும் சரமாரியாக வீடுகளை சிதைத்து மக்களை மாய்த்து உயிர் மிஞ்சியவர்களை அங்கவீனர்களாக்கிவரும் நித்திய நிகழ்வே அன்றாட வாழ்க்கையாகி, அந்நிகழ்வுகளின் நிரந்தரத்தில், தீப்பெட்டியின் ஒவ்வொரு குச்சியையும் அரிய பொருளாகப் பாதுகாக்கும், ஒரு தீக்குச்சியின் தேவைக்காக வீடுவீடாக அலையும் அன்றாட வாழ்வின் கொடுமையில், என்ன படிப்பும் என்ன எழுத்தும் சாத்தியம்?

Will there be singing and dancing in times of war?

போர்க்காலங்களில் ஆட்டமும், பாட்டும் இருக்குமா என்ன என்று பெர்ட்டோல்ட் ப்ரெக்டிடம் கேட்டபோது அவர் சொன்னாராம்

'Yes. there will be singing and dancing about war.

ஆம், இருக்கும் ஆட்டமும் பாட்டும் போரைப்பற்றியதாக இருக்கும். சில மொழி பெயர்ப்புகளில் போர்க்காலம் என்பது இருண்ட காலம் என்று (in dark times) இருக்கும். இருண்ட காலம் என்பதே சரியான மொழிபெயர்ப்பு என்று தோன்றுகிறது.

இதன் உண்மையை, இந்த உண்மையின் கசப்பையும், கொடூரத்தையும் 1983லிருந்து (இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டம். சரித்திரத் திருப்பம்) ஈழம் தரும், ஈழத் தமிழர் எங்கிருந்தாலும் தரும் எழுத்துக்களைப் பார்த்த பின் தான் உணரமுடிகிறது. அதுமட்டுமல்ல, ஈழத் தமிழர் அகதிகளாகக் குடியேறிய இடங்களிலும், நிச்சயமற்ற, அவமானம் நிறைந்த வாழ்க்கை நிலையிலும், வேலைக்கும் சோற்றுக்கும் அலைந்து திரியும் நிலையிலும் எழுத்தை, படிப்பை அவர்கள் கைவிடவில்லை. அவற்றில் தாம் விட்டு வந்த ஈழத்தின் சோகமும், புலம்பெயர்ந்த இடத்தின் வாழ்க்கைப் போராட்ட அவதிகளும், புலம் பெயர்ந்தோர் எழுத்துக்களில் நாம் காணும் அனுபவங்கள்.

இதெல்லாம் சரி. ஆனால், இங்கு கவிதைகள் பற்றிப் பேசும் சந்தர்ப்பத்தில் ஈழத் தமிழ்க் கவிதைகளில் பெரும்பாலானவை முதலில் அவை கவிதைகள் தாமா என்பதே விவாதத்திற்குரிய பொருளாகின்றது.

தமிழ் நாட்டில் எழுதப்படுபவை என்ன வாழ்ந்தது என்று திரும்பக் கேள்வி எழுப்பப்படலாம். அவர்கள் சுக வாசிகள், சுகவாசிகள். கவிஞர் என்னும் பீடத்தில் அமர அப்பகட்டிற்காக ஏதோ எழுதும் போது உயிர்த்துடிப்பற்ற வார்த்தைகளை யோசித்து யோசித்து தயாரித்த உவமைகளை, எங்கிருந்தோ இழுத்து வந்த படிமங்களை, பகட்டான சொற் கூட்டங்களை குவிப்பதில் வியக்க ஏதும் இல்லை.

இரண்டு தலைமுறைக் காலம் ஆயிற்று. 'தமிழ், 'தமிழ்' என்ற கோஷமும், பிரச்சாரமும் வெறி என்று சொல்லத்தகும் செயற்பாடுகளும் தொடர்ந்து வந்த போதிலும் தமிழ் படிக்கத் தெரியாத தமிழ்க்குழந்தைகள் சமூகம் ஒன்று பெரும் தொகையில் உருவாகி வருகிறது தமிழ் நாட்டில். சுகவாழ்க்கை, உயிர்த்துடிப்பில் அனுபவ உண்மையில் பிறக்காத சித்தாந்தங்கள், கோஷங்களாகி இப்படித்தான் காற்றோடு போகும்.

ஆனால், ஈழத்தில் அவதிப்படுவோரும் சரி, புலம்பெயர்ந்து வாழ்வோரும் சரி, அவர்கள் வாழ்க்கை [illegible] நீண்ட காலமாக கடும் சோதனைகளுக்கும், துயருக்கும், உயிர் இழப்புகளுக்கும் இரையான வாழ்க்கை என்று நினைத்துப்பார்க்கும்போது, இந்த அனுபவங்கள் உண்மையென முகத்தில் அறையும்போது, நீண்ட நீண்ட வாக்கியங்கள் எவ்வித உயிர்த்துடிப்பும் அற்று அதைப்புத் தராது. மனச்சலனம் தராது. எவ்வளவு யாந்திரீகத்தனமாக எழுதப்படுகின்றன என்று பார்க்க வியப்பாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

ஒரு ஹாஸ்டலில் இன்ஜக்ஸன் ஸிரிஞ்சுகளை தள்ளுவண்டியில் எடுத்துக் செல்லும் காட்சியை, 'தட்டில் நிறைய வெண்டைக்காய்கள் நிரப்பினாற் போல ஊசித்தட்டை ஹாஸ்பிடல் ஆயா வைத்துச் செல்கையில்' என்று மிகப்புகழ்வாய்ந்த தமிழ் நாட்டுக் கவிஞர் எழுதுகிறார். இன்ஜெக்ஸன் ஸிரிஞ்சுகள் வெண்டைக்காயாகத் தோற்றம் அளித்த காரணம் என்ன, மனநிலை என்ன, சூழல் என்ன என்பது தெரியவில்லை. ஏதோ உவமை புகுத்த வேண்டும் அதுதான் கவிஞருக்கும் அழகு. அது தான் இதை கவிதையாக்கும் என்ற நினைப்பு. இதில் அனுபவ உண்மை எதுவும் இல்லை. இது சுகவாசத்தின் பிறப்பு. ஆனால், யாழ்ப்பாண அனுபவங்களை நேரடியாகத் தானே அனுபவித்த அக்காயங்களைச் சுமந்து நிற்கும் ஒருவர்.

'ஒளிக்குருதி வீச்சோடு
எழுகின்ற சூரியனே பார்
இரத்தப் பிடிப்பின்றி சோகையுற்றோம்
உன் குருதியை எமக்குள் பாய்ச்சு

என்றும்,

துயர்க் கொடி,
உணர்வின் மென் தண்டாகிப்போனேன் நான்
நெகிழ்ந்து நெகிழ்ந்து
உருகும் வெண்பனியின் இதயம் படைத்தேனா!

இது நிச்சயம் அனுபவம் பெற்றுள்ள வெளியீடு அல்ல. கவிதை எழுத வேண்டும் என்று உட்கார்ந்து கவிதை என எதெல்லாம் தமிழ் மரபில் சொல்லப்பட்டிருக்கின்றதென்று யோசித்து தன் எழுத்துக்கும் கவிதை என்ற ஏற்பை பெற்றுத்தர வேண்டும் என்ற மரபு சார்ந்த யாந்திரீக செயல்பாடு தான் இவற்றைத் தந்துள்ளன.

ஈழக் கவிதைகள் எனக்குப் பார்க்கக் கிடைத்தவை, எழுதப்பட்டவையின் தொகையை வைத்துப் பார்த்தால் அதிகம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஈழத்துக் கவிதைகள் அனைத்தையும் படித்த விவர ஞானத்தோடு நான் எழுதுகிறேன் என்றும் சொல்லத் தயாரில்லை. ஆயினும், பார்க்கக் கிடைத்த கவிதைகளையும், அவற்றைப் பற்றிய எழும் அபிப்பிராயங்களையும் பார்த்தபிறகு, எல்லாமே படித்தறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று தான் தோன்றுகிறது. பாராட்டப்படுபவை பெரும்பாலும் உயிர்த்துடிப்பும் அனுபவ செறிவும் தாக்கமும் தராத- வெறும் வெற்று வரிகள், நீண்ட நீண்டவரிகள் என்பதும் அவற்றில் ஓர் இயக்கமோ, அதைப்போ இல்லாத வெற்று வார்த்தைச் சேர்க்கைகள் தாம் என்பதும் பொதுவாகக் காணும் குணங்கள் என்று சொல்வதில் அதிகம் தவறு இராது என்று நினைக்கிறேன்.

ஆனால், ஓர் உறுத்தல் மனத்தின் ஒரு மூலையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாராட்டுக்களின் பெருவாரிப் பெருக்கச் சூழலிலே. கவிதையானவை அமைதியாக எங்கோ ஒதுங்கி இருக்கக்கூடும் என்றும் மனம் சலனிக்கிறது. காரணம், சொல்கிறேன்.

மேற்சொன்ன மதிப்பீட்டிற்கும், மாறாக, நேர்மாறாக அகிலன் என்னும் ஒரு இளம் கவிஞரின் கவிதைகள் என்று டெல்லியில் ஓவியம் பயில வந்துள்ள சனாதனன் என்னும் ஈழத்து தமிழ் அன்பர் தன் ஒரு நோட்-புத்தகத்தில் தாம் விரும்பி பிரதியெடுத்து வந்துள்ள கவிதைகளைக் காண்பித்தார். இத்தோடு இன்னும் பல்வேறு கவிஞர்களின் அச்சான கவிதைத் தொகுப்புப் புத்தகங்களையும் காண்பித்தார். அவை எல்லாவற்றையும்விட, கையெழுத்துப்பிரதியாக நோட்புத்தகத்தில் குறித்து வைத்திருந்த அகிலன் கவிதைகள் ஒரு புதிய மாறான, இளம் கவிமனதை எனக்கு இனம் காட்டின. (ஒரு உண்மையான கவிமனதின் பெயர் "அகிலன்" என்று இருக்கும் ironyயை என்னவென்பது) பிரசுரத்தின் சாத்தியங்களை எதிர்நோக்காமலேயே நோட் புத்தகத்தில் அவ்வவ்போது எழுதிப் பதித்து வந்தவை அவை.

அகிலனது கவிதைகளில், அனுபவங்களின் கொடூரம் புதிய பாஷையை, புதிய சொல்முறையை, சிருஷ்டித்துள்ளதைக் காணலாம். பழகிய அனுபவங்கள் புதிய அர்த்தங்களைக் கொள்கின்றன. உதாரணத்திற்கு என சில!

ஓர் கரிய ஊளை எழுந்து
இரவென ஆயிற்று...
கரைக்கு வந்தோம்
அலை மட்டும் திரும்பிப் போயிற்று...
காலச் சிலந்தி தின்னக்
கிடந்ததொரு பூச்சி...
காற்றில் விட்டெறிந்த புன்னகை
கொடியில் கிடந்து உலர்கிறது...
கைவிடப்பட்ட பாடல்
சொற்களின் மூலத்துள் அமிழ்ந்திருப்பதை
நீ அறிவாயா!
பின்னரும் நான் வந்தேன்
நீ வந்திருக்கவில்லை
காத்திருந்தேன்...
அன்றைக்கு நீ வரவே இல்லை
.....
காலம் தாழ்த்தி
தெருவோரம் நாய் முகரக் கிடந்த
உன் மரணம் செவிப்பட்டது நண்பா....

இப்படி எத்தனையோ. தெருவோரம் நாய் முகரக்கிடந்த உன் மரணம் செவிப்படுதல் எத்தனை கடூரமான துயரத்தை எவ்வளவு உக்கிரமான சொற்களில் வெளிப்படுத்தி விடுகிறார்! அக வாழ்க்கையும் சரி, கவிதை எழுதுவோம் என்று சொற்களை நாடும் அனுபவவரட்சியும் இத்தகைய வெளிப்பாட்டை என்றும். தராது ஈழத்து அன்பர் ஓவியம் படிக்க வந்தவர், மூன்றாம் ஆண்டு இறுதியில் படிப்பை முடித்துச் செல்லும் ஆண்டு வரைந்த ஓவியங்கள் அனைத்தும் தலையற்ற உடல்கள், பிண்டங்கள், பிண்டங்கள், பிண்டங்கள். கருத்த பழுப்பும், சிகப்பு பழுப்பும் ஆன வண்ணங்கள். விளக்கு ஒன்று கைப்பிடித்து சாலையில், குடிசையில், உயிர் கொண்ட ஜீவன் எதுவுமற்ற வெட்ட வெளிகளில்...

இத்தகைய கவிமனது வெகு அரிதாகவே இன்றைய ஈழத்துக் கவிதைகளில் காணக் கிடைக்கிறது அல்லது ஒரு வேளை என் பார்வைக்குக் கிடைக்கவில்லையோ என்னவோ. கவிமனது இல்லையெனில், வாட்டி உருகும் அனுபவங்களும் கூட குருதிவெடித்துச் சிதறும் சித்திரவதைகளும் கூட, வெறும் பொய்ச் சிணுங்கல்களாகவே எழுத்தில் வடிந்து விடும். இது மிகப் பெரிய சோகம் பரிதாபம்.

ஒரு புகழ் பெற்ற கவிஞர் எழுதுகிறார்.

'நான் வாய்க்குள் போடும் சீனி மணல் கடற்கரை
அது
தென்றல் தனது கரங்களில் ரோஜாப்பூவை
ஒவ்வொரு மாலையிலும் இந்தக் கடற்கரையில்
வைத்துக் கொண்டே வருவோரை
தடவிக் கொடுத்து
இதயத்தின் கோளாறு திருத்தி
வழி அனுப்பி வைக்கும்
தொழில்நுட்ப மேதை.

இது ஒரு சோகம். பாவனையான, கவிஞர் பீடத்திற்கு மனுப்போடும் சோகம். இதுவும் ஈழத்துப் படைப்புத்தான். அதே சமயம்,

'பத்திரிகையைப் புரட்டுவாய்
கர்ப்பக்குழிக்குள்
குழந்தைகள் தகனிக்கப்பட்ட சேதி
அச்சுக்குமைவுகள் தலை நீட்டிக் கிடக்கும்'

இது இன்றைய கலிங்கத்துப்பரணி அல்ல ஈழத்துப் பரணி.

பாரி மகளிர் பாடிய பாடல் ஒன்று ஞாபகத்தில் இருக்கிறதா?

"அன்றைத்திங்கள் வெண்ணிலவில்...." சமீபத்தில் இளம் வயதில் மரித்த/ கொலையுண்ட சிவரமணியின் கவிதை இதை எதிரொலிக்கிறது.

அன்றைய பொழுதும்
இன்றைய பொழுதும்
ஒரே சூரியன்
ஒரே சந்திரன் - ஆனால்
அன்றோ ஒரு உறக்கம்
நிகழ்வுகள் புரியாத
நிம்மதிப் பெருமூச்சு.. இன்றோ
உறக்கங்கள் தோல்வி கண்ட
விழிப்பின் பரிதவிப்பு....

ஈழத்தில் அறியப்படாத பெயர் 'அகிலன்' என்று சொல்ல வேண்டும். அறியப்பட வேண்டும் என்ற கனவுகள் ஆசைகள் அவரிடம் இல்லை என்பது இது வரை அவரைப்பற்றி அறிந்தவரை தெரிகிறது. பிரசுரமாகும்போது பிரசுரமாகட்டும். யாரையும் தேடிப்போவதில்லை. அதற்காக இல்லை இவற்றை எழுதியது. டயானா விபத்தில் மரித்த செய்தி கேட்ட துயரம் கொண்ட முகங்கள் காமிராவுக்காக அல்லவே. இயல்பானது, தன்னிச்சையில் தானறியாது நிகழ்வது. அனுபவங்களிலிருந்து தன்னிச்சையாக பதிவு பெறுவது கவிதை. அகிலனது பதிவுகள் கவிதைகளாகியுள்ளன.

---

*அகிலனின் சில கவிதைகள்*

## 1. பதுங்கு குழி நாட்கள் -1

காலமற்று
இருள் பரந்து உறைந்து
பீதி நிறைந்த கண்களும், செபிக்கும் வாய்களும்
அந்தரத்தில் தொங்கப்
போர்!
குண்டெறி விமானம்
ஓய்ந்த துளிப்பொழுது
வெளிப் போந்த திண்மம் - மீள
குழிக்குள் பதுங்கிக் கூறு சேதியில்
கைகளில் உயிர்
இன்னும் நடுங்குண்டு போகும்
'கோ' என்ற முலையுடைய திண்மத்தின் அலறலில்
திடுக்கிட்டுத் திரும்பவும்
யோனிவாய் பிளவுண்டு, குருதி சீற
இன்னொரு சிறு திண்மம்.

## 2. பதுங்கு குழி நாட்கள் -2

வேர் முடிச்சுக்களிலிருந்தும்
பாறைப்படிவுகளின் கீழிருந்தும்
தலையின்றி மீண்டன அவைகள்
வெட்டை வெளிகளில்
மண்டியிட்டன
கண்ணெட்டாத் தொலைவுகளுக்கு
ஓடியும் தொலைந்தன
அங்கங்கள் சிதற
மரித்தும் ஆயின....
மீண்டும் நிலத்தினடி புகுந்து
அமைதி நாளுக்காய் துதித்தும் இருந்தன.
என் கடவுளே
சிதறிப்போயிற்று கடிகாரம்
ஒளி சுருங்கிப் போகிறது கைவிளக்கு....

(பங்குனி - 1991)

## 3. பதுங்கு குழி நாட்கள் -3

பெரிய வெள்ளி
உன்னைச் சிலுவையிலறைந்த நாள்
அனற் காற்று
கடலுக்கும் தரைக்குமாய் வீசிக்கொண்டிருந்தது
ஒன்றோ இரண்டோ கடற்காக்கைகள்
நிர்மல வானிற் பறந்தன.
காற்று பனை மரங்களை உரசியவொலி
விபரிக்க முடியாத பீதியைக் கிளப்பிற்று
அன்றைக்குத்தான் ஊரிற் கடைசி நாள்
கரைக்கு வந்தோம்,
அலை மட்டும் திரும்பப் போயிற்று
சூர்யன் கடலுள் வீழ்ந்த போது
மண்டியிட்டழுதோம்.
ஒரு கரிய ஊளை எழுந்து
இரவென ஆயிற்று.
தொலைவில்
மயான வெளியில் ஒற்றைப் பிணமென
எரிந்து கொண்டிருந்தது எங்களூர்.
பெரிய வெள்ளி
உன்னைச் சிலுவையில் அறைந்த நாள்.

(17.02.1991)

## 4. சிலுவை

இருளால் மூடுண்டது என் முகம்
வேண்டப்படாதது எனதாத்மா
நான் அதிகமாய் மிதிக்கும் உன் முன்றிலும்
சாளரத்தை மூடுகையில்
இரவுகளில் நித்திரையுமற்றுப் போகிறது
ஓயாது பெய்கிற மழையில்
என் துக்கமெனும் தீயோ மூண்டெரிகிறது
சொல்
ஊளையிடும் காற்று வெளியில்
நேசமான மெழுகுத்திரிச் சுடரை
எவ்விதம் காப்பாற்றுவேன்....!

(12.06.1991)

## 5. பதுங்கு குழி நாட்கள் - 4

குருதியோலம்
நிராசைகளின் வலையில் காலச்சிலந்தி தின்னக்
கிடந்ததொரு பூச்சி
சூர்யன் பகலின் ஒற்றன்
இதயத்தைப் பிடுங்கிய போது
குருவிச்செட்டைகளும், பூவின் மென் இதழ்களும்
வீழ்ந்தனவாம்.
பின்னர்
இதயத்தைக்கீறி உப்பிட்டு வைத்தார்கள்
குரலை உருவி
மரத்திலறைந்து விட்டார்கள்
விறகுக்காய்
எலும்புகளையும் வெட்டினார்கள்
யாரோ, எப்போதோ
காற்றில் விட்டெறிந்த புன்னகை
கொடியில் கிடந்து உலர்கிறது.
ஆண்டவனே
ஆண்டவனே
எங்களை ஏன் கைவிட்டர்!

(19.03.1992)

## 6. பார்வை

மெல்லிய சாம்பற் படிவாய்
கொட்டுகிற மழை....
வயல் ஓரங்களில் தயிர்வளைஷ
பறக்கிற கொக்கு, குடையுடன் மனிதரும்
மெல்லிய சாம்பலின் படிவாய்
காற்று வீச்சில்
வெண்முத்தென முகம் நனைந்த நீரோடு
அழுவது உன் குரலா....!
போ!
போவதுமில்லை......
பின்னர் வா!
வருதலுமில்லை.....
கொட்டுகிறது மழை
மெல்லிய சாம்பற் படிவாய்......

(03.12.1990)

பி.கு: தயிர்வளை - மாரி காலத்தில் வளர்கிற வெண்ணிற பூக்களையுடைய களை அல்லது பூண்டு.

நன்றி - நூலகத்திட்டம்



## 1987 - 'அமைதி'

பின்னரும் நான் வந்தேன்
நீ வந்திருக்கவில்லை
காத்திருந்தேன்.....
அன்றைக்கு நீ வரவேயில்லை
அப்புறம்
சுவாலை விட்டெரிகிற தீயோடு
தென்திசை நாட்கள் பெயர்ந்தன.
காலம் தாழ்த்தி
தெருவோரம் நாய் முகக்கிடந்த
உன் மரணம் செவிப்பட்டது நண்பா.
துக்கமாய் சிரிக்கும் உன் முகம் நினைவில் வர
தொண்டை கட்டிப் போயிற்று
எல்லாவற்றின் பொருட்டாயும் நெடுமூச்சே
'விதி' என்றாகிவிட்ட சுதந்திரத்துடன்
மறுபடி மறுபடி திசையற்றுப் போனோம்.
(19.09.1990)

## 8. புராதன இரவு

ஓலமிடும் தெருக்களிலிருந்து
வீட்டிற்கு வருகிறாய்
முதிய
பீதி படர்ந்த விழிகள் எதிர் கொள்ளும்
மௌனம்
வௌவாலாய் கூரையில் தொங்கும்
சொற்கள் சிதறி
அவர்களில் ஊர்ந்து திரியும்
சிலவேளை
சிலந்தி வலைக்குள்ளும் சிக்குண்டு கொள்ளும்
கடிகார முகமென்பதும் உண்மையே.
தினக்காட்டியும்
அவனிற்கு சேவகம் செய்யும்
சுவர் மூலைக்குள்
கனவின் வண்ணத்திட்டுக்கள்
புதை சேறாகி
வாய் திறந்திருக்கும்
பத்திரிகையைப் புரட்டுவாய்
கர்ப்பக்குழிக்குள்
குழந்தைகள் தகனிக்கப்பட்ட சேதி
அச்சுக்குமைவுள் தலை நீட்டிக் கிடக்கும்
நெடுமூச்செறிந்து
கிரீச்சிடும்
பழைய கதவும் திறக்கும்
வெளி வந்து நிற்கும் உன்னை
காற்று
மெல்ல ஸ்பரிசித்து நகர
நிமிர்கிறாய்
புராதன இரவு
யுகங்களிற்கு அப்பாலிருந்து ஒளிரும்
கோடி கோடி நட்சத்திரங்கள்.
(10.05.1993)

## 9. உன்னுடைய மற்றும் என்னுடைய கிராமங்களின் மீதொரு பாசுரம்

I
எனக்குத் தெரியாது
ஓர் ஆர்ப்பரிக்கும் கடலோரமோ
அல்லது
வனத்தின் புறமொன்றிலோ
உன் கிராமம் இருந்திருக்கும்
பெரிய சூழா மரங்கள் நிற்கிற
செம்மண் தெருக்களை
வஸந்தத்தில் வந்தமர்ந்து பாடும்
உன் கிராமத்துக்குருவிகளை
எனக்குத் தெரியாது.
மாரிகளில்
தெருவோரம் கண் மலரும் சின்னஞ்சிறிய
பூக்களை
நீள இரவுகளில்
உடுக்கொலித்து நீ பாடிய கதைகளை
நிலவு கண்ணயரும்
உன் வாவிகளை
நானறியேன்.

II
காற்று துயரப்படுத்தும்
இவ்விரவில்
நானும் நீயும் ஒன்றறிவோம்
ஒரு சிறிய
அல்லது பெரிய
சுடுகாடு போலாயின
நமது கிராமங்கள்.
அலைபாடும் எங்கள் கடலெல்லாம்
மனிதக்குருதி படர்ந்து மூடியது.
விண்தொடவென மரமெழுந்த வனமெல்லாம்
மனிதக்குரல்கள் அலைய கதைகள் தொங்கும்
நிலையாயிற்று
முற்றுகையிடப்பட்ட இரவுகளில்
குந்தி இருந்து நாய்கள்
ஊளையிட
'முந்தையர் ஆயிரம்' காலடிபரவிய
தெருவெல்லாம் புல்லெழுந்து மூடியது
நானும் நீயும் இவையறிவோம்
இறந்து போன பூக்களை
கைவிடப்பட்டுப்போன பாடலடிகளை
நினைவு கூரப்படாத கணங்களை
அறிவோம்.

III
ஆனால் கருகிப்போன புற்களிற்கு
இன்னும் வேர்கள் இருப்பதை
கைவிடப்பட்ட பாடல்
சொற்களின் மூலத்துள் அமிழ்ந்திருப்பதை
நீ அறிவாயா!
குருதி படர்ந்து மூடிய
கடலின் ஆழத்துள்
இன்னும்
எங்களின் தொன்மைச் சுடர்கள்
மோனித்திருப்பதை
நீயும் அறியாது விடின்
இன்றறிக
ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்
ஒரு நாள் சூர்யன் எழுந்து
புலர்ந்ததாம். (03.02.0993)

# நேற்றும் தலையுயர்த்தி நடந்த தெருக்களிலே... நாங்களும் எங்கள் பொழுதுகளும் !

நேற்றும் தலையுயர்த்தி
நடந்த தெருக்கள் தான்
இப்போது நெஞ்சிடிக்க
எவனெவனோ
கைகொண்டு கழுத்தை
நெரிக்கும் கனவுகள்
நேற்றல்ல இன்றல்ல
நாளைக்கென் வீட்டில்
அதிரும் என்றுய்த்த பறை
செவிக்குள் அதிர்கிறது.
மலங்க விழித்தபடி
இருண்ட கண்களினால்
எதுவோ தேடும்
நாங்களும் எங்கள் பொழுதும்
- இளவாலை விஜயேந்திரன்

சந்தர்ப்பாவாத அரசியலின் சூழ்நிலை பலிக்கடாகளாகி, அகதி முகாமில் அகதிகளாக இருக்கும் மக்களைப் பற்றிப் பலரும் அறிவோம். அவ் அகதி முகாம்களில் இருக்கும் பெண்களைப் பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் அறிந்து கவலையோடு உச்சுக் கொட்டிக் கொள்கின்றோம். ஒரு சில சந்தர்ப்பங்களில் பல மனித உரிமைவாதிகள், அரசியல்வாதிகள் என்போர் இவர்கள் பற்றி அனுதாபம் தெரிவிப்பார்கள். அது பெரும்பாலும் சந்தர்ப்பவாத, சுயநலவாத அரசியல் இலாபங்களுக்காக மட்டுமேயாக இருக்கும்.

"நீங்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து குடும்பத்தோடு அகதிமுகாம் ஒன்றில் தங்கியிருக்கின்நீர்கள். ஒருவர் மட்டுமே தாராளமாக நடமாடக் கூடிய சிறு பகுதியாக உங்களுக்குரிய இடமுள்ளது. ஆனால், அவ்விடத்தில் 7,8 பேர் வசிக்க வேண்டிய சூழ்நிலை. இயற்கை கடன்களைக் கழிக்க அகதிகளின் தொகையைப் பொறுத்து மலசலகூடங்கள். அவற்றில் ஒன்றுக்கோ, பலவற்றுக்கோ கதவுகள் இருக்காது. இருப்பினும் நீங்கள் அகதிகள் என்ற நாமகரணத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்."

இந்தச் சூழல், அகதிமுகாம்களில் 'இருக்கும்' அனிட்டாக்களும், புஷ்பவல்லிகளும் பழக்கமானது தான் என்று கூறுகின்றார்கள். இவர்கள் வவுனியாவின் குறிப்பிட்ட ஒரு அகதிமுகாமைச் சேர்ந்த அகதிப் பெண்கள்.

"நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். இங்கு வந்து ஒரு வருடமாகின்றது. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவளான நான் அருகிலிருக்கும் தேவாலயத்திற்குச் செல்லக்கூட வாய்ப்பின்றி இருக்கிறேன்" என்றார் அனிட்டா.

"நாம் புதுக்குடியிருப்பிலிருந்து இங்கு வந்து நான்கு மாதங்களாகின்றது. எங்களுக்கு அகதிக்காசு கொடுக்கின்றார்கள். இருப்பினும் ஒருவேளை உணவு மட்டுமே. அங்கு பாருங்கள் கதவுகளில்லாத மலசல கூடங்களை. இந்த நரகலில் தான் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்" என்றார் புஸ்பவல்லி. (சம்பந்தப்பட்ட இந்த அகதிமுகாமில் ஒவ்வொரு பிரிவிற்கும் 10 மலசலகூடங்கள் உள்ளன. இவற்றில் ஒரேயொரு மலசலகூடத்திற்கு மட்டுமே கதவுண்டு.)

வவுனியாவின்



அகதிகளுக்கான நலன்கள், சலுகைகள் பற்றாக்குறை, பாஸ்கெடுபிடிகள், வசதியற்ற இருப்பிடங்கள் இவற்றை ஒதுக்கிவிட்டு, அகதிகளாக உள்ள பெண்கள் பற்றி சிறிது அவதானத்தைச் செலுத்த வேண்டியது இன்றைய சூழலில் அவசியமானது. இதற்கான நிர்ப்பந்தம் இந்தப் பெண்களை நோக்கும்போதே தெரியவருகின்றது.

எந்தவொரு பிரச்சினையிலும் முதலில் பாதிக்கப்படுவதும், இரண்டாவதாக பாதிக்கப் படுவதும் சந்தேகமில்லாது பெண்கள் தான். அது சாதாரணதொரு பிரச்சினையாகவோ அல்லது யுத்தமாகவோ இருக்கலாம். வட-கிழக்கு யுத்த நிலைமைகள் தொடக்கம் இன்று தோண்டப்பட்டுக் கொண்டிருக்கும் செம்மணி புதைகுழிகள் வரை பெண்கள் உடலியல், உளவியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள். இராணுவமயச் சூழல், தமிழ்ச் சூழலின் அவலங்கள் என்பவற்றை கட்டி அழுபவர்களாகின்றனர் பெண்கள். இதற்கு சான்றாக இன்று ஒவ்வொரு தினசரி, வாராந்தப் பத்திரிகைகளிலும் பெண்களின் அழுதுவடியும் கோலம் கொண்ட புகைப் படங்கள் குறைந்தது ஓரிரண்டாவது இருக்கும். இது ஒரு வகைச் சூழ்நிலைக் குறியீடு என்றும் கொள்ளலாம்.

அகதிமுகாம்கள் பற்றியும், அகதிப் பெண்கள் பற்றியும் இந்தச் சமூகம் அவர்களின் கண்ணீர்க்கதைகளைத் தான் வேண்டி நிற்கின்றது. இந்தக் கண்ணீர்க் கதைகளை மறுத்துவிட்டு இந்த அகதிமுகாம் பெண்களும், பொதுவாக அகதிகள் ஆகியோரினதும் அடிப்படை உரிமைகளை வலியுறுத்த இந்தச் சமூகம் முன்வராது ஏன்? மனித உரிமை ஆர்வலர்கள், விருதுபெற்ற மனித உரிமைவாதிகள் இவ்விடயம் பற்றி வாய்திறக்காதது ஏன்?

வவுனியாவில் சுமார் 12 அகதிமுகாம்கமள் உள்ளன. இவற்றில் சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமான பெண்கள் அகதிகளாக உள்ளனர். பொதுவாக கொழும்பிலிருக்கும் சேரிகள் இந்த அகதிமுகாம்களை விட வசதி வாய்ந்தவை. இங்கு அந்தரங்கம் எதுவுமில்லை. குளிப்பதற்கு திறந்தவெளி அரங்கு. கதவில்லாத மலசலகூடங்கள். சிலருக்கு இது தமது புகைப்படக்கருவியின் புகைப்படச் சுருளுக்குள் அடக்கப்படக் கூடிய அருமையான காட்சிகளை தரக் கூடியச் சூழ்நிலை. இவ்வாறானதொரு சூழ்நிலையை இலங்கையில் இருக்கும் அகதிமுகாம்கள் அனைத்திலும் காணலாம் என்பது கண்கூடு. இவர்களுக்கு மனித கௌரவத்தை, மனித உரிமைகளை வலியுறுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட சக்திகள் செயற்படாதது ஏன் என்பது பாரதூரமான வினாவாகும்.

இவ்விடயம் தொடர்பாக சில மனித உரிமை ஆர்வலர்களிடம் வினவியபொழுது அவர்களும் அனைத்து கௌரவங்களுடன் உரிமைகளுடன் வாழும் உரித்துடையவர்கள் தாம் எனத் தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் இது நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றனர்.

அகதிமுகாம்கள் பொதுவாக தற்காலிக தங்குமிடம் என்று கருதப்படுகின்றப்போதிலும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவை நிரந்தர வசிப்பிடமாக மாறிவிடுகின்றன. அவ்வாறான நிலையில் அகதிமுகாம்களை கௌரவமான ஒரு தங்கு நிலையமாக மாற்றுவது தவறு என்று கூற முடியாது. குறிப்பாக பெண்களும், சமநீதிக்கும், கௌரவத்திற்கும், உரிமைகளுக்கும், பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்கள் என்பதை நிர்வாகம் சார்ந்தவர்கள் புரிதல் வேண்டும்.

இடம்பெயர்ந்து முற்றிலும் புதிய சூழலில் வாழும் தாக்கம், வறுமை, குடும்பச் சுமை, பொருளாதாரச் சுமை என்று அனைத்து அழுத்தங்களையும் இந்தப் பெண்களே சுமக்கின்றனர். அத்துடன் அகதிமுகாம் சூழலின் தாக்கம் வேறு இவர்களைப் பாதிக்கின்றது. இந்த புரிதல்களற்ற நிர்வாகிகளும், அமைப்புகளும் தான் இந்த அகதிமுகாம்களின் பாதுகாவலர்களாக உள்ளனர். தான் மலசலகூடத்திற்குச் செல்வது யாராவது வந்துவிடுவார்கள் என்ற பயத்துடனேயே என்கிறார் ஒரு பெண். அத்துடன் தான் உடை மாற்றிக் கொள்ள சிலவேளைகள் நடுநிசிவரை காத்திருப்பதாக இன்னுமொரு பெண் கூறினார். இவையெல்லாம் அப்பெண்களின் கண்ணீர்க்கதைகள். அனிட்டாக்களும், புஷ்பவல்லிக்களும் கூறும் சோகக்கதைகள். இந்தச் சோகக் கதைகள் துரதிருஷ்டவசமானவை. தமிழர்களை, தமிழர்களின், தமிழ்ப் பெண்களின் அவலங்களை சுட்டிக்காட்டுபவை. இருப்பினும், கௌரவம், மனித உரிமைகள், என்பவற்றின் பெயரில் இந்த அவல வாழ்வு மாற்றப்படக்கூடியது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

பொதுவாக அகதிமுகாம்களை நிர்வகிப்பவர்கள் பெரும்பாலும் (சிலவேளை முற்றிலும்) ஆண்களே. இந்த ஆணாதிக்கச் சமூகத்தினைச் சேர்ந்த, ஆணாதிக்கக் கருத்துக்களால் தலை கணத்துப் போயிருக்கும் இந்த நிர்வாகிகளுக்கு அகதிப் பெண்களை சமமாக மதிக்கும், அவர்களின் பிரச்சினைகளை பெண்ணியல் ரீதியல் நோக்கும் ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாதுதான். அந்த வகையில் பெண்கள் சுட்டிக் காட்டும் தேவைகள் - அத்தியவசியமானவை - மறுதலிக்கப்பட்டு விடுகின்றன. உதாரணமாக, நீங்கள் ஏன் உங்களுக்கெனவிருக்கும் கழிபறைகளுக்கு ஒரு ஓலையாலோ, தகரத்தினாலோ தடுப்புப்போட்டுக்கொள்ள முடியாது என வினவினால், அப் பெண்கள் கூறும் பதில்களிலிருந்து ஒன்று, நிர்வாகிகளுடன் கதைக்கப் பயப்படுகின்றார்கள் அல்லது இன்றோ, நாளையோ போய்விடப் போகின்றோம் என்ற அதீத நம்பிக்கை இருந்ததை விளங்கிக் கொள்ள முடிந்தது. அத்துடன் இந்த ஆணாதிக்கப் போக்குக் கொண்ட அரச கட்டமைப்பிற்குள்ளும் - நாம் இவ்வாறான பெறுபேறுகளை தவிர வேறெதனை எதிர்பார்க்க முடியும்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் இருப்பது போன்று இப்பெண்கள் படும் அவலங்கள் தொடர்பாக நமது தொடர்பூடகங்களும் அவதானத்தைச் செலுத்துவதும் அவசியமாகும். அவதானம் என்னும் போது அது வெறும் அனுதாபத்தைத் திரட்டும் கண்ணீர்க் கதையாகவோ, சோகக் கதையாகவோ இருக்கக் கூடாது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் என்பன மாதாந்தம் அகதிமுகாம்களுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொள்கின்றன. அகதிப் பெண்களுடன் கருத்தைப் பரிமாறிக் கொள்கின்றன. ஆனால், கிடைத்ததற்கரிய பலன்கள் எதுவுமில்லை என்கின்றனர் இப்பெண்கள். ஆனால், இவ்வாறான அரசியல் சூழ்நிலைக்கு அனைவரும் பொறுப்புச் சொல்ல வேண்டிய நிலையில் அகதிப் பெண்கள் பற்றிய நமது அனுதாபங்கள் மட்டுமே போதாது என்றே எண்ணத்தோன்றுகின்றது.

-ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்



# பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து இன்றைய தமிழ்ச் சூழலை பிரதிபலிக்கும் இரு மலர்கள் !

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கம், சங்கீத நாட்டிய சங்கம் இரண்டினதும் வெளியீடுகளான 'இளங்கதிர்', 'கீதம்' ஆகிய இரு மலர்கள் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தன. இளங்கதிர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 50வது ஆண்டு நிறைவுடன் வெளிவந்துள்ள 32வது இதழாகும். 20ம் நூற்றாண்டின் இறுதி இதழாகவும் 21ம் நூற்றாண்டின் வருகைக்கு கட்டியம் கூறுவதுமாக அமைந்துள்ள ஒரு மலர் என்ற வகையில் 'தரமானதாகவும், காத்திரமானதாகவும்' கொண்டு வரவேண்டும் என்ற நோக்குடன் 'வித்தியாசமான சில முயற்சிகளையும் தாங்கி'யதாக கொண்டு வந்துள்ளதாக அறிவிக்கிறார் அதன் இதழாசிரியர் பிரதாபன் அவர்கள். இம்மலர் வெளிவந்து சரியாக ஒரு வாரத்தின் பின் 'பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நெறியாள்கையில் மாணவர்களால் இசைக்கப்பட்ட 'கீதம்' என்று அதன் இதழாசிரியர் சகாதேவனால் அறிமுகம் செய்யப்பட்டு வெளிவந்தது.

பல்கலைக்கழக மாணவர் மன்றங்களால் ஆண்டு தோறும் மலர்கள் வெளியிடப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல. இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர்களாலும் தத்தமது பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் சார்பிலோ மாணவர் மன்றத்தின் சார்பிலோ. மலர்கள் வெளியிடப்படுவது ஒரு மரபு வழிவந்த செயற்பாடுதான். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்விசாரா பிற ஈடுபாடுகளில் உள்ள ஆர்வத்தையும் திறமையையும் வெளிப்படுத்தும் நோக்குடனேயே இம்மலர்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்தக் காரணத்தினால் சில வேளைகளில் இம்மலர்களின் காத்திரத்தன்மை குறைவாக அமைந்து விடுவதுண்டு. அதேவேளை, மலர்களின் ஆசிரியர்களாக வருபவர்களதும், மலரை வெளியிடும் மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்களதும் ஆளுமையைப் பொறுத்து இவ்வாறான மலர்கள் பல சிறப்பான தொகுப்புகளாகவும் அமைந்து விடுவதுண்டு.

பேராதனைத் தமிழ்ச் சங்கத்தின் மலர்களுக்கு அந்த வகையில் ஒரு விசேடத் தன்மையுண்டு. அவை அந்தந்தக் காலத்தின் சமூகப் போக்குகளையும், மாணவ சமுதாயத்தின் அவற்றின் மீதான எதிர்வினைகளையும், துல்லியமாக காத்திரமான விதத்தில் வெளிப்படுத்தி வந்துள்ளன. பின்நாளில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களாகவும், அறிஞர்களாகவும் பரிணமித்த பலர் இம்மலர்களுக்கு ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். சிவகுருநாதன், ஆ. வேலுப்பிள்ளை, மு.தளையசிங்கம், செ. கதிர்காமநாதன், ஆ. சிவநேசச் செல்வன் போன்றவர்கள் அவர்களுள் சிலர்





இம்முறை வெளியான இளங்கதிர், கீதம் இதழ்கள் கூட இன்றைய சமூகத்தின் பிரச்சினைகளையும் அவற்றோடொட்டிய விடயங்களையும் குறித்த தனது பதிவுகளையும், எதிர்வினைகளையும் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளன. மலர்களை காத்திரமானவையாக கொண்டு வரவேண்டும் என்ற ஆர்வமும், இம்மலர்களுக்கான வரலாற்றுச் சிறப்பும் பேணப்பட வேண்டும் என்ற அக்கறை காரணமாக அவை வெறுமனே மாணவர்களிடமிருந்து வரும் படைப்புகளை தொகுப்பது என்ற அளவுக்குள் தம்மைச் சிறைப்படுத்திக் கொள்ளாமல், வெளியிலிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் கூட படைப்புகளைப் பெற்று வெளியிட்டிருக்கின்றார்கள்.


இளங்கதிர் இதழில் வெளியான கவிதைகளும், கதைகளும் இன்றைய தமிழ்ச் சூழலின் அவலத்தை அழகுடன் வெளிப்படுத்துகின்றன என்றால், தொகுக்கப்பட்ட கட்டுரைகளோ, தமிழ்ச் சூழலின் தேவையை உணர்ந்து தொகுக்கப்பட்டிருக்கின்றன. சிறப்புப் பகுதியாக இணைக்கப்பட்டிருக்கும் 20ம் நூற்றாண்டை நோக்கிய மீள்பார்வையும், 21ம் நூற்றாண்டை நோக்கிய எதிர் கூறலும் என்ற பகுதி மிகவும் அக்கறைக்குரிய ஒரு பகுதியாகும்.

இளங்கதிர் பெருமளவுக்கு தமிழ்ச்சூழலின் சமூக அரசியல் விடயங்களில் அக்கறை செலுத்தியதென்றால், கீதம், கலாசார பண்பாட்டு அம்சங்களில் தன் கவனத்தைப் பெரிதும் குவித்திருக்கிறது. கலை இலக்கியம், சமூக விஞ்ஞானம், கவிதை, இலக்கியம் பதிவியில் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இம்மலர் வெளியிடப்பட்டிருப்பினும், அதன் ஒட்டுமொத்த குவியலாக அமைவது இன்றைய தமிழ்ச் சூழலின் நிலைமைகளும், தேவைகளும் பற்றிய தேடலே.

மொத்தத்தில் இவ்விரு மலர்களும் இன்றைய தமிழ்ச் சூழலில் முக்கியமான, அவசியம் படிக்கப்பட வேண்டிய இரு படைப்புக்கள் என்பதில் ஐயமில்லை. மலர்களில் வந்துள்ள ஒவ்வொரு படைப்பு தொடர்பாகவும் நிறையவே பேச முடியும் ஆயினும், அதற்கு பொருத்தமான இடம் இதுவல்ல என்பதால் இக்குறிப்பு இத்துடன் நிறுத்தப் படுகிறது.

இம்மலர்களை வெளிக்கொணர உழைத்த மாணவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்:

- அருண்



'புதிய களம்'
வெளியீடு:
களம் கிராமிய மீளமைப்பு நிறுவனம்
7/8, பொதுவீதி,
அக்கரைபற்று -7

நீண்ட இடைவெளியூடே 'களம்' தன் பெயர் மாற்றி "புதிய களமாய்' பத்தாவது இதழாக வெளிவந்துள்ளது.

நிறையக் கவிதைகளும், கட்டுரைகளும் இரண்டு கதைகளுமாக சி. ஜெய்சங்கரின் தொகுப்பில் இவ்விதழ வந்துள்ளது. ஒரு சீசனுக்காய் மலர்வதைப் போல் ஈழத்து சிறுசஞ்சிகைகள் (களம், மூன்றாவது மனிதன், வியூகம்) ஒரே நேரத்தில் வந்திருப்பது போல் படுகிறது. இருந்தும் காத்திரமாய் வரும், வரத்துடிக்கும் எல்லாவற்றிடமும் எதிர்பார்ப்பது தொடர் வருகையைத் தான்.

— சத்யா

மூன்றாவது மனிதன் இதழ் -6
தொடர்புகளுக்கு:
எம். பௌஸர்,
53, வோக்ஷல் லேன்,
கொழும்பு -2




குறிக்கப்பட்ட கால எல்லையைவிட மிகத் தாமதித்து மூன்றாவது மனிதனின் ஆறாவது இதழ் கனகச்சிதமாய் வெளிவந்துள்ளது. படைப்புத் தெரிவும், வடிவமைப்பும், தாளின் கனதி தரும் அழகும் இடைவெளியை மறந்து ஈர்க்கச் செய்கிறது. சேரனின் நேர்காணல், நுஃமானின் பலஸ்தீனப் பெண் கவிஞர்கள் சிலரின் கவிதைகளின், மொழிபெயர்ப்பு, மூன்று கதைகள், கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள் என வந்திருக்கும் இவ்விதழ் தொடர்ந்தும் காலாண்டிதழாக வெளிவரவிருப்பதாக அதனது ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது மனிதன் தொடர்ச்சியாக வராமலிருக்கின்ற காரணம் 'காத்திரமான படைப்புக்கள் கிடைக்காமையே' என்று கூறப்பட்டுள்ளது. காத்திரமான படைப்பாளர்கள் இதனைக் கவனத்திற் கொண்டு இவ்விதழின் தொடர்வருகைக்கு உதவுவார்களாக.

— ஜிப்ரான்

## கிடைக்கப் பெறும் இதழ்கள்


"புலம்"
IBC - Tamil
P.O.Box - 1505
London
Email: radio@ibc-tamil.demon.co.uk
http: //fastaccess.co.uk./~ibc






காலச்சுவடு:
இதழ்: 25
151, கே.பி. சாலை,
நாகர் கோவில் 629001

விடியல் வெள்ளி
மாத இதழ்
தொடர்புகளுக்கு
26, பேரக்ஸ் சாலை
2வது மாடி, பெரியமேடு
சென்னை - 600003





'எக்ஸில் -6'
Chev. R. Inpavalli
94, Rue de la chapelle
75018 Paris
France.






"உயிர் நிழல்"
Exil, 27, Rue jean Moulin
92400, Courbevoie,
France
E-Mail: EXIL@aol.com

சக்தி
Boks 99 Oppsal
0619 OSLO 6
Norway



நன்றி - நூலகத்திட்டம்





# காழ்ப்புணர்வு விமர்சனங்கள் !

முஸ்லிம் காங்கிரஸ் எதிர் அரசியலை தீவிரமாக ஊக்கப்படுத்தி களமமைக்கும் பணியில் அண்மைக் காலமாக 'சரிநிகர்' ஈடுபட்டு வருவது போல் ஒரு தோற்றம் காட்டுகிறது. முஸ்லிம்களின் அரசியல் - முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் என்ற இருவேறு அம்சங்கள் இருப்பதையும் நான் உணர்வேன். ஆனாலும் அண்மைக் காலமாக 'சரிநிகரில்' வரும் முஸ்லிம் காங்கிரஸ், அதன் தலைமை, முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு என்பனவற்றில் 'சரிநிகர்' அதிக ஒரு பக்கச்சார்பான நிலையிலேயே அதனுடைய பார்வையைச் செலுத்தி வருகிறதென்பதனை 'சரிநிகர்' வாசகன் என்ற அடிப்படையில் என்னால் உணர முடிகிறது. 'சரிநிகரி'ற்றான் மருதூர் பஷீத், அபூநிதால் போன்றவர்கள் தொடர்ந்தும் முஸ்லிம் அரசியற் தலைமை, முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாய் எழுதினார்கள். அவர்களின் கருத்துக்கள் ஒரு பொதுத்தளத்தில் ஏற்கக் கூடியவையாக இருந்தன. அக்கருத்துக்களில் ஒரு போதும் முஸ்லிம் காங்கிரஸ் காழ்ப்புணர்வு வெளிப்படவில்லை.

ஆனால், தற்போது கச்சை கட்டிக் கொண்டு எழுத வந்திருப்போர்களுள் மிகவும் மேலோங்கித்தெரிவது முஸ்லிம் காங்கிரஸ் மீதான காழ்ப்புணர்வும், அதன் அழிவையும், அதன் வீழ்ச்சியையும் கண்டு பெருமிதமும், மகிழ்வும் கொள்ளும் மனோபாவமுமே. இக்கட்டுரைகளை 'சரிநிகர்' ஆசிரியர் குழு ஆழமாகப் படித்திருப்பின் (பிரசுரத்திற்கு முன்) கட்டுரையாளரின் மனவுணர்வைப் புரிந்து கொண்டிருக்கலாம்.

கடைசியாக வந்த 'சரிநிகர்' (இதழ் 174)ல் 'அஷ்ரஃப்பின் அதிரடி விஜயம்' என்ற கட்டுரையில் முன்பு தக்காளியெறி, கல்லெறி, சொல்லெறி எறிந்தவர்கள் இம்முறை வரவேற்றுத் தவறுக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொண்டார்கள் என்கிறார் கட்டுரையாளர். இது நடக்கக் கூடாதா?

முஸ்லிம் காங்கிரசுக்கெதிராக ஆங்காங்கே நடக்கும் எதிர்ப்புக்களை மட்டும் தனது கற்பனைத் திறனால் உருப்பெருப்பித்துக் காட்டுவது மட்டும் தான் கட்டுரையாளரின் விருப்புப்போற் தெரிகின்றது. 'சரிநிகரி'ல் இது போன்ற கட்டுரைகளை தாங்கள் தொடர்ந்து பிரசுரிக்கும் எண்ணம் இருப்பின் 'சரிநிகர்' என்ற உங்கள் பத்திரிகையின் நாமத்தைத் தயவுசெய்து மாற்றிவிடுங்கள்.

'சரிநிகரி'ன் அரசியலும் இதுவாய் இருந்தால் நாம் என்ன தான் செய்ய முடியும்?

எம்.பி.எம். ஜவாத்,
காத்தான்குடி

# எருமை மாட்டில் பெய்த மலை !

யாழ். மக்கள் இடம்பெயர்ந்து போய் திரும்பி வந்து மூன்று வருடங்களுக்கு மேலாகி விட்டது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் ஏதும் தீரவில்லை.

வெளிநாட்டுத்துதுவர்கள், வெளிநாட்டு பாராளுமன்றக்குழு, வெளிநாட்டு அரச சார்ப்ற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் வருகின்றனர். எமது அரச அதிகாரிகளும் அவர்களை ஆடம்பர வாகனங்களில் அழைத்து வந்து மகாநாடு நடாத்துவர். இங்குள்ள பிரச்சினைகளைப் பற்றிக் கேட்டால் ஒன்றுமேயில்லை என்பார்கள். பின்பு என்ன விருந்தோம்பல் நடைபெறும். விருந்தோம்பல் என்பது எமது பண்டைய பண்பாடல்லவா. வந்தவர்கள் போன பின்பு தான் பத்திரிகை அறிக்கை விடுவார்கள். தாங்கள் தான் வானத்தை வில்லாக வளைத்தவர்கள் போன்று. ஆனால், எதுவுமே நடைபெற்றிருக்காது. மகாநாட்டில் எதுவும் கூறியிருக்கவும் மாட்டார்கள். காரணம் மேலதிகாரிகளினால் கிடைக்கும் சம்பளஉயர்வு, பதவியுயர்வு போன்றன கிடைக்காமல் போய்விடும் என்ற காரணம். ஐயா சாதாரணமாக யாழ். வீதிகளைப் பாருங்கள். சில வீதிகள் தாரைக்கண்டு பல ஆண்டுகளாகி விட்டன.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் எம்மவர்களில் பலர் அரச சேவைகளில் இருந்து இளைப்பாறி ஒய்வூதியமாக ரூபா பத்தாயிரத்துக்கு குறையாமல் பெற்றுக்கொண்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களில் வருமானமாக ரூ.30 ஆயிரம் வரை பெறுகின்றனர். ஆனால், எதுவும் செய்வது கிடையாது.

இக்கடிதங்களைப் படித்தாவது இவர்கள் திருந்துவார்களா? நடக்காது. தமிழ்க் கட்சிகள் போன்று இவர்களும் எருமை மாட்டின் மேல் மழை பெய்தால் எப்படியோ அப்படித்தான்.

அ. கோகுலன்,
யாழ்ப்பாணம்

# வட கிழக்கு மாகாணம் : நாவிழந்தோரின் கதை !

திருமலை விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம் சீர் கேடுகளில் கொடிகட்டிப்பறக்கின்றது. இம்மாவட்டத்திலே அதிக எண்ணிக்கையான புகார்களைக் கொண்டது இப்பாடசாலையே. ஆனால், செயலாளர் உட்பட ஏனைய அதிகாரிகளும் அமைதியாக இருப்பது தொடர்பாக பொதுமக்கள் சந்தேகம் கொள்கின்றனர்.

மாதமொருமுறை அதிகாரிகள் புகார்களை விசாரிக்க செல்கின்றனர். ஆனால், நடவடிக்கைகள் எடுத்ததாக தெரியவில்லை. "நக்குண்டார் நாவிழந்தார்" என்பதற்கு ஒப்பாக எல்லாம் மர்மமான முறையில் மறைக்கப்பட்டு வருகின்றது.

விபுலானந்தா தமிழ் மகாவித்தியாலய அதிபரின் சீர்கேடுகளையும், பாடசாலையின் சீரழிவையும், மாகாண கல்வி செயலாளரிடம் பல நலன்விரும்பிகளும், ஆசிரியர் ஒருவரும் எடுத்துக்கூறியும் செயலாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அவர் அதற்கு மாறாக புகார் செய்த ஆசிரியரையே இடமாற்றி இருந்தார். செயலாளர் தான் தப்புவதற்காக இப்பாடசாலையையும், அதிபரையும் பற்றிவரும் சகல புகார்களையும் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி விடுவார். வலயக் கல்விப் பணிப்பாளரோ சம்பந்தப்பட்ட அதிபரைக் காப்பாற்றும் நோக்குடன் புகாரை விசாரிக்க தன்னிடம் ஆளணி இல்லையென கையை விரித்து விடுவார்.

இம்மாகாண ஆளுனர் கூட பல தடவை இந்தப் புகார்களை விசாரணை செய்யும்படி கல்விச் செயலாளரைப் பணித்திருந்தும், அவர் அவற்றை வலயக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பிவிட்டு அமைதியாக இருந்து விடுகிறார்.

கல்வித்துறை மாத்திரமல்ல இங்குள்ள எல்லாத் துறைகளிலும் இவ்விதமான கடிதப்பரிமாற்றம் நடைபெறுகின்றனவே தவிர காரியங்கள் ஆனதாக இல்லை. புகார் செய்தவரும் சிறிது காலத்தில் சம்பவத்தை அடியோடு மறந்து விடவே இப்படியானவற்றை இங்குள்ள அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

இந்த அதிகாரிகளைத் தட்டிக்கேட்க ஒரு அமைப்பு அதாவது ஒரு சிவில் உயர்பீடம் இங்கு தேவையானதே. செயலாளர் ஒருவரின் இரண்டாம் திருட்டு திருமணத்தை ஊழியர் ஒருவர் பத்திரிகை மூலம் அம்பலப்படுத்தி விட்டார் என்ற தனிப்பட்ட கோபத்தில் அந்த ஊழியர் எவ்விதமான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுமின்றி சேவை நீக்கம் செய்யப்பட்டார்.

அந்த ஊழியரோ தனது "வேலைநீக்கம். சட்டரீதியானதல்ல" என மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். மேல்நீதிமன்றம் அவரின் மனுவை ஏற்று மீண்டும் அவருக்கு நிலுவைப்பணத்துடன் வேலை வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்திருந்தது.

ஆனால், அதிகாரிகள் அரசாங்கப் பணத்தில் மேல் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். சம்பந்தப்பட்ட ஊழியரோ விட்டு வைக்கவில்லை. அந்த மனுவையும் எதிர்த்து வழக்காடினார். மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 29.04.1999 அவருக்கு மீள வேலை வழங்கவேண்டுமென்று தீர்ப்பளித்தது. ஆனால், இதுவரை அந்த ஊழியருக்கு வேலை வழங்கப்படவில்லை. இந்த நாட்டின் நீதித்துறையையே கொச்சைபடுத்தும் இம்மாகாண அதிகாரிகள் சிவில் நிர்வாகத்திற்கு தேவையா?

திருகோணமலையில் இப்படியான சிவில் நிர்வாகக் கூத்துக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. வவுனியா போன்ற பகுதிகளில் இந்த கூத்துக்களுக்கு இடமில்லை. காரணம் எல்.ரி.ரி.ஈயினர் இவ்விதமான விடயங்களில் மிகக் கவனமாக இருக்கின்றனர்.

60வதுக்கு மேற்பட்டவர்கள் சேவையில் இருக்க கூடாதென கடும் உத்தரவை அரசு பிறப்பித்தாலும், பின் கதவால் உத்தியோகம் கொடுக்கப்படுகின்றது. ஆளுநருக்கென்ன? ஆண்டவனுக்கு இப்புகார்களை சமர்ப்பித்தாலும் அதிகாரிகள் அசையப் போவதில்லை.

வடக்கு கிழக்கு நிர்வாகம் தொடர்பாக விசேட விசாரணைக்கமிட்டியை நியமிக்கும்படி பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வேண்டி இருந்தும் அவர் கூட அதில் அக்கறை செலுத்தவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணம் அதிகப்படியான சிங்கள மக்களைக் கொண்டிருந்தால் நிச்சயம் அரசின் பார்வை திருப்பப்பட்டிருக்கும். அதிகாரிகளின் அதிர்ஷ்டமோ என்னவோ இம்மாகாணத்தில் அதிகமான சிங்கள மக்கள் இல்லாததே.

துட்டகைமுனு,
திருமலை.

# கந்தளாய் சீனித் தொழிற்சாலைச் சதி !

1973 03.02. கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் அமைய ஊழியராக வேலைக்குச் சேர்ந்து 1983 டிசம்பர் வரை தொழில் புரிந்து வந்தேன். அதன்பின் அதிகாரியின் வேண்டுகோளின்படி இத்தொழிற்சாலையின் வேறு பகுதிகளுக்கு வேலைக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டது. வேலை அனுபவம் கொண்ட எமக்கு சகல வசதிகளையும் சம்பள அதிகரிப்பையும் பெற்றுத் தருவதாகக் கூறப்பட்டது. நிரந்தர ஊழியராக்குவோம் என்ற நிபந்தனையில் 35 பேர் 1984.01.01 அன்று இடம்மாற்றம் செய்யப்பட்டோம். பின்னர் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நாம் வேலையிலிருந்து நீக்கப்பட்டு விட்டோம். இவ்விடயம் தொடர்பாக கந்தளாய் தொழில் நியாயமன்றக் காரியாலயத்தில் முறையிடப்பட்டது. ஒரு மாதமாகியும் எந்தவிதப்பதிலும் கிடைக்காததால் குருணாகலை தொழில் நியாயமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய வேண்டியேற்பட்டது. இந்த வழக்கு தற்போது மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டுவிட்டது. இங்கு 3 ஊழியர்களுக்கு மட்டும் 90 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்துடன் இந்த வழக்குகளுக்கு உயரதிகாரிகள் சமூகமளிக்காததால் வழக்குகள் பின்போடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வழக்குக்குச் செல்லாவிட்டால் பெயரை நீக்கிவிடுவதன் காரணமாக இதுவரை 4 பேர் மட்டுமே எஞ்சியுள்ளோம்.

இதுவரை எந்தவித நியாயமும் கிடைக்காத நிலையில் ஜனாதிபதிக்கும், தொழில் அமைச்சருக்கும் இவ்விடயம் பற்றி தெரியப்படுத்தியது தான் மிச்சம் மேலும், சில சீனித் தொழிற்சாலை ஊழியருக்கு தொழில் நிறுவனத்தினால் தலா 2,50,000 ரூபா நட்டஈடுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், எமக்கு ரூபா 25,000க்கு மேல் தரமுடியாது எனக் கூறப்படுகிறது. தொழிலின்றி நிரந்தரவருமானமின்றி துன்பத்துக்குஉள்ளாகியிருக்கும் எமக்கு 2000 ஆண்டிற்குள்ளாவது சரியான தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

எஸ். கோபாலபிள்ளை,
கந்தளாய்.

## இலங்கையின்....

"உத்தியோகபூர்வ விசாரணையின் இறுதி முடிவுகள் நான் எல்லா விதத்திலும் சரியாகவே இருந்தேன் என்பதைக் காட்டின. நான் சரியாகவும், அமைச்சர் தவறு செய்தவராகவும் இருந்த போதும் நான் தான் இந்த குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒரு குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்டேன். நான் தான் என்னுடைய நேரத்தை இங்கும் அங்குமாக வீணாக்க வேண்டி இருந்தது. நான் தான் பணத்தைச் செலவழிக்க வேண்டியிருந்தது. மக்கள் நலனைப் பிரதிநித்துவப்படுத்தி எழுதிய எனக்கு அல்ல, மக்களது நலனுக்கு எதிராகச் செயற்பட்ட அரசியல்வாதிக்குத்தான் சட்ட மா அதிபரின் பாதுகாப்பும் அரவணைப்பும் கிடைத்தது."

விக்டர் ஐவனுக்கு எதிராகப் பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவற்றின் குற்றச்சாட்டுகளுக்கு எதிர் வாதங்களை தயார் செய்வதற்கு நிறைய நேரம் போவதால், அது தனது ஆசிரியர் பொறுப்பைச் சரிவரச் செய்ய விடாது குழப்புகிறது என்கிறார் அவர். இத்தகைய வழக்குகளின் காரணமாக வரும் நெருக்கடிகள், மிகவும் பாரதுாரமான தாக்கத்தை ஆசிரியர்களின் மதிப்பீட்டின் மீது ஏற்படுத்தும் என்று அச்சம் தெரிவிக்கிறார் அவர்.

"இத்தகைய வழக்குகள் தீர்க்கப்பட நீண்ட காலம் எடுப்பதால் ஆசிரியர் தனது பெருமளவான நேரத்தை நீதிமன்றத்துள் வீணாக்குகிறார். இதனால், ஒரு ஆசிரியர், தன்னிடம் போதியளவு நம்பகமான தகவல்கள் இருந்த போதும் தான் இத்தகைய நீண்ட நேர சித்திரவதை தருகின்ற அழுத்தத்தை எதிர்நோக்கும் ஆபத்திற்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதால், அதிகாரத்திற்கு எதிராக தன்னிடமுள்ள தகவல்களை அவர் பிரசுரிக்காமலே விட்டுவிடக் கூடும்."

## பதுளை....

இப்பிரச்சினை தொடர்ந்தும் இதே நிலையில் மாணவிகள் இன்றி ஆசிரியைகளின் அதிகரித்த வரவுடன் இருக்குமானால் தற்போது வரும் மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியைகளை நியமித்துவிட்டு ஏனையவர்களை இடமாற்றம் செய்யப்போவதாக மேலிடத்து முடிவுகள் எடுக்கப்படப்போவதாகவும் அறிய முடிகிறது.

பாடசாலைகள் இன, மத, ரீதியாகப் பிரிக்கப்பட்ட ப்பின்னரும் அங்கு நிலவும் சில நெகிழ்வான பக்கங்களே இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கின்றன. சிங்களப் பாடசாலைகள் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமென்றோ, இந்துப் பாடசாலை இந்துக்களுக்கென்றோ முஸ்லிம் பாடசாலைகள் முஸ்லிம்களுக்கென்றோ, இருக்க வேண்டும் இது வரையான கல்விச் சீர்திருத்தங்கள் இயம்பியதில்லை. புதிய கல்விச் சீர்திருந்தம் இது மாற்றப்பட வேண்டும் என்ற முன்மொழிவை எதிர்காலத்திட்டமாகக் கொணர்ந்தாலும் அது எந்தளவு சாத்தியமானது என்பதையிட்டு இப்போதே அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் இயங்கும் பாடசாலைகளில் கற்பிப்பவர்களும் கற்பவர்களும் பரஸ்பர புரிந்துணர்வுடையவர்களாகவும் சகிப்புத்தன்மையுடையவர்களாகவும் பிறரை ஏற்று அங்கீகரிப்பவர்களாகவும் இருப்பது அவசியத்திலும் அவசியம். இல்லாதவிடத்து இவை பாடசாலைகளில் மட்டுமல்ல எங்குமே அபாயங்களைத்தான் தோற்றுவிக்கும். இந்த அபாயங்களை நாம் இன்று பல்வேறு வழிகளிலும் அனுபவித்துக் கொண்டிருப்பதே நல்ல பாடமாக இருப்பதற்கும் உதவும் இங்கு நீதிமன்றத் தீர்ப்புகள் இன்னும் பிரச்சினைகளைத்தான் உருவாக்கும். ஏற்கனவே உள்ளேயும், வெளியேயும் வீசிக்கொண்டிருக்கிற மௌனப்புயல் பல மையங்களை தாண்டிச் செல்லும் எத்தனத்தோடே இருக்கிறது.

*இறுதியாக பதுளை முத்தன் சரிநிகருக்கு* எழுதிய கடிதத்தில் எழுப்பிய சில கேவிகளுடன் இதை நிறைவு செய்யலாம்.

0அரசியல்வாதிகள் உங்களின் வாக்கு வங்கிகளை நிரப்ப வேறு உத்திகள் இல்லையா?

0பாடசாலையை பகிஷ்கரிக்கச் சொன்னவர்கள் இப்போது எங்கே?

0'பர்தா' அணியச் சொன்னவர்கள் ஏழை முஸ்லிம் குழந்தைகளுக்கு ஏதாவது செய்தார்களா? அல்-அதான் பாடசாலையை வியாபாரத் தளமாக்கியது யார்?

0பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்காமல் அவர்களை வீதியில் விட்டு விட்டு நீங்கள் மட்டும் சம்பளம் வாங்குவது சரியா?

எதிர்காலச் சந்ததியை ஏமாற்றிய, அவர்களின் மனங்களில் வெறுப்பு வதைகளைத் துாவி அவர்களையும் பலிக்கடாக்களாக்கும் அனைத்துத் 'தனங்களிலிருந்தும் விடுபடவேண்டியது சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் காலம் சுமத்துகிற கடமையாகும்.

கட்டுரையாக்கம்: எம்.கே.எம். எஸ்
தகவல்:பதுளை முத்தன்

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

Registered as a newspaper in Sri Lanka


## உயிர்குடிக்கும் கோமாளித்தனம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பற்றி பல்வேறு விமர்சனங்கள் பலராலும் தொடர்ச்சியாக வைக்கப்பட்டு வந்துள்ளன. வருகின்றன.

அவற்றுள் ஒன்றுதான் அவர் நேரத்திற்கு எந்த விடயங்களையும் செய்வதில்லை. எதையும் ஆறப்போட்டு, காலந்தாழ்த்திச் செய்வதே அவரது சிறப்பு இயல்பு என்பது.

செயல்வேகம் குறைந்த ஒருவர் என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

ஆயினும், அவர் கடந்த நான்காண்டு கால ஆட்சியில் சாதித்த சாதனைகள் நிறையவே உள்ளன. அவரது சாதனைகள் பற்றி நாமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்பத்தியிலும், பத்திரிகையின் பிற பக்கங்களிலும் எழுதி வந்துள்ளோம்.

அவரது சாதனைகளுள் ஒன்று, சாதனை மேல் சாதனைகளாக சாதித்துக் குவிப்பது. அதுவும் வாக்குறுதிகளை பார்ப்பவர்கள் அசந்து போகும்படியாக மீறுவதில் அவர் செய்யும் சாதனைகட்கு அளவு கிடையாது. இவ்வாறான சாதனைகட்கு கின்னஸ் புத்தகத்தில் இடமிருக்கின்றதோ தெரியவில்லை. இருந்தால் அந்தப் புத்தகத்தின் அட்டைப்படத்தில் இடம்பிடிக்கத்தக்க பிரமிப்பூட்டும் சாதனைகளை அவர் செய்துள்ளார் என்பது நிச்சயம் பொறிக்கப்படும்.

அண்மையில், அவரது அமைச்சரவை எழுபத்தைந்து பேரைக் கொண்ட ஒரு அமைச்சரவையாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இருபது பேருக்கு மேல் அமைச்சர்கள் இருக்க மாட்டார்கள் என்ற வாக்குறுதியை ஐம்பத்தி ஐந்தாவது தடவையாக மீறி அவர் சாதனை படைத்துள்ளார்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில், பிரேமதாச அரசாங்கத்தில் ஏகப்பட்ட அமைச்சர்கள் இருப்பதாகவும், அரசாங்கப் பணம் இதனால் அதிகமாக செலவு செய்யப்படுகிறது என்றும், இப்பணத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் என்றும், பலத்த ஆரவாரத்தின் மத்தியில் மக்கள் முன் பேசித் திரிந்தவர் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா.

அவர் ஆட்சிக்கு வந்த போது எப்படி ஐ.தே.கவினர் சொகுசு வாகனங்கள், அமைச்சர் பதவிகள் என்று டாம்பீகமாக பொதுப்பணத்தை கரியாக்கிக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள் என்ற பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது.

தான் ஆட்சிக்கு வந்தால் இருபது பேருக்கு மேல் அமைச்சர்கள் இருக்க மாட்டார்கள் என்று அறிவித்தவர் அவர்.

பஜிரோக்களும், இன்ரர் கூலர்களும் இருக்கமாட்டாது என்று கூறியவர் அவர்.

ஆனால், ஆட்சிக்கு வந்து ஒரு சில நாட்களுக்குள்ளேயே எல்லாம் வந்து விட்டன. பஜிரோ என்ன, இன்ரர்கூலர் என்ன, அமைச்சர் பதவிகளும் ஒவ்வொன்றாக அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பதினைந்து பிரதியமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துள்ளார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

சந்திரிகாவைத் தவிர வேறு யாருக்குத்தான் இந்தச் சாதனையை செய்ய முடியும்? ஒருவேளை தம்கையில் அதிகாரம் வந்துவிட்டால், அபிவிருத்திக்காக இந்தப் பணம் செலவளிக்கப்பட வேண்டியதில்லை என்று நினைக்கிறார் போலும்!

இதிலே இன்னொரு வேடிக்கையும் இருக்கிறது.

"இப்படியெல்லாம் மக்களின் பணத்தை வீணடிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. அதை ஐ.தே.க கண்டிக்கிறது" என்று கூறுகிறார் ஐ.தே.க செயலாளர் காமினி அத்துக்கோறளை.

தாம் ஆட்சியில் இருந்தபோது இப்படிப் பணத்தை வீணடிக்கக் கூடாது என்று ஐ.தே.க ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனால், இப்போது அவர்கள் கூறுகிறார்கள் பணத்தைக் கரியாக்கக் கூடாது என்று!

எதிர்க்கட்சியில் இருக்கும்போது தான் எல்லோருக்கும் நியாயம் தெரியும் போலும்!

சந்திரிகா அரசாங்கம் போகிற போக்கில் எல்லா பா.உக்களையும் பிரதியமைச்சர்கள் ஆக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'சோ'வின் முகமது பின் துக்ளக் நாடகத்தில், துக்ளக் தன் கட்சிக்காரர்கள் அனைவருக்கும் துணைப் பிரதமர் பதவி அளித்தது போல், சந்திரிகாவும் அனைவருக்கும் பிரதியமைச்சர் பதவியை வழங்கக்கூடும்.

கோமாளிக் கூத்துக் கொட்டகையாக பாராளுமன்றம் மாறிவிட்டபின் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைத் தான்.

ஒரு வித்தியாசம். அந்தக் கோமாளித்தனம் எமது குடலைப் பிடுங்கிச் சிரிக்க வைத்தது.

இதுவோ எமது குடலை உருவி உயிரெடுக்கிறது.

சர்வாதிகாரத்திற்கும், கோமாளித்தனத்துக்கும் உள்ள ஒற்றுமை மூன்றாவது தடவையாகவும் எமது நாட்டில் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. முதலில் ஜே.ஆர். பிறகு பிரேமதாச. இப்போது அம்மணி.

விஜேதுங்க ஒரு விபத்து. தன்கோமாளித்தனத்தையோ, சர்வாதிகாரத்தையோ காட்ட முடியாமல் வந்து போய்விட்ட விபத்து.

நமது துக்ளக்கை வாழ்த்துவோம்!

யாழ்:

## விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி!

### சில புள்ளி விபரங்களும் குறிப்புகளும்

யாழ் குடாநாட்டின் சனத் தொகையில் பெரும்பாலானோர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். யாழ் மக்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கினர் விவசாயத்தில் ஈடுபட்டு வருபவர்கள். அரச மற்றும் தனியார் துறையில் தொழில் புரிவோரும் பகுதி நேரத் தொழிலாக விவசாயம் செய்து வருபவர்கள் .

எழுபதுகளில் யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு கணிசமான ஆதரவு இருந்தது. அப்போது சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவு அளித்து வந்தவர்கள் யாழ்ப்பாண விவசாயிகளே. 1982ம் ஆண்டு ஜே.ஆர். பொதுத் தேர்தல் நடாத்துவதா வேண்டாமா என சர்வசன வாக்கெடுப்பு நடாத்திய போது பொதுத்தேர்தல் நடத்த வேண்டும் என சிறீலங்கா சுதந்திரக்கட்சி பிரச்சாரம் செய்த அந்தத் தேர்தலில், பானை சின்னம் தேர்தல் நடாத்தப்படவேண்டும் எனக்கோரும் சின்னமாக அறிவிக்கப்பட்டது. அப்போது யாழ் திறந்த வெளியரங்கில் தற்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூட்டம் தொடங்கி முடியும் வரை சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேல் பானை ஒன்றை தலையில் வைத்தபடி மேடையில் நின்றிருந்தார். அப்பொழுதெல்லாம் யாழ்ப்பாணத்தில் பாமர விவசாயிகள் கூட எங்கடை வோட்டு அம்மாவுக்குத்தான் எனக்கூறி வந்தனர். இவ்வாறு சிறீலங்கா சுதந்திரக்கட்சியை ஆதரித்து வந்த யாழ் விவசாயிகள் தற்போது பொது சன முன்னணி அரசின் ஆட்சியில் முன்னொரு போதும் இல்லாதவாறு துன்பப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஏனைய பிரதேசங்களைப் போல் ஆறுகள், குளங்களுடன் கூடிய நீர்ப்பாசன வசதி கொண்ட ஒரு பிரதேசம் அல்ல. யாழ் விவசாயிகள் இரத்தம் சிந்தி உழைப்பவர்கள். கிணறுகளின் மூலமே தமது பயிர்களுக்கு நீர்பாய்ச்சி மிகவும் கடினமாக உழைப்பவர்கள். யாழ் விவசாயிகள் பலர் தற்போது விவசாயத்தைக் விட்டு வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். சந்தை வியாபாரம், புரோக்கர் தொழில் போன்ற தொழில்கள் இலாபம் ஈட்டும் தொழில்களாக இவர்களால் கருதப்படுகின்றன. இவ்வாறு பலர் இத்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயம் தற்போது இரண்டாந்தர தொழிலாகவே கருதப்படுகிறது. முன்பு வட்டிக்குப்பணம் பெற்று விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் இப்போது விவசாயத்தையே கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது சந்தைப்படுத்தல் வசதி இல்லாமையாகும். முன்பு யாழ்ப்பாண உற்பத்திகள் யாவும் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு வந்தன. தற்போது போக்குவரத்து வசதிகள் இல்லாதபடியால் தென்னிலங்கை வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக விவசாய உற்பத்திகளுக்கான உள்ளீடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இன்னொரு விடயம் விதை தானியங்கள் உரிய காலத்தில் கிடைப்பதில்லை.

இவற்றை விட இராணுவச் செயற்பாடுகளும் இவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இராணுவம் தாம் நிலை கொண்டுள்ள இடங்களில் தமது பாதுகாப்புக் கருதி பயிர்ச் செய்கை நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்காமையால் 65500 ஹெக்டயர் நிலம் பயிர்ச்செய்கை பண்ணப்படாமல் உள்ளது. (பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.) அத்துடன் இராணுவ நடமாட்டம், சுற்றி வளைப்பு என்பன காரணமாகவும் தோட்ட, வயல் வேலைகள் பாதிப்படைந்துள்ளன. ஊரடங்குச்சட்டம் காரணமாக இரவு நேர நீர்பாய்ச்சுதல் முற்றாகச் செயலிழந்துள்ளது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் விவசாய உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தமைக்கு இன்னொரு காரணம் புலிகளின் ஆட்சிக்காலத்தில் புலிகளே மக்களிடம் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனவு செய்வதில் ஈடுபட்டு வந்தமையே. யாழ்ப்பாண உற்பத்திகளை கிளிநொச்சியிலும் கிளிநொச்சியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை யாழ்ப்பாணத்திலும் புலிகள் விற்பனை செய்து வந்தனர். அத்துடன் கிராமங்கள் தோறும் விவசாயக்குழுக்களை நிறுவியதுடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்பவற்றின் ஊடாக விவசாயிகளை ஊக்குவித்தும் வந்தனர். 1995 - 1998 காலப் பகுதிக்கான விவசாய உற்பத்தி அட்டவனை கீழே தரப்பட்டுள்ளது.

| உற்பத்திப் பொருட்கள் | 1995 | | 1998 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி செய்யப்பட்ட அளவு ஹெக்டரில் | உற்பத்தி மெ.தொன் | உற்பத்தி செய்யப்பட்டஅளவு ஹெக்டரில் | உற்பத்தி மெ.தொ. |
| நெல் | 10400 | 21105 | 8114 | 13300 |
| மிளகாய் | 617 | 487 | 459 | 565 |
| வெங்காயம் | 1764 | 20691 | 1207 | 15494 |
| ப.வெங்காயம் | 28 | 174 | 31 | 238 |
| குரக்கன் | 156 | 239 | 149 | 223 |
| பயறு | 240 | 219 | 176 | 149 |
| கௌபி | 293 | 293 | 88 | 74 |
| எள்ளு | 563 | 204 | 321 | 64 |
| உ.கிழங்கு | 180 | 2000 | 75 | 970 |
| வற்றாளை | 72 | 1080 | 6 | 75 |
| மரவள்ளி | 674 | 9760 | 563 | 12880 |
| புகையிலை | 265 | 1590 | 361 | 1805 |
| உழுந்து | 83 | 75 | 40 | 32 |
| சோளம் | - | 11 | 33 | 33 |
| நிலக்கடலை | 66 | 75 | 61 | 61 |
| ஏனையவை | 145 | 1740 | 158 | 2370 |
| மரக்கறி | 1628 | 24810 | 1351 | 17122 |

## சமாதான...

பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான கண்ணப்பன் சண்முகலிங்கம் எனும் 26 வயது இளைஞர் வந்தாறுமூலை பல்கலைக் கழகத்துக்கு முன்னால் உள்ள பாதையில் டிரக்டர் ஒன்றில் ஏற்றப்பட்ட நிலையில், பல பெண்கள் கூடி ஒப்பாரி வைத்து புலம்பியதை சரிநிகர் அங்கு சென்றிருந்த வேளை பார்க்க நேரிட்டது. இதன் போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களில் ஒன்றே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ்விளைஞரின் உடலில் நெஞ்சுப் பகுதி பல தோட்டாக்களால் துளைக்கப்பட்டபடி இருந்தது.

மேலும், காயமடைந்தவர்களில் இன்னுமொருவரான கந்தையா சொர்ணம்மா (30 வயது) வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது உயிரிழந்தார்.

கந்தையா நாகராசா (44) கந்தையா தங்கம்மா (37) ஆகிய தம்பதியினரும், தில்லையம்பலம் கோவிந்தராஜா (25) என்ற இளைஞரும் இத்துப்பாக்கிச் சூட்டில் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிரானில் வைத்து சரிநிகருக்கு கருத்து தெரிவித்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் தாங்கள் தான் இதனைச் செய்ததாகவும், புலிகள் தாக்கி விடுவார்கள் என்ற முன்னெச்சரிக்கையில் அப்படிக் கண்டபடி தாக்க நேரிடுவது சகஜமானது என்றும் மிகவும் அலட்சியமாக கருத்து வெளியிட்டார். 'பொதுமக்கள் பாதிக்கப்படாமல்' பயங்கரவாதத்திற்கெதிராக மட்டும்' யுத்தம் நடாத்தும் அரசாங்கத்தின் சமாதான யுத்தத்தின் இலட்சணம் இது தான்போலும்!

சமாதான யுத்தத்தின் பயங்கரவாதிகளான இன்னும் எத்தனை விவசாயிகள் இப்படிக் களப்பலியாகப் போகிறார்களோ?

## வயல்களை....

முதல் ஆளாக வந்து பாவையிட்டு உதவிகள் வழங்கும் லீட்ஸ் நிறுவனத்தையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

புதிதாக வந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதற்கான நடவடிக்கைகளில் பிரதேசச் செயலகம் ஈடுபட்டுள்ளது. உதவி புரிபவர்களை நன்றியுடன் பாராட்டும் இம்மக்களின் அடிமனதில், சொந்த இடங்களில் குடியேறி சொந்த உழைப்பில் தலைநிமிர்ந்து வாழ முடியவில்லையே என்ற ஏக்கம் இல்லாமலா இருக்கும்?

அரசு உணர்வதெப்போது? அகதி நிலை மறைவது எப்போது?

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் . இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு : பிறின்ற் இன், இல. 07, கெசட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 06.07. 1999